**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 125-11-2016 Issued : 25-11-2016

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஜூலை 28, 2016—தொகுதி 5—எண் 2**

**Thursday, the 28th July 2016—Volume 5—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**28–7–2016**

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*

**1. தகவல் கோரல்—**

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 163-166

திரு. மு.க. ஸ்டாலின் 163

* திரு. கே.ஏ.எம். முஹம்மது ஆபூபக்கர் 164

திரு. டி. செங்குட்டுவன் 165

திரு. கரி. இராமசாமி 166

(ஆ) 27–7–2016 அன்றைய பேரவை நடவடிக்கைக் குறிப்பில் சில பகுதிகளை நீக்குதல் குறித்து 164

* திரு. அர. சக்கரபாணி 164

(இ) தேனி மாவட்டம், வருசநாடு, கடமலைக்குண்டு மலைப் பகுதி ஆதிவாசி பெண்கள்மீது வனத் துறையினர் நடவடிக்கை குறித்து 165-168

திரு. எஸ். ஆஸ்டின் 165, 167

* மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் 166-168

பக்கங்கள்


**2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்**—*தொடர்ச்சி* 168-321

*திரு. பி.கே. சேகர்பாபு* 168-171, 173-176, 179-182, 189-194, 197, 205-207, 212, 214

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 170-171, 178-180, 185-186, 194, 200-204, 207-213, 215, 238, 255-257, 280, 282-283, 285-286, 294-298, 300, 303, 317-318,320

*மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்* 172-174

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்* 175, 187, 190-191

*மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்* 176-177, 182-183, 192, 236-237

*மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்* 177-178

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி* 180-181

*மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி* 183-185

*மாண்புமிகு திரு. பி. தங்கமணி* 186, 257, 280-281




பக்கங்கள்


**2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்**—*தொடர்ச்சி*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்* 187-189, 237-238, 250-251, 298-299, 308

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்* 194-197

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ* 198-199, 205, 243-246, 248, 291-294

*திரு. மு.க. ஸ்டாலின்* 199, 307-309

**திரு. துரைமுருகன்* 204-205, 275-291, 295-298, 300-301, 303-306, 310-313, 315-321

*திரு. இரா. குமரகுரு* 206, 213, 215-229

**திரு. எம். தமிமுன் அன்சாரி* 229-235

*திரு. கரி. இராமசாமி* 235-236, 238-243, 245, 248, 251, 254-259

*மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்* 239-241, 267

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்* 242-243, 246-247

*மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு* 248-249

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்* 252-254, 258-259

பக்கங்கள்

**2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்**—தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி 259-260

*திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் 260-267

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் 267-274

முனைவர் க. பொன்முடி 312

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 319

**3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 321

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, ஆடி 13, திருவள்ளுவர் ஆண்டு – 2047

## 2016 ஜூலை 28, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்."

செய்யக்கூடிய வகையால், செல்லும் இடங்களில் எல்லாம் எக்காரணத்தாலும் இடைவிடாது, அறச் செயலை போற்றிச் செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெயில் நிறுவனம் குழாய்கள் பதிக்கும் பிரச்சினை சம்பந்தமாக தங்களிடம் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன். அதேபோல, சேலம் இரும்பாலை பிரச்சினை சம்பந்தமாக இந்த அவையில் பேச வேண்டுமென்று இன்று காலையிலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். எனவே, அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்ற வகையில் அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[2016 ஜூலை 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் கொடுத்திருக்கிற கெயில் நிறுவனம் குழாய்கள் பதிக்கும் பிரச்சினை சம்பந்தமாக துறையிடமிருந்து பதில் கேட்டிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். சேலம் இரும்பாலை பிரச்சினைக் குறித்த தீர்மானத்தை இன்று காலையில் 9-40 மணிக்குத்தான் என்னிடம் கொண்டுவந்து கொடுத்துள்ளீர்கள். அதற்கும் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன்.*

### (ஆ) 27-7-2016 அன்றைய பேரவை நடவடிக்கைக் குறிப்பில் சில பகுதிகளை நீக்குதல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற சமயத்திலே, தங்களுடைய தீர்ப்பை அவைக் குறிப்பைப் படித்துவிட்டு வழங்குவதாகச் சொன்னீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான்தான் தீர்ப்பு சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேனே! அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) தீர்ப்பைச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன், பேசாமல் இருங்கள்.*

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–
*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே பெண்கள் எளிதாக உயர் கல்வி பெற முன்னுரிமை அளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடையநல்லூரிலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான அரசுக் கல்லூரியை ஊருக்கு வெளியே, வனப் பகுதிக்கு மாற்றுவதைத் தவிர்த்து, நகர எல்லையிலே இருக்கும் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கூட வளாகத்திலேயே அமைத்து, பெண்கள் எளிதாக உயர் கல்வி பெற அரசு உதவிட மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனிக் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*



2016 ஜூலை 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் இன்று காலையில் 9-40 மணிக்குத்தான் என்னிடம் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். அது கவன ஈர்ப்புதான். அதைத் துறைக்கு அனுப்பிவிட்டு, பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள்.*

### (இ) தேனி மாவட்டம், வருசநாடு, கடமலைக்குண்டு மலைப் பகுதி ஆதிவாசி பெண்கள்மீது வனத் துறையினர் நடவடிக்கை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், என்ன சொல்லுங்கள்.*

**திரு. எஸ். ஆஸ்டின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருசநாடு மலை கிராமப் பகுதிகளிலே இருக்கும் ஆதிவாசி பெண்களை வனத் துறை அதிகாரிகள் ** விவாதிப்பது குறித்து ஏற்கெனவே தங்களிடம் நான் கொடுத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ** என்று குறிப்பிட்ட வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மற்ற விஷயம் பற்றிப் பேசுங்கள். தேவையில்லாததைப் பற்றிப் பேச வேண்டாம்.*

**திரு. எஸ். ஆஸ்டின்:** *இதுகுறித்து தங்களிடம் ஏற்கெனவே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது என்னவென்று பார்க்கிறேன்.*

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–
*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. டி. செங்குட்டுவன், என்ன? சொல்லுங்கள்.*

**திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் மையப் பகுதியில் ஓடக்கூடிய தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே வாணிகுண்டு என்கிற இடத்திலே தடுப்பணைக் கட்டி, வலது, இடதுபுற கால்வாய்களை வெட்டி, காய்ந்துப் போயிருக்கிற ஏரிகளுக்கு எல்லாம் தண்ணீர் வழங்க வேண்டுமென்று கோரி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தந்திருக்கிறேன்.*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2016 ஜூலை 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள கூர்நோக்கு இல்லத்திலிருந்து சிறார்கள் வெளியே சென்றது சம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அதனுடைய நிலையை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) எடுத்துக்கொள்கிறேன். 2016-2017 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள். (குறுக்கீடு)

### (இ) தேனி மாவட்டம், வருசநாடு, கடமலைக்குண்டு மலைப் பகுதி ஆதிவாசி பெண்கள்மீது வனத் துறையினர் நடவடிக்கை குறித்து—தொடர்ச்சி

*__மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் மலைவாழ் மக்களைப் பற்றி, வனத் துறைப் பற்றி பேசினார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், உங்களிடம் அதற்குப் பதில் இருக்கிறதா? சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் கேட்டார், என்னிடம் பதில் தயாராக இருக்கிறது, சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தகவல் கோரல் என்ற முறையில் பின்னர் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) பதில் பிறகு கொடுக்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லுங்கள் (குறுக்கீடு) இருங்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் பிரச்சினையை ஆரம்பிக்கிறீர்கள், உட்காருங்கள். நான் ஒவ்வொன்றாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும். நீங்கள் சொல்கிற மாதிரி என்னால் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) இந்த மாதிரி பேசுவது



2016 ஜூலை 28] [பேரவைத் தலைவர்]

முறையல்ல. (குறுக்கீடு) நான் வேறு மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

முற்பகல் 10-05

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வருசநாடு அருகில் உள்ள கடமலை குண்டு பகுதியிலே, பளியர் இனத்தைச் சேர்ந்த ஆதிவாசிகள் வசித்து வருகின்றார்கள். அவர்கள் மேற்குத் தொடர்ச்சி மலையிலே தேன் எடுத்து, அதை ஊருக்குள் விற்று பிழைப்பு நடத்தி வருகின்றார்கள். 10 நாட்களுக்கு முன்பு சின்ன சுருளி அருவி அருகேயுள்ள வனப் பகுதியிலே தேன் எடுத்துவிட்டு திரும்பிக் கொண்டிருக்கையிலே, அங்கு வந்த வனத் துறை அதிகாரிகள் அவர்களை தடுத்து நிறுத்தி சோதனை என்ற பெயரிலே ** செய்திகள் வந்துள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின், நான்தான் முன்னதாகவே ** அந்த மாதிரியான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று சொன்னேனே! அதே வார்த்தையை மீண்டும் பயன்படுத்தினால் எப்படி? அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நான் சொன்னது உட்பட.

**திரு. எஸ். ஆஸ்டின்:** பெண்களை வனத் துறை அதிகாரிகள் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். நீங்கள் உங்களுக்குக் கொடுக்கும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்துங்கள். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். நீங்கள் கேட்கிற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். உட்காருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வனவாழ் மக்கள் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேண்டாம். அதை விட்டு விடுங்கள். அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2016 ஜூலை 28

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான செய்தியை இங்கே சொல்லியிருக்கிறார். மேகமலை வன உயிரின கோட்டப் பகுதியில் எறும்பு திண்ணியைக் கொன்று அதன் உடலிலிருந்து செதில்களை சுருளிப்பட்டி பகுதியிலே கடத்துவதாக இரகசியத் தகவல் வனத் துறைக்குக் கிடைத்திருக்கிறது. இதனடிப்படையில் வனத் துறை அதிகாரிகள் அங்கே சென்றபொழுது சம்பந்தபட்டவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியதால் அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் அவர்களை விசாரித்து திருப்பி அனுப்பினர். ஆனால், அடுத்த நாள் அங்கிருக்கிற ஆதிவாசிகள் வனச்சரகத்திற்குள்ளே நுழைந்து, தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி வனக்காப்பாளர் மற்றும் வனக் காவலர்களைத் தாக்கியுள்ளார்கள். வனச்சரக அலுவலகத்திலுள்ள* wireless set, mike set *மற்றும்* chair-*களை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். இதில், சுபாஷ் என்ற வனக் காவலருக்குக் காயம் ஏற்பட்டதால் தேனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து, கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, ஆறு பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக, 21 ஆம் தேதி மேகமலை வன உயிரினக் காப்பாளர், வருவாய்த் துறை அதிகாரிகளுடன் விசாரணை மேற்கொண்டதில் கம்பம், வனச்சரக பணியாளர்கள் சோதனை மட்டுமே மேற்கொண்டனர்; வேறு எந்தவிதமான தவறுகளும் அங்கே நடக்கவில்லை என்ற தகவலை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். பருக்கையளவுகூட செருக்கை, தருக்கை இல்லாமல் இங்கே உரிய இருக்கை இல்லாவிட்டாலும், விஸ்வரூபம்*



2016 ஜூலை 28] [திரு. பி.கே. சேகர்பாபு]

*எடுத்த கண்ணபிரானைப் போல் மக்கள் மனதில் நிரந்தர இடத்தைக் கொண்டிருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) 48 ஆண்டுக் காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சித் தலைவராக, தேர்தலில் நின்றபோதெல்லாம் எதிர்த்து நின்றவர்களுக்கு தோல்வியையே பரிசாக வழங்கிக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பாரும், மிக்காருமில்லா கலைஞரை வணங்குகின்றேன். 32 வருவாய் மாவட்டங்கள், 234 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள், 11,200 கிலோ மீட்டர், 4,00,005 மனுக்கள், 300 கூட்ட அரங்குகள், 1½ கோடி மக்களை நேரடியாகச் சந்தித்து, தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு மைல் கல்லை பதித்த, பாசமிகு தளபதி அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் நேரத்தில், (குறுக்கீடுகள்) அது தெரிந்துதான் இங்கே எனக்கு முகவரி கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் பதில் பேசிக்கொள்கிறேன். விட்டுவிடுங்கள். சுந்தர் அண்ணன், நான் பதில் சொல்லிக்கொள்கிறன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. தங்க. தமிழ்ச்செல்வன், உட்காருங்கள்.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** Speaker Sir, *எது பேசினாலும் பதில் சொல்வதற்கு நான் தயாராகயிருக்கிறேன். எழுந்து நின்று பேசட்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. தங்க. தமிழ்ச்செல்வன், உட்காருங்கள். அதில்* point of order *ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. தங்க. தமிழ்ச்செல்வன், உட்காருங்கள் (குறுக்கீடுகள்). அதில்* point of order *வராது. பேசாமல் உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள் பேசும்போது பேசுங்கள்.*

*முற்பகல் 10-10*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்தில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகளே தெரியவில்லை என்று கர்ஜித்தவர்கள் மத்தியில் இந்த 15-வது சட்டமன்றப் பேரவையில் 89 சட்டமன்ற உறுப்பினர்களோடு மிக வலுவான ஓர் எதிர்க் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே அமைவதற்குக் காரணமாக இருந்த ஓய்வறியா உழைப்பாளி, சுறுசுறுப்பின் சுரங்கம், பாசமிகு தளபதியை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தச் சட்டப் பேரவையிலே தாக்கல் செய்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை பாராட்டுரை அறிக்கையாக இருந்தாலும், சில நிதிநிலை விளக்கங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதில், குறிப்பாக இந்த நாட்டினுடைய ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 3.39 சதவிகிதம் என்று 2011-2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தீர்கள். தற்பொழுது வெளியிடப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையிலும் அதே 3.39 சதவிகிதம் என்றுதான் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால், இந்த திருத்திய நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களைக் குறிப்பிடுகின்றபொழுது, சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், பக்கம் 88-ல் 4.85 சதவிகிதம் உற்பத்தி வளர்ச்சியடைந்திருப்பதாகக் கூறியிருக்கின்றார். இது அச்சுப் பிழையா அல்லது நிதி நிலை தயாரித்தவருடைய பிழையா என்பதை நாளைக்கு பதிலுரையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, உட்காருங்கள். மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சுப் பிழையெல்லாம் இல்லை. 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையும் அரசினுடைய ஆவணம்தான். இப்பொழுது நாம் சமர்ப்பித்திருக்கின்ற 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையும் அரசினுடைய ஆவணம்தான். இரண்டும் உண்மைதான். இதில் எந்த வேறுபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** விரிவாகப் போனால் நேரம் செலவாகிவிடும் என்பதால் குறைத்துக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெளிவானவர் என்று இத்தனை நாள் நான் கருதிக்கொண்டிருக்கிறேன். 2011-2012 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள் 3.39 சதவிகிதம் என்று. சமீபத்தில் இடைக்கால நிதிநிலை அறிக்கையிலும் அதே 3.39 சதவிகிதம் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். இப்பொழுது வெளியிட்டிருக்கிற திருத்திய நிதிநிலை அறிக்கை பக்கம் 88-ல் 4.85 சதவிகிதம் என்று குறிப்பிட்டுள்ளதைத்தான் உங்கள்





கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையையும், இப்பொழுது அளித்திருக்கின்ற திருத்திய நிதிநிலை அறிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் கிட்டத்தட்ட ஒவ்வொரு துறைக்கும் இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்ட நிதிக்கும், இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற நிதிக்கும் இடையே 20 சதவிகிதம் அளவு குறைவாக இருக்கின்றது. உதாரணத்திற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்கு நான் விளக்கம் அளித்து விட்டேன். அதாவது, இடைக்கால நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது மத்திய அரசினுடைய வரவு-செலவுத் திட்ட அறிக்கை வெளியிடப்படவில்லை. இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கிறது. அதை base செய்து சில திருத்தங்கள், சில மாற்றங்கள் இருக்கின்றன என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்துவிட்டேன். இதைப் பெரிய குறையாக திரு. சேகர்பாபு சொல்லிக் கொண்டிருக்கிறார். வேறு ஏதாவது நல்ல பாயின்ட் இருந்தால், சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.கே. சேகர்பாபு:** இருப்பதிலேயே நல்ல பாயின்ட். ஆண்டுக்காண்டு நிதி ஒதுக்கீடு கூடினால்தான் சம்பந்தப்பட்ட துறையினுடைய வளர்ச்சி மேலோங்கும் என்ற அடிப்படையில்தான் இடைக்கால நிதிநிலை அறிக்கையிலும், நிதிநிலை அறிக்கையிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. போக்குவரத்துத் துறையை எடுத்துக்கொண்டால், நீங்கள் ரூ.1,590 கோடி என்று இடைக்கால நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 1,895 கோடி என்று ஒதுக்கியிருக்கிறீர்கள். சமீபத்தில்கூட போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குப் பணி ஓய்வு பெற்ற பிறகு, கிடைக்க வேண்டிய பணப் பயன்கள் ஆண்டாண்டுக் காலமாகக் கிடைக்கவில்லை என்று பல்லவன் சாலையிலுள்ள போக்குவரத்து அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தியதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாக்கம் என்ற ஒரு திட்டப் பகுதி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய ஓய்வூதியம் மற்றும் பணப் பலன்கள் நிலுவையில் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு எடுத்துரைத்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மட்டும் வழங்கப்பட்டுள்ள ஓய்வூதியத் தொகை 1,446 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட தொகை 926.86 கோடி ரூபாயாகும். அதேபோல் தி.மு.க. ஆட்சியிலே நிலுவையாக வைத்துச் சென்ற தொகை 922.24 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையை நிலுவை எதுவும் இல்லாமல் வழங்கி விட்டதுபோல ஒரு கருத்தை இங்கே தெரிவித்துக்கொண்டிருக்கிறார். ஆனால், 922.24 கோடி ரூபாயை நிலுவையில் வைத்துச் சென்ற அரசு, தி.மு.க. அரசு என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதுமட்டுமல்ல, தொழிலாளர்களுடைய ஊதிய உயர்வு காரணமாகவும், ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததன் காரணமாகவும்தான், இன்று போக்குவரத்துத் துறையில் இருக்கக்கூடிய தொழிலாளர்களின் ஓய்வூதியத் தொகை நிலுவையில் இருக்கின்றது. (குறுக்கீடு) அதைச் சொல்கிறார், இல்லையென்று சொல்லவில்லை. 922 கோடி ரூபாயை நிலுவையில் வைத்து விட்டுச் சென்றவர்கள் யார் என்பதை நீங்கள் இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துத் துறையை முடக்கிய அரசு, தி.மு.க. அரசு என்பதற்கான சான்றுகள் இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், (குறுக்கீடு) புள்ளி விவரத்தை நான் தருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் பேசுவார், (குறுக்கீடு) திரு. கே.என். நேரு, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்*



*திரு. சேகர்பாபு பேசிக்கொண்டிருக்கிறார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு, அவர் பதில் சொல்வார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3,600 கோடி ரூபாய்க்கு அதிகமாக நிதியை வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு, பேசத் தொடங்கியபோது, நான் பதில் சொல்லிக்கொள்கிறேன் என்றார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தெரிவித்ததற்கு திரு. சேகர்பாபு பதில் சொல்லிக்கொள்வார். உறுப்பினர் திரு. கே.என். நேரு, இப்போது நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், திரு. பி.கே. சேகர்பாபு, சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைக் கொடுங்கள். ஓய்வூதியத் திட்டத்தை முதன் முதலில் கொண்டு வந்த தலைவர், ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தலைவர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வூதியப் பயன்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கே வெளிச்சம் என்பதைத் தெரிவித்து, நான் அடுத்த சப்ஜெக்ட்டிற்குப் போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் இல்லாத காலத்திலேயே, சேம நல நிதியைக் கொண்டு வந்து, அவர்களுக்கு ஓய்வூதியப் பலன்களை வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த ஓய்வூதியத்*

திட்டத்திற்கு "அம்மா பென்ஷன் திட்டம்" என பெயரே இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வீடு அற்றவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டுகின்ற திட்டத்தைக் கொண்டு வந்த தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் பெரும்பாக்கத்தில் 2007 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு, முதற் கட்டமாக குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 10,000 குடியிருப்புகளை உருவாக்கும் நோக்கத்தோடு திட்டமிடப்பட்டு, அந்தப் பணி 2011 ஆம் ஆண்டு முழுமை அடைந்தது. மேற்கொண்டு அந்தப் பகுதிலேயே 20,000 குடிசை மாற்று வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டிருந்தது. ஒப்புந்தப்புள்ளிகள் கோரப்பட்ட நிலையில், தேர்தல் அறிவிக்கப்பட்டபடியால், அந்த ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்வதற்குத் தடங்கல் எற்பட்டது. அதன் பிறகு, ஆட்சி பொறுப்பேற்ற நீங்கள் அந்த 20,000 வீடுகளில், 15,000 வீடுகளைக் கட்டி முடித்திருக்கிறீர்கள்.

முற்பகல் 10-20

30 ஆயிரம் வீடுகளில் 25 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்ட இந்த 25 ஆயிரம் வீடுகளில், இதுவரையில் ஒருவர்கூடக் குடியேறவில்லை என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும், இதைக் கூறுவதற்குக் காரணம் என்னவெனில், காலைக் கடன்களைக்கூட மறைவிடங்களில் சென்று கழிக்கமுடியாமல், பக்கிங்காம் கால்வாய் ஓரங்களிலும், கூவம் கரையின் ஓரங்களிலும், சாலையின் ஓரங்களிலும் குடியிருக்கும், என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த துறைமுகம் சட்டமன்ற தொகுதியைச் சார்ந்த மக்களுக்கு, இந்த வீடுகளை ஒதுக்கீடு செய்கின்றபோது, முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) உண்மைதான், நான் சொல்வது ஒன்றும் தவறான தகவல் அல்ல. என் தொகுதி மக்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்து கொடுங்கள் என்று கேட்கின்றேன். அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் மனங்களில் இடம்பிடித்த எங்கள் இதய தெய்வம், அகிலம் போற்றும் அன்பு தெய்வம், அதுவே எங்கள் அம்மா என்கின்ற அற்புதத் தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) தாயின் திருவடிகளை வணங்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் தெரிவித்த சில கருத்துகளுக்கு சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் என்கிற வகையில் சில விவரங்களை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், "பெரும்பாக்கம் பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளில் ஒருவரும் குடியேறவில்லை" என்கின்ற கருத்தை இங்கே பதிவு செய்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், குடிசை மாற்று வாரியம்மூலம் பல்வேறு பகுதிகளில் ஏறத்தாழ 59,023 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, அதிலே 5,011 வீடுகள் தவிர மற்றவற்றில் குடியேறியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், "பெரும்பாக்கத்தில் கட்டப்பட்ட வீடுகளில் ஒருவர்கூட குடியேறவில்லை" என்று சொல்லியிருக்கின்றார். பெரும்பாக்கத்தில், ஏறத்தாழ 3,400 பேர் எழில் நகரில் குடியேறியிருக்கின்றார்கள்; பெரும்பாக்கம், பகுதி-1-ல் 802 பேர் குடியேறியிருக்கின்றார்கள்; ஒரகடம் பகுதி, நாவலூரில் 2,048 பேர் குடியேறியிருக்கிறார்கள்; அகில இந்திய வானொலி நிலையம் பகுதியில் 176 பேர் குடியேறியிருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எழில் நகர், ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 5,596 பேர்களுக்கு குடியிருப்புகளை வழங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2016 ஜூலை 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4,000 பேருக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், ஒருவர்கூட அங்கு குடியமர்த்தப்படவில்லை. அவ்வாறு குடியமர்த்தப்பட்டிருந்தால், சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற வகையில் அதற்கு முழுப் பொறுப்பும் ஏற்றுக்கொள்ள நான் தயார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், தற்போதைய 2016-2017 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, பக்கம் 50-ல், 10 இலட்சம் வீடுகள் கட்டித் தருவதாக தெரிவித்திருக்கின்றார்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக 593 அரசுப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில், குறிப்பாக, சென்னையில், அரசு நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் என 29 அரசுப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்த 29 அரசுப் பள்ளிகளும், சமீபத்தில் ஏற்பட்ட பெருமழை வெள்ள பாதிப்பின்போது, முழுமையாக மூழ்கிக் கிடந்த காட்சியை மனமுள்ளவர்கள் யாரும் மறுக்க முடியாது. மூழ்கி பாதிப்படைந்த அந்தப் பள்ளிகளுக்கு, வெள்ள நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து சல்லிக்காசுக்கூட ஒதுக்கப்படவில்லை என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அப்படி நிதி ஒதுக்கியிருந்தால், அதற்கு நான் பொறுப்பேற்கத் தயாராயிருக்கின்றேன். நிதி ஒதுக்கவில்லை, அதுதான் உண்மை. மாண்புமிகு அமைச்சர்கள் ஏதாவது பதில் சொல்லி, திட்டங்கள் நடைபெறுவதாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், பொத்தாம்பொதுவாக ஒரு தவறான கருத்தை இந்த

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2016 ஜூலை 28] [திரு. பா. பென்ஜமின்]

அவையில் பதிவு செய்து கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, என்றென்றைக்கும் ஆசிரியர்கள் நலனிலும், மாணவர்கள் நலனிலும் அக்கறை கொண்டுள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ள நிவாரண நிதி ஒதுக்கீடு பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலையோடு தெரிவித்தார்கள். வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்காக ஆறு அரசாணைகள் மூலமாக ரூபாய் 3,039 கோடியைத் தாயுள்ளத்தோடு வழங்கிய தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசாணை எண் முதற்கொண்டு நான் தெரிவிக்கிறேன். அரசாணை எண் 403-ல் ரூபாய் 500 கோடியும், அரசாணை எண் 431-ல் ரூபாய் 300 கோடியும், அரசாணை எண் 430-ல் ஆயிரம் கோடியும், அரசாணை எண் 15-ல் ரூபாய் 500 கோடியும், அரசாணை எண் 25-ல் ரூபாய் 340 கோடியும், அரசாணை எண் 84-ல் ரூபாய் 398 கோடியையும் ஒதுக்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

துறை வாரியாக விவரங்கள் வேண்டுமானாலும்கூட நான் சொல்கிறேன். விவசாயத் துறைக்கு ரூபாய் 460 கோடியும், கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூபாய் 22 கோடியும், மீன் வளத் துறைக்கு ரூபாய் 24 கோடியும், நெடுஞ்சாலைத் துறைக்கு ரூபாய் 180 கோடியும், சென்னை மாநகராட்சிக்கு ரூபாய் 310 கோடியும், நகராட்சி நிருவாகத்திற்கு ரூபாய் 82 கோடியும், பேரூராட்சி நிருவாகத் துறைக்கு ரூபாய் 5 கோடியும், சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு ரூபாய் 20 கோடியும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூபாய் 2 கோடியும், மின் பகிர்மானக் கழகத்திற்கு ரூபாய் 50 கோடியும், பொதுப் பணித் துறைக்கு ரூபாய் 50 கோடியும், ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சித் துறைக்கு ரூபாய் 30 கோடியும், கைத்தறித் துறைக்கு ரூபாய் 78 கோடியும், சமூக நலத் துறைக்கு ரூபாய் 1 கோடியும், கதர் கிராமத் துறைக்கு ரூபாய் 0.57 இலட்சமும், போக்குவரத்துத் துறைக்கு ரூபாய் 1.59 கோடியும், ஆவின் நிறுவனத்திற்கு ரூபாய்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2016 ஜூலை 28

*17.66 கோடியும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ரூபாய் 62.98 கோடியும் என மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெள்ள நிவாரணப் பணிகளுக்குகென்று (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரண நிதிகளை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*மஞ்சள் காமாலை வந்தவர்களுக்கு பார்ப்பதெல்லாம் மஞ்சளாகத்தான் தெரியும் என்பதைப்போல அவர்கள் குற்றம் காண்பதிலேயேதான் கவனம் செலுத்துகிறார்கள். அரசாணைகள்மூலம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆதாரத்தோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் 10 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொன்னீர்களே, (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்கிறேன். 10 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொன்னீர்களே அதற்குரிய வழிவகைகள் ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்று இங்கே ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். இவர் நிதிநிலை அறிக்கையை சரியாகப் படிக்கவில்லையென்றுதான் நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களின்கீழ், அடுத்த ஐந்தாண்டுகளில் 10 இலட்சம் வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். சொல்லப்பட்டதனை வழி நடத்துகின்ற விதமாக வீடுகளுக்கான நிதி ஒதுக்கீடு ஒரே சீராக இருக்க வேண்டுமென்ற நோக்கில் மத்திய அரசு குறைவான நிதியைத் தந்தாலும், கூரை அமைப்பதற்காக* matching grant-*ஆக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 50 ஆயிரம் ரூபாயைக் கூடுதலாக, தாயுள்ளத்தோடு வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து வீடுகளுக்குமான மதிப்பீட்டுத் தொகையை, வீடு*



2016 ஜூலை 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*ஒன்றிற்கு 1.70 இலட்சம் ரூபாயாக பெருந்தன்மையோடு உயர்த்தியுள்ளார்கள். எனவே, இந்தத் திட்டத்தின்கீழ் கிராமப் பகுதிகளில் ரூ.3,095.62 கோடி செலவில் 1 இலட்சத்து, 77 ஆயிரத்து 619 வீடுகளை—நன்றாக கேளுங்கள் திரு. சேகர்பாபு அங்கேயும் இங்கேயும் வேடிக்கைப் பார்க்காதீர்கள்—2016-2017 ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கட்டும். 1 இலட்சத்து 77 ஆயிரத்து 619 வீடுகளை இந்த நிதியாண்டிலேயே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கட்டும் என்பதனை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே ரூபாய் 1,908.47 கோடி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பங்காக இருக்கும். பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்த்தப்படுவதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு சூரிய ஒளி மின் வசதியைக் கொண்ட பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 2016-2017 ஆம் ஆண்டில் ரூபாய் 420 கோடி செலவில் 20 ஆயிரம் வீடுகளையும் கட்டும் என்பதனை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ஐந்து ஆண்டுகளில் திரு. சேகர்பாபு பொறுமையாக இருக்க வேண்டும். பொறுமையாக இருந்து முடித்தீர்கள் என்றால் உறுதியாக மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதைச் செய்வார்கள், நிரூபித்துக் காண்பிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு பேசுங்கள்.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *ஏற்கெனவே ஐந்தாண்டுகள் பொறுமையாக இருந்து ** (மேசையைத் தட்டும் ஒலி) வேண்டுமென்றால் மீண்டும் பொறுமையாக இருந்து பார்க்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2016 ஜூலை 28

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு, தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆதாரம் இருந்தால், அதை அவைக் குறிப்பில் ஏற்றலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். (குறுக்கீடு)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** ** *இதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். இல்லையென்றால், நீக்குங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்வது முக்கியமில்லை. (குறுக்கீடு)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் ஆதாரமில்லாமல் பேச வேண்டாம். அது, அவைக் குறிப்பில் ஏறாது, நீக்கப்படுகிறது. வேறு பொருள் குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, வீடு கட்டும் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்திலே இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்மூலம் 4,41,637 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் பெயர்தான் மத்திய அரசாங்கத்திற்குரியது. ஆனால், இத்திட்டத்திற்கு நிதி கொடுப்பது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, மாண்புமிகு அம்மா அவர்கள் அதிகமாக நிதி கொடுக்கின்றார்கள். இப்போதும்கூட, பிரதம மந்திரி*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



2016 ஜூலை 28] [திரு. எஸ். பி. வேலுமணி]

*வீட்டுவசதித் திட்டத்தில் ரூபாய் 72,000/-தான் அவர்கள் கொடுக்கிறார்கள்; ரூபாய் 98,000/- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல அற்புதமான பசுமை வீடுகள் திட்டம். கிராமத்திற்கு அவர் போயிருந்தால் தெரிந்திருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய படம் வீட்டின் முன்பே பொறிக்கப்பட்டு, சோலார் மின் வசதியுடன்கூடிய வீடுகள் அற்புதமாக 300 சதுர அடியில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 3 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் "தானே புயல்" வீடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் வீடுகள், நான் ஊராட்சித் துறையில் மட்டும் சொல்கிறேன். இதில், 8,41,637 வீடுகள் ஊராட்சித் துறையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதுதவிர, உள்ளாட்சித் துறையில், நகராட்சிக்குட்பட்ட* P.U.C.P. *வீடுகள் கட்டும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்திருக்கிறது. இத்திட்டத்திலும் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த நிதியையும் சேர்த்து நிறைய வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. குடிசை மாற்று வாரியம் மற்றும் வீட்டு வசதி வாரியம் மூலமாகவும் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. தவறான புள்ளிவிவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, நீங்கள் பேசுங்கள்.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், "ஒரு பள்ளிக்கூடம் திறக்கப்படுகின்றபோது 100 சிறைச்சாலைகள் மூடப்படும்" என்றார். நான் அரசுப் பள்ளிகளின்மீது அக்கறை கொண்டு பேசுவதற்குக் காரணம், நாட்டிலே வளர்ச்சி சதவிகிதம், உற்பத்தி சதவிகிதம் பெருக வேண்டுமென்றால், அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான். அரசுப் பள்ளிகளில் 600 தலைமையாசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. மாவட்டக் கல்வி அலுவலர் எனப்படுகின்ற* D.E.O.-*க்கள் பதவிகள் 60 காலியாக இருக்கின்றன. அந்த 60 பதவிகளுக்கும் தலைமையாசிரியர்களே பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒருவரே இரண்டு பதவிகளை*

வகிப்பதால், மாணவர்களுடைய கல்வித் தரம் உயர்வதற்கான சூழ்நிலை இன்றைக்கு இல்லை. "ஓராண்டு பலன் வேண்டுமா, நெல்லை நடுங்கள், பத்தாண்டு பலன் வேண்டுமா, மரத்தை நடுங்கள், நூறாண்டு பலன் வேண்டுமா, கல்வியைத் தாருங்கள்" என்று சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்திய திருநாட்டிற்கே முன்னோடி மாநிலமாகத் தமிழகத்தைத் திகழச் செய்வதிலே (குறுக்கீடுகள்) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஐந்தாண்டுகளில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் ஒரு நிமிடம், இருங்கள். திரு. சேகர்பாபு, கேள்விக் கேட்டார், அதற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) உட்கார்ந்துகொண்டே எல்லோரும் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) அதற்குத்தான், இப்போது மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வருகிறார். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வரும்போது, உட்கார்ந்துகொண்டே பேசினால் எப்படி? மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை உட்காரச் சொன்னேன், அதனால் அவர் உட்கார்ந்தார். இப்போது, அவர் பேசுவார்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்திய திருநாட்டிற்கே முன்னோடி மாநிலமாகத் தமிழகத்தைத் திகழச் செய்தவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வித் துறைக்காக கடந்த ஐந்தாண்டுகளில் 86,193 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வருகிறார், விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.



முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையில் மிகப் பெரிய கல்விப் புரட்சியை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** அந்த வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பள்ளிக் கல்வித் துறையில் உள்ள அனைத்து ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்புவதற்குத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஒரே நாளில் 20,920 ஆசிரியர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 74,316 ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைமையாசிரியர் பற்றாக்குறையைப்பற்றி இங்கே எடுத்துரைத்திருக்கின்றார்கள். கடந்த 2011-லே மாண்புமிகு புரட்சித் தலைவி. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லும்போது கேள்வி கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்தான் கேள்வி கேட்கிறார். கேட்கிற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். பதில் சொல்லும்போது, அதைப் பொறுமையாக இருந்து கேட்கிற மனப்பக்குவம் ஏன் உங்களுக்கு வரவில்லை? இது தவறான முன்னுதாரணம். அமைதியாக இருங்கள். மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது ஆசிரியர்கள் பற்றாக்குறை 55,000. கடந்த தி.மு.க. ஆட்சியில் விட்டுவிட்டுச் சென்றது 55,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை என்ற நிலை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே 79,000 ஆசிரியர்களைப் புதிதாக நியமிப்பதற்கு உத்தரவு வழங்கினார்கள். கடந்த ஐந்தாண்டுகளிலே 74,316 ஆசிரியர்கள் புதியதாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதனடிப்படையிலே ஆசிரியர் பற்றாக்குறை என்ற நிலை இன்றைக்குத் தமிழகத்தில் இல்லை. ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் குறித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நேற்று அழகாக எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு ஆசிரியர்கள், மாணவர்களுடைய விகிதாச்சாரம் தேசிய அளவுகோலில், தொடக்கக் கல்வியில் 30 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை இருந்தாலும், தமிழகத்தில் 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையிலும், நடுநிலைக் கல்வியில் 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை இருந்தாலும், இங்கே 24 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் பள்ளிக் கல்வித் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, தேசிய அளவுகோலின்படி உயர்நிலைக் கல்வியில் 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை இருந்தாலும், இங்கு 26 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் எனவும், மேல்நிலைக் கல்வியில் 45 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை இருந்தாலும், இங்கு 37 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் எனவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கல்வித் துறை இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, தலைமையாசிரியர்கள் பற்றாக்குறை. காலியிடங்களைப் பதவி உயர்வுமூலம் நிரப்புவதற்காக counselling-ஐ தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்; தேதி குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பதவி உயர்வின்மூலம் தலைமையாசிரியர் காலிப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட இருக்கின்றன. ஆரம்பக் கட்ட கலந்தாய்வு —counselling— நடந்தவுடனேயே அந்த காலிப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டுவிடும் என்பதை மாண்புமிகு



உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள், இங்கே கல்வித் துறையைப்பற்றி சில பல கேள்விகளை, ஐயப்பாடுகளை எழுப்பியிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த ஐந்தாண்டுக்கால பொற்கால ஆட்சியில்தான் கல்வித் துறையிலே தமிழகம், இந்தியாவிலேயே முதல் மாநிலம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பெயரினை எடுத்திருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஐந்தாண்டுக்கால நல்லாட்சியில் உயர் கல்வித் துறைக்கு 14,243 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக் கல்வித் துறைக்கு 84,941 கோடி ரூபாய் என ஆக மொத்தம் கல்வித் துறைக்காக மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஐந்தாண்டுக்கால பொற்கால ஆட்சியில் 99,184 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அளவு நிதி இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் ஒதுக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-40

ஒரு மாநிலத்தின், ஓர் ஆண்டினுடைய வருமானம், இலக்கு பல்வேறு வகைகளில் நிர்ணயிக்கப்பட்டாலும் ரூ.70 ஆயிரம் கோடி, ரூ.80 ஆயிரம் கோடி, ரூ.90 ஆயிரம் கோடி என்றுதான் வருகிறது. ஓர் ஆண்டினுடைய முழு வருமானத்தையும் கல்வித் துறைக்காக ஒதுக்கிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆரம்பக் கல்வியினுடைய பள்ளிச் சேர்க்கை விகிதாச்சாரம் கூடியிருக்கிறது. இடைநிலைக் கல்வியினுடைய பள்ளிச் சேர்க்கை விகிதாச்சாரம் கூடியிருக்கிறது. நடுநிலைப் பள்ளியினுடைய சேர்க்கை விகிதாச்சாரம் கூடியிருக்கிறது. உயர் கல்வி படிக்கின்ற மாணவர்களுடைய விகிதாச்சாரமும் தமிழகத்திலே கூடியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதோடு மட்டுமல்லாமல், மாணவர்களுடைய தேர்ச்சி விகிதம் இன்றைக்கு இந்தியாவிலேயே

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜூலை 28

தமிழ்நாட்டில்தான் அதிகமாகக் கூடியிருக்கிறது என்பதனை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி, கல்வித் துறையின் பொற்கால ஆட்சி என்பதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லியிருப்பதற்கு விளக்கம்தான் சொல்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிவாரணத்தைப் பற்றி இப்போது பேசுகின்றபோது சொன்னார்கள். அவர் இங்கே 2010-லே உங்கள் ஆட்சியைப் பற்றி பேசியதை மட்டும் இந்த அவைக் குறிப்பிலிருந்து உங்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னவென்று சொன்னால், “அன்றையதினம் நிஷா புயலின்போது மத்திய அரசு 325 கோடி ரூபாய் தமிழகத்திற்குத் தருவதாக ஒத்துக்கொண்டது. ஆனால், 46 கோடி ரூபாய் மட்டும்தான் தந்திருக்கின்றது. அதை நீங்கள் அச்சிடுகின்றபோதுகூட சரியாக அச்சிடாத ஆட்சிதான் இந்த ஆட்சி என்று சொல்லிவிட்டு, அதற்குப் பின்னால் சொல்லுகின்றார். மாண்புமிகு அம்மா அவர்கள் 13 கடற்கரை மாவட்டங்களை நிஷா புயல் உலுக்கி எடுத்தபோது மத்திய அரசு கொடுக்கிறதோ, இல்லையோ இதோ நான் இருக்கிறேன், தமிழகத்தைக் காக்கின்ற அன்னையாக என்று (மேசையைத் தட்டும் ஒலி) 800 கோடி ரூபாயை நிவாரண நிதியாகக் கொடுத்தார்கள்” என்று பாராட்டியவர்தான் இன்று அணி மாறியதால் பேசுகிறாரேயொழிய, மக்கள் அனைவரும் மாண்புமிகு அம்மா அவர்கள் பக்கம்தான் எப்பொழுதும் இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். இது மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு பேசியது, அவைக் குறிப்பில் இருப்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2016 ஜூலை 28]

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ** என்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 689 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, 41,957 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, ** என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியிலே 1996-2001 ஆம் ஆண்டுகளில் 13,520 வீடுகள் கட்டப்பட்டன. 2006-2011 ஆம் ஆண்டில் 20,802 வீடுகள்தான் கட்டப்பட்டன. ஆகமொத்தம் 10 ஆண்டுகளில் 34,322 வீடுகள்தான் நீங்கள் கட்டியிருக்கிறீர்கள். ** என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, கொஞ்சம் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள், அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் சொன்னதற்குத்தான் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் இந்த அவையில் பல்வேறு தவறான தகவல்களைப் பதிய வைக்க வேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார். அவருக்குப் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் என்ன நினைக்கிறார் என்றால், நேரடியாக கைத்தறித் துறையைப் பற்றி நான் இன்னும் பேசவேயில்லையே, மாண்புமிகு அமைச்சர் ஏன் எழுந்து நிற்கிறார் என்று அவர் சந்தேகப்படுகிறார். அதற்காக அவர் கூச்சலிடுகிறார். அவருக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஏழை மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடிய மக்களுக்குக் கட்டித்தரக்கூடிய முதலமைச்சரின் பசுமை வீடுகளை வீட்டுவசதித் துறை, குடிசை மாற்று வாரியம், உள்ளாட்சித் துறை என பல்வேறு துறைகளின் மூலமாகக் கட்டித் தந்து கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முற்பகல் 10-45

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நெசவாளர்களுக்கு ஒரு வீடுகூட கட்டிக் கொடுப்பதற்கு எண்ணாத நேரத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) முயற்சி எடுக்காத நேரத்தில், நிதி ஒதுக்காத நேரத்தில், கட்டித்தராத சூழ்நிலையில் வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிற, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற அந்த நெசவாளர் பெருமக்களுக்கு 10 ஆயிரம் பசுமை வீடுகளை வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல; எல்லோருக்கும் வழங்கப்படுகின்ற பசுமை வீடுகள் குடியிருப்பதற்கு மட்டுமே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளில், அந்த வீட்டிற்குள்ளேயே நெசவுத் தொழில் செய்வதற்கு ஏதுவாக 100 சதுர அடி மனையைக் கூடுதலாகக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 365 சதுர அடியில் இந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு ஆணையிட்டவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கட்டுமானப் பணிக்காக ரூபாய் 2 இலட்சத்து 60 ஆயிரம் நிதியொதுக்கி வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதோடு, சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கப்படும் மின்சாரம் வழங்கும் அமைப்பையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த வீடுகளுக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு



உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) தி.மு.க. உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பேசட்டும். மற்றவர்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகளுக்குத் தகுந்தாற்போல் உறுப்பினரின் உரிமையைக் கருதி நேரம் ஒதுக்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையைத் தொடருகிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு, நீங்கள் பேச ஆரம்பித்து 40 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) உரையைச் சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) எதற்காக இப்படி எழுந்து நிற்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் கேள்வி கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொன்னேன். நீங்கள் எல்லோரும் எதற்காக எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடு) தேவையில்லாமல் எதற்காக எழுந்து நிற்கிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 ஆண்டுகளுக்கு முன்பு பள்ளி மாணவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கப்படும் என்று அறிவித்தீர்கள். அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது. அதைப்போல, இந்தச் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவிப்புகளைப் பற்றிய ஒரு விசாலமான பதிலை அளித்திருக்கின்றார். நான் கடந்த முறை இந்தச் சட்டமன்றப் பேரவையில் இடம்பெறாவிட்டாலும் அதைப் படித்திருக்கின்றேன். அதில் அறிவிக்கப்பட்ட சில திட்டங்களைத் தவிர பல திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதற்கு ஒரே ஓர் உதாரணத்தைப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். மக்களின் வளர்ச்சித் தேவைக்காக இதைக் குறிப்பிடுகின்றேன்.

கடந்த 8-9-2011 அன்று இந்தச் சட்டமன்றத்தில் விதி 110-ன்கீழ் 2,509 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், சென்னை நந்தனத்தில் 15 மனைகளில் 7 அடுக்குகளைக் கொண்ட வணிக வளாகம், கே.கே. நகரில் 554 வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள், தெற்காசிய

[திரு. பி.கே. சேகர்பாபு] [2016 ஜுலை 28

விளையாட்டு நகரத்தில் 120 வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள் மற்றும் ஐந்து அடுக்குகள் கொண்ட வணிக வளாகம், திருமழிசையில் துணைக்கோள் நகரம்-12,000 வீடுகள் என்று 6 அறிவிப்புகளின்கீழ் வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்திருந்தார்கள். இங்கே பேசுவதற்கு முன்னால் இவற்றையெல்லாம் நான் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டு அங்கு சென்றேன். அங்கே இருப்பவர்களை விசாரித்தபோது, 2011 ஆம் ஆண்டு எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இப்போதும் இருப்பதாகத் தெரிவித்தார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** இப்படியெல்லாம் நீங்கள் விளக்கம் சொல்வது தவறு. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** இருப்பதைத்தான் சொல்கிறேன். இல்லாததைச் சொல்லவில்லை. நீங்கள் வேண்டுமானால் விசாரணை செய்யுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமழிசை துணைக்கோள் நகரத்தில் எந்தப் பணிகளும் நடைபெறவில்லை என்ற ஒரு தவறான தகவலை இங்கு பதிய வைத்துக்கொண்டிருக்கின்றார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 2011 ஆம் ஆண்டு 'திருமழிசை துணைக்கோள் நகரம்' திட்டம் அறிவிக்கப்பட்டது. சென்னை, திருமழிசையிலே 311.5 ஏக்கர் நிலப்பரப்பிலே 2,160 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 12,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்ற அறிவிப்பைச் செய்தார்கள். அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் பகுதிவாரியாக செயல்படுத்தப்படுகின்றது. முதல் கட்டமாக, கொத்தம்பாக்கம், வரதராஜபுரம், செம்பரம்பாக்கம் ஆகிய பகுதிகளில் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் மற்றும் அரசு நிலங்கள் உள்ளடக்கிய 130.17 ஏக்கர் நிலத்தில் திட்டத்தினைச் செயல்படுத்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2016 ஜுலை 28][திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்]

உத்தேசிக்கப்பட்டு, இப்பகுதியைச் சுற்றி தடுப்புச் சுவர் அமைக்கும் பணி முடிவுற்று, தாழ்வான பகுதிகளில் நேமம் ஏரியிலிருந்து மண் எடுத்து நிரப்பும் பணி நடைபெற்று வருகின்றது. மேலும், மேம்பாட்டுப் பணிகளான அணுகுசாலை, திட்ட உட்புறசாலைகள், கழிவுநீர்க் கால்வாய்கள், சிறு பாலங்கள், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் ஆகியவற்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, ரூ.247.50 கோடி மதிப்பீட்டில் 130.17 ஏக்கர் நிலப்பரப்பில் நடைபெற்று வருகின்றன என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தை எடுத்தாலும் அதை உடனடியாக முடிப்பதற்காகத்தான் இருக்கின்றார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் எந்தப் பணியும் நடைபெறவில்லை என்று சொல்கின்றார். ஏறத்தாழ 250 கோடி ரூபாய் மதிப்பிலே பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 36 பள்ளிகள், 5 கல்லூரிகள், 1 பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவை இயங்கி வருகின்றன. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் அந்தப் பள்ளிகளை நம்பியிருக்கின்றனர். அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை இந்த அரசு செய்துதர முன் வரவேண்டும். இந்தப் பள்ளிகளில் போதிய ஆசிரியர் நியமனம் இல்லாததால் அந்தப் பள்ளிகளில் பயிலுகின்ற மாணவர்களுக்குக் கல்வி என்பது எட்டாக்கனியாகியுள்ளது. அன்பிற்கினிய நிதியமைச்சர் அவர்கள் கூறுகின்றபொழுது தேர்ச்சி விகிதம் கூடிக்கொண்டே போகிறது என்று சொன்னார்கள். கடந்த வாரம் கொளத்தூரின் கோஹினூர் வைரம் எங்கள் தளபதி அவர்கள் பார்வையிடச் சென்ற ஜி.கே.எம். காலனியில் உள்ள ஓர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 2011 ஆம் ஆண்டு 1,100 மாணவர்கள் இருந்தனர். இன்றைக்கு 400 மாணவர்கள்தான் அந்தப் பள்ளியிலேயே பயிலுகிறார்கள். தேர்ச்சி சதவிகிதம் கூடுகிறதோ இல்லையோ, மாணவர் சேர்க்கை

[திரு. பி.கே. சேகர்பாபு] [2016 ஜூலை 28

குறைகிறது என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கொளத்தூர் ஜி.கே.எம். காலனி அரசு மேல்நிலைப் பள்ளி 2123.5 சதுர மீட்டர் பரப்பளவில், 18 வகுப்பறைகளுடன் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 277 மாணவர்களும், 133 மாணவிகளும் ஆக மொத்தம் 410 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். (குறுக்கீடுகள்) இப்பள்ளியில் மாணவர் எண்ணிக்கை குறைந்து வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அருகில் புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. பெற்றோர்கள் இடம் பெயர்தல், ஒப்பந்த அடிப்படையில் கூலி வேலை செய்பவர்கள் பணி முடித்ததும் வேறு இடங்களுக்குச் சென்றுவிடுதல், அருகிலுள்ள தரம் உயர்த்தப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக்குச் செல்லுதல், சென்னை பள்ளி மாணவர்கள் அனைவரும் சென்னை பள்ளிக்கே செல்ல அறிவுறுத்துதல், 10 ஆம் வகுப்பிற்குமேல் மாணவிகளை பெண்கள் பள்ளிக்கே பெற்றோர்கள் அனுப்ப விரும்புதல் போன்ற காரணங்களால் மாணவர் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஜி.கே.எம். காலனி மேல்நிலைப் பள்ளியில் தேர்ச்சி விகிதம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். 2010-2011 ஆம் ஆண்டில் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 69 சதவிகிதமாக இருந்த 10 ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் தற்போது 2015-2016-ல் 80 சதவிகிதம் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியரின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் இப்பள்ளிக்கு ஒப்பளிக்கப்பட்ட 27 பணியிடங்களிலும், தற்போது 27 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஒப்பளிக்கப்பட்ட அனைத்து பணியிடங்களிலும் 100 சதவிகிதம் ஆசிரியர்கள் தற்போது பணியில் உள்ளனர். மேலும், போதுமான உட்கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.



2016 ஜூலை 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இரண்டு நிமிடங்களில் உங்கள் உரையை முடியுங்கள் (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். இன்னும் 5 உறுப்பினர்கள் பேசி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இன்றைக்குப் பேச வேண்டும். அதனால், சீக்கிரம் முடியுங்கள். நான், முன்பே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) 55 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பி.கே. சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** கல்வியில் சிறந்தது தமிழ்நாடு என்ற பெயர் பெற வேண்டுமென்பதற்காகத்தான் இந்தப் பள்ளிகளில் இருக்கின்ற பற்றாக்குறையை இங்கே எடுத்துக் கூறி வருகிறேன்.

*முற்பகல் 10-55*

இந்த ஆட்சியைப் பொறுத்தளவில் இறையாண்மைக்கு அதிக மதிப்பளிக்கக்கூடிய ஆட்சி. குறிப்பாக, தமிழகத்திலே இருக்கின்ற திருக்கோயில்களிலே அதிக வருமானம் ஈட்டுகின்ற திருக்கோயில், தண்டாயுதபாணி திருக்கோயில் என்று சொல்லப்படுகின்ற பழனி திருக்கோயில். அந்தத் திருக்கோயிலுக்கு இரண்டாவது ரோப் கார் என்று அறிவித்தீர்கள். அதேபோல், சோளிங்கர் கோயிலுக்கு ரோப் கார் என்று அறிவித்தீர்கள். இந்த இரண்டு கோயில்களுக்கான ரோப் கார் திட்டங்களும் இன்னும் அந்தரத்திலேயே நின்று கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, உரையை முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. சேகர்பாபு, கொஞ்சம் இருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** என்ன இல்லை? இருக்கின்றது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, இதுமாதிரியெல்லாம் பேசக் கூடாது. இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், இங்கே அப்படி, இப்படி; அப்படி, இப்படி என்று புரட்டிப் புரட்டிப் போடுகின்றார். தி.மு.க. ஆட்சியில் பணி ஓய்வு பெற்றவர்களுக்கு நீட்டிப்பு வழங்கவில்லையா? (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், உங்களைக் காண்பிக்கின்றார் அங்கே கேளுங்கள் என்று. இங்கே கேளுங்கள் என்று சொல்கின்றார். எல்லா ஆட்சியிலும் இருக்கின்ற நடைமுறைதான் என்பது உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்களுக்குத் தெரிந்திருந்தும் இந்த விஷயத்தை பூதாகரமாகக் கொண்டு செல்கின்றார். எப்போதும் சேகர்பாபு அப்படித்தான். எந்த ஒரு சிறிய விஷயத்தையும் பெரிதாக்கி விடுவார். ஈரை பேனாக்கி, பேனை பெருமாளாக்குகின்ற வேலை சேகர்பாபு அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இதுமாதிரியெல்லாம் பேசாதீர்கள். நீங்கள், ** என்று பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நான் ஏற்கெனவே நீக்கியிருக்கிறேன். மீண்டும் அதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் மேற்கொண்டும் இதுமாதிரியெல்லாம் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் பிறகு பேசலாம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான் பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே தேசிய சட்டப் பள்ளி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்"

என்னும் தேசிய கவி பாரதியாரின் வார்த்தையை அகத்தில் ஏற்றி தமிழகமெங்கும் திருக்கோயில்களில் அன்னதானத் திட்டமாய், வீதியெங்கும் அம்மா உணவகமாய்த் திகழ்ந்து, எளியவர்களின் பசியைப் போக்குவதில் வரலெட்சுமியாய் வாழுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் எங்கள் அம்மா அவர்கள், அறநிலையத் துறையில் வரலாற்றுச் சாதனையாக கடந்த 5 ஆண்டுகளில் சிதிலமடைந்த 8,843 திருக்கோயில்களைப் புதுப்பித்து, குடமுழுக்கு நடத்தி, மக்களின் மனம் நிறைய, அறம் காத்து, நெறி வளர்ப்பவர் மாண்புமிகு எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் துயர் நீக்கிட மகிழ்ச்சியளிக்கும் அறநிலையத் துறையின் வளர்ச்சிக்கு எண்ணற்ற திட்டங்கள், ஏராளமான நிதியொதுக்கீடுகள், எல்லாம் என் மக்களுக்கே என்று அல்லும் பகலும் மக்கள் நலன் காக்கும் மாதரசி, மனித புனிதம், மக்கள் தெய்வம் எங்கள் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் கம்பிவட ஊர்தியைப் பற்றி ஒரு வினா எழுப்பினார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயிலாகும். திருக்கோயில் நிருவாகம் இணை ஆணையர், செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.90,54,58,528/- ஆகும். இத்திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்வதால் தற்போது இயங்கிவரும் கம்பிவட ஊர்தி வசதி போதுமானதாக இல்லை. கம்பிவட ஊர்தி இடையே பழுதுபட்டு, பின்னர் சீரமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் நலனைக் கருத்திற்கொண்டு கூடுதலாக மேலும் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய கம்பிவட ஊர்தி அமைக்க முடிவெடுக்கப்பட்டது. இரண்டாவது கம்பிவட ஊர்தி அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி அனுமதி

வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கிட 11 நபர்கள் கொண்ட வல்லுநர் குழு 19-11-2012 நாளிட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வல்லுநர் குழுவால் ஒப்பந்தப்புள்ளி வழங்க தகுதி படைத்தோர் என 4 பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களிடம் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. மேற்படி 4 நபர்களில் 2 நபர்கள்மூலம் தொழில்நுட்ப மற்றும் நிதி ஒப்பந்தங்கள் 31-10-2013-ல் அளிக்கப்பட்டு அதில் ஒரு நிறுவனமான M/s. டோபல் மயூர் ஆஸ்ட்ரியா நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூபாய் 83,21,48,025/-. என்பது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அளித்த மதிப்பீட்டுத் தொகையான ரூபாய் 26,42,50,000/-ஐவிட வெகு அதிகமாக இருந்ததால் வல்லுநர் குழு மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த ஒப்பந்தப்புள்ளி 12-11-2014 நாளிட்ட அரசாணைமூலம் இரத்துச் செய்யப்பட்டது. மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதன் தொடர்பாக, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்றொரு வினாவையும் உறுப்பினர் எழுப்பினார். சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்மர் திருக்கோயில் கம்பிவட ஊர்தி. வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்மர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுமைக்குட்பட்ட திருக்கோயிலாகும். திருக்கோயில் நிருவாகம் உதவி ஆணையர்/செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.1,67,66,374/- ஆகும். இத்திருக்கோயில் 750 அடி உயரம் கொண்ட மலைமீது அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்குச் செல்ல 1,305 படிக்கட்டுகள் உள்ளன. இத்திருக்கோயிலுக்கு வரும் வயதானோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் சிரமமின்றி சுவாமி தரிசனம் செய்திட ஏதுவாக நவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய கம்பிவட ஊர்தி அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திட்டமிடப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இத்திருக்கோயில் நிருவாகத்தால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திட ரூ.8,26,70,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி





அங்கீகரிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டு பணியாணைகள் 2-9-2015 அன்று வழங்கப்பட்டுள்ளன. M/s. Ropeway and Resorts Private Limited நிறுவனம்மூலம் பெறப்பட்ட வரைபடங்கள் மற்றும் வடிவமைப்புக் கணக்கீடுகள் M/s. RITES Ltd. நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு சரிபார்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. நிறுவனத்தின் வரைபடங்கள் மற்றும் வடிவமைப்புகள் வரப்பெற்றதும் பணிகள் துவங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** எப்படி முடிப்பது? இப்போதுதான் உரையையே ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) இன்று எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேச வேண்டும். உங்கள் நேரம் அதில்தான் வரும். உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அவர் adjust செய்வார். (குறுக்கீடுகள்) பழனியிலே இருக்கிற தண்டாயுதபாணிக்கும், சோளிங்கரிலே இருக்கின்ற நரசிம்மருக்கும்தான் வெளிச்சம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) என்ன, அதைத்தானே சொன்னேன். ஒன்றும் தப்பில்லையே. (குறுக்கீடுகள்) தப்பேயில்லையே, வெளிச்சம் என்றுதானே சொன்னேன். (குறுக்கீடுகள்) வெளிச்சம்தான் என்று சொன்னேன். அது நல்ல விஷயம்தான். (குறுக்கீடுகள்) அதற்குமா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு**: இல்லை, நீங்கள் adjust செய்யுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் adjust செய்ய முடியாது. உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றும் நினைத்துக்கொள்ள வேண்டாம். திரு. சேகர்பாபு அ.தி.மு.க.-வில் இருந்தபோது, 2005-ல் இதே அவையில் பேசியது. அவர் எங்கே போனாலும் சரி, யார் எது பேசினாலும், ஏதாவது பேசிவிடுவார். இங்கே இருக்கும்போது என்ன பேசினார் என்று பாருங்கள். இதையெல்லாம் நீங்களும் தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். திரு. சேகர்பாபு 2005 ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி பேசியது. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, உட்காருங்கள்.*

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *அன்றைக்கு திரு. சாமிநாதன், தி.மு.க. உறுப்பினர் பேசியிருக்கிறார். மகளிர் குழுவைப் பற்றிப் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) அது கரெக்ட். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) நீங்களும் தெரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு) சற்று பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) எப்படியெல்லாம் பேசினார்கள்? (குறுக்கீடு) அன்றைக்கு திரு. சேகர்பாபு, இதே அவையில் பேசினார். (குறுக்கீடு) என்ன சொன்னார் தெரியுமா? 'மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வருகிற திட்டங்களெல்லாம் புதுமையான திட்டம், புரட்சிகரமான திட்டம்,' (மேசையைத் தட்டும் ஒலி) 'மற்றவர்கள் கொண்டுவருகிற திட்டங்கள் எல்லாம் வேதனையும், துன்பங்களும் நிறைந்த திட்டங்கள்' என்று பேசியிருக்கிறார். திரு. சேகர்பாபு, இன்றைக்கு என்ன பேசுகிறார்? (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, இன்று அந்தக் கட்சிக்குப் போய்விட்டு, எங்களுடைய திட்டத்தைப் பற்றிக் குறை சொல்கிறார். நாளைக்கு என்ன பேசுவார்? நீங்கள் இதையெல்லாம் சீரியஸ்-ஆக எடுத்துக்கொள்ளக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் நாம் சீரியஸ்-ஆக எடுத்துக்கொள்ளக்கூடாது. நேற்றைக்கு அப்படி, இன்றைக்கு இப்படி, நாளைக்கு எப்படியோ? என்று சொல்லி அமருகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*



**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் அப்போது என்ன பேசினார் என்பது குறித்து ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். அப்போது பேசியது முழுவதும் தவறு என்று உணர்ந்த காரணத்தால்தான் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவலைப்பட வேண்டாம். அவர் இருக்கிற இடத்திலே நிச்சயமாக அவர் விசுவாசமாகத்தான் இருப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எதற்கு வேண்டுமென்றாலும் உத்தரவாதம் கொடுக்கலாம். ஆனால், சாதாரண நிலையிலிருந்த திரு. சேகர்பாபு அவர்களை, அவரை ஊருக்கு--யாரென்று தெரியாத நேரத்தில், அவருடைய வீட்டுக்கும், உறவுக்கும் தெரிந்த அவரை, ஊரறிய, உலகறியச் செய்தவர், எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பதவி கொடுத்து அழகு பார்த்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது ஒரு நிலையில் அவர் இங்கேயிருந்து அங்கே மாறியிருக்கிறார். இன்றைக்கு பத்தோடு பதினொன்றாக இருக்கிறார். (குறுக்கீடு) இங்கே அப்படியில்லை. இதையெல்லாம் நாம் சீரியஸ்-ஆக எடுத்துக்கொள்ளக்கூடாது. அதனால் இதற்கெல்லாம் உறுதி கொடுக்கக்கூடாது. இது எப்படித் தெரியும்? மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு திரு. சேகர்பாபு அவர்களைப் பற்றி பேசினார். எங்களுடைய மாண்புமிகு அம்மா அவர்களைப் பற்றி அவர் பேசியதையெல்லாம் சொன்னால், நேரமாகிவிடும். பிறகு, நீங்கள் கோபப்படுவீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும் எனக்கு நேரம் கொடுக்கமாட்டீர்கள். மாண்புமிகு அம்மா அவர்களைப் பற்றி எத்தனை பக்கம் பேசியிருக்கிறார் என்று பாருங்கள். இதுமாதிரி உங்களையும் பேசுவார். எங்களுடைய மாண்புமிகு அம்மா அவர்களுக்கே இந்த அளவுக்கு என்றால், நாளைக்கு என்ன நடக்கும்? அதனால், அனைவரும் உஷாராக இருப்பதுதான் நல்லது. நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, உரையை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திரு. சேகர்பாபு அவர்களுக்கு இங்கே மிகப் பெரிய சான்றிதழைத் தந்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைப் பற்றியே திரு. சேகர்பாபு அவர்கள் என்ன சொன்னார் என்பதை இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் பேசட்டும். அதற்குப் பிறகு நீங்கள் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசியதற்குப் பிறகு உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் பேசிய பிறகு நீங்கள் பேசுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *சற்று பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) சற்று பொறுமையாக இருங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசட்டும்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *இப்போது பிரச்சினை, திரு. சேகர்பாபு அவர்களுக்கும், நமக்கும்தான். (குறுக்கீடு) இப்போது பிரச்சினை, திரு. சேகர்பாபு அவர்களுக்கும், நமக்கும்தான்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முழுமையாகப் பேசட்டும். பிறகு நீங்கள் பேசுவதற்கு*



*நான் வாய்ப்புத் தருகிறேன். அவர் முழுவதுமாக பேசட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நிதியமைச்சர், நீங்கள் பேசுங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *சற்று பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) நான் பேசுவதை முழுமையாகக் கேளுங்கள். அதில் ஏதாவது தவறு இருந்தால் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். அவருக்கு மாண்புமிகு நிதியமைச்சர் பதில் சொல்கிறார். அதற்குப் பதில் அவர் சொல்வார். நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) அமைதியாக இருங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Controversy *ஆக ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் சட்டமன்றத்தில் பேசியது அவைக் குறிப்பிலே இருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர், நீங்கள் பேசுங்கள்.*

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறீர்களே? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *இரண்டே நிமிடங்களில் நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)* Controversy *ஒன்றும் கிடையாது.*

*(குறுக்கீடுகள்) அவர் பேசியதை அப்படியே படித்துவிட்டு உட்கார்ந்துவிடுகிறேன். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசிய பிறகு நீங்கள் வாய்ப்புக் கேளுங்கள், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏற்கெனவே நடவடிக்கைக் குறிப்பில் இருப்பதைத்தான் நான் சொல்லப் போகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னைப் பார்த்து பேசுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு பேசியதற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எழுந்து பேசுகிறார்கள். அவர் பேசுவதில் ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால் எதிர்க்கட்சித் தலைவரோ, துணைத் தலைவரோ வாய்ப்புக் கேட்டால் நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சரைப் பேசவிடுங்கள். பேசவிடாமல் இப்படிச் செய்தால் எப்படி? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவருக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சம்பந்தம் இருந்தால் பேசுங்கள். அதனால் ஒன்றுமில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதியமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் சொல்லிவிடுகிறேன். அதில் ஏதாவது ஆட்சேபணை இருந்தால் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ன சொல்ல*



*வருகிறார்? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உங்களிடத்தில் என்ன சொல்ல வருகிறார்? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதியமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசிவிடட்டும், நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005 ஆம் ஆண்டு, குயின் மேரீஸ் கல்லூரியில் சில பிரச்சினைகள் நடைபெற்று முடிந்து, எதிர்க்கட்சியினுடைய தலைவர், அன்றைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்திற்குள் வலுக் கட்டாயமாக நுழைந்து, எங்களை சிறைக்கு அனுப்புங்கள் என்று கூறி, இது பூராவும் திரு. சேகர்பாபு பேசியது. காவல் துறையினரைத் தள்ளிக் கொண்டு உள்ளே செல்கின்றனர். *(குறுக்கீடுகள்)* நீங்கள் என்ன இப்படிச் செய்கிறீர்கள்? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இங்கே பாருங்கள், உட்கார்ந்து கொண்டு பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் வராது. (குறுக்கீடுகள்) எதுவும் அவைக் குறிப்பில் வராது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஓர் உயர் அதிகாரியை தனது வலது முழங்கையால் மார்பு, வயிறு ஆகிய பகுதிகளிலே அடித்து, அதேசமயம் . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு, நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். பின்னர் நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதேசமயம், தனது வலது முழங்கை முட்டியால், *(குறுக்கீடுகள்)* அந்த உயர் அதிகாரியின் வலது முழங்கால் முட்டியில் மோதி, முழு பலத்தோடு அவரைப் பின்னுக்குத் தள்ளி. . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள், நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *இதில் பிரச்சினை ஒன்றுமே இல்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும், நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *இதில் பிரச்சினை ஒன்றுமே இல்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்படி அனைவரும் எழுந்து நின்றால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அந்த subject வேண்டாம் என்று விட்டுவிட்டார்கள். நீங்கள் அது குறித்து மேற்கொண்டும் பேச வேண்டாம். (குறுக்கீடு) இல்லை, அவர் அந்த subject வேண்டாம் என்று விட்டுவிட்டார். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

*முற்பகல் 11-15*

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இவற்றில், இங்கிருந்து சிலர் அங்கு போகிறார்கள், அங்கிருந்து சிலர் இங்கு வருகிறார்கள். அங்கே இருக்கிறபொழுது இங்கிருப்பவர்களைப் பார்த்து வசைபொழிகிறார்கள், இங்கே இருக்கிறபொழுது அங்கிருப்பவர்களைப் பார்த்து வசைபொழிகிறார்கள்—நான் என்ன சொல்கிறேனென்று சொன்னால்—-ஒரு தவறான முன்னுதாரணத்தை மாண்புமிகு



அவை முன்னவர் அவர்கள் இந்த அவையிலே எழுப்பி விடுவாரோ என்று நான் பயப்படுகிறேன். காரணம், திரு. சேகர்பாபு அவர்கள் அங்கே இருந்தபொழுது எங்களுடைய தலைவரைப் பற்றிப் பேசியதை record செய்துவிடலாம். அது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. ஆனால், திரும்ப நாங்களும் காளிமுத்து போன்றவர்கள் இங்கே இருந்தபொழுது பேசியதைச் சொன்னால் (குறுக்கீடு) இது ஒருவருக்கொருவர் எப்படி இருக்கும்? ஏற்கெனவே இது திராவிட போக்குவரத்துக் கழகம். எனவே, ஒருவருக்கொருவர் பேசியதெல்லாம் பேசிக்கொண்டால், அது நல்லதல்ல, நல்ல மரபல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இல்லை, 'நாங்கள் பேசுவோம்' என்று நீங்கள் சொன்னால், அவைத் தலைவரிடம் நாங்கள் கேட்பது, நீங்கள் அந்த உரிமையை அவை முன்னவருக்குக் கொடுத்து, அவை முன்னவர் அதைப் படிப்பாரென்று சொன்னால், அதே உரிமை எங்களுக்கும் வேண்டும். அப்படி வாய்ப்புக் கொடுப்பதாக இருந்தால், நாங்கள் அமைதியாக இருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, விடுங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாகவே சொல்லவில்லை. என்னவென்றால், ஒருவருடைய character-ஐப் புரிந்துகொள்ள வேண்டுமென்றுதான் சொல்கிறோம். நாங்களும் ஏமாந்து போய்விட்டோம். சாதாரணமாக இருந்தவரைக் கொண்டு வந்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஓர் இடத்திலே உட்கார வைத்து, சட்டமன்ற உறுப்பினராக்கி (குறுக்கீடுகள்) நல்ல விஷயத்தைச் சொன்னால், அது தப்பா? நாங்கள் ஒன்றும் குறையே சொல்லவில்லை. அவர் பேசட்டும். ஆனால், அதற்காக நாங்கள் அதை serious ஆக ஒன்றும் எடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விவாதம் இதோடு முடிந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேசுகிறேன் இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை, முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான் அங்கு வந்து உட்கார்ந்துவிடுவேன். என்ன, அத்தனைபேரும் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இதற்கு மேலே உங்களுக்கு என்னால் வாய்ப்புத் தர முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சக்தி தந்த மகா சக்தியே, மக்கள் போற்றும் மாதரசியே, (குறுக்கீடுகள்) வீரத்தின் விளைநிலமே, முப்பெரும் தேவியர் வாழ்த்தும் வாழும் மனித தெய்வமே, உலகத் தமிழர்களின். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இன்றைக்கு இன்னும் ஆறு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டியிருக்கிறது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேச வேண்டியிருக்கிறது. காலையிலேயே என்னுடைய அறைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு வந்தபோது, 20 நிமிடங்களுக்குமேல் பேச முடியாது, சூழ்நிலை இப்படி இருக்கிறதென்று நான் சொல்லியிருந்தேன். இப்பொழுது மணி 11-16 ஆகிறது. (குறுக்கீடுகள்) இதற்கு மேலும், இவர்களெல்லாம் பேசி, நான் சபையை நடத்தி முடிப்பதென்றால் மிகவும் கஷ்டம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, ஒரே நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருடைய character-ஐப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதை எதற்காகப் பேசுகிறீர்கள்? அது முடிந்துபோன subject. (குறுக்கீடுகள்) திரு. சேகர்பாபு, அந்த subject முடிந்துவிட்டது. வேறு விஷயத்திற்குப் போகலாம் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் ஒரே நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, அமைதி, வளம், வளர்ச்சி என்று கூறியிருக்கின்றார்கள். அமைதியைப் பற்றி ஒரு கருத்து. நேற்றைக்குக்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கவின்



கலை கல்லூரியினுடைய துணை வேந்தர் சந்தித்திருக்கிறார். அவருடைய அலுவலகம் சூறையாடப்பட்டதற்கு, அவருக்கு கொலை மிரட்டல் விடப்பட்டதற்கு போதிய பாதுகாப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. ஆனால், அந்தத் துறையினுடைய வேந்தர் யாரென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இன்றைக்கு சட்டம்-ஒழுங்கு கெட்டுப்போனதற்கு ஒரே ஒரு உதாரணம் வேண்டுமென்றால், ** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு, அது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் அங்கு சுற்றி, இங்கு சுற்றி, கடைசியாக சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைக்கு வந்துவிட்டார். ஆனால், சட்டம்-ஒழுங்கை (குறுக்கீடுகள்) நான் சொல்வதை உறுப்பினர்கள் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். இதுவரை தமிழகத்தை எத்தனையோ கட்சிகள் ஆண்டன; எத்தனையோ அரசுகள் இருந்திருக்கலாம்; ஆண்டிருக்கலாம்; போயிருக்கலாம். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தி, இங்கே தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி, நிலைநிறுத்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் சட்டம்-ஒழுங்கு எவ்வாறெல்லாம் காப்பாற்றப்பட்டு, தமிழகம் அமைதிப் பூங்கா மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு நான் இங்கே சில பல உதாரணங்களை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்றைய தி.மு.க. ஆட்சியில், 2006-2011 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், சட்டம்-ஒழுங்கு எவ்வாறெல்லாம் சீரழிந்தது என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவர். கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு செம்மையாகப் பராமரிக்கப்படுகிறது. செம்மையாகப் பராமரிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல்,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குற்ற நிகழ்வுகளும் குறைந்து வருகின்றன என்பதுதான் உண்மை என்பதனை முதலில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஏதோ என்னுடைய தனிப்பட்ட கருத்தல்ல; புள்ளிவிவரங்கள்தான் இதை தெரிவிக்கின்றன என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவல் துறையினர் சுதந்திரமாகச் செயல்பட்டு எடுத்துவரும் செம்மையான நடவடிக்கைகளால்தான் மாநிலத்தில் கொலை வழக்குகள் உட்பட குற்றங்கள் குறைந்து வருகின்றன. 2010 ஆம் ஆண்டு கொலை வழக்குகள் உள்ளிட்ட சொத்து சம்பந்தமான குற்றங்கள் தொடர்பாக 23,068 வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இது, 2011 ஆம் ஆண்டில் 22,809 வழக்குகளாகவும், 2012 ஆம் ஆண்டு 20,391 வழக்குகளாகவும் குறைந்துள்ளன. கடந்த 2013 ஆம் ஆண்டு சொத்து சம்பந்தமான 21,271 வழக்குகளாக சற்று உயர்ந்து, 2014 ஆம் ஆண்டு 21,110 வழக்குகளாக மீண்டும் குறைந்து, கடந்த 2015 ஆம் ஆண்டு 19,931 வழக்குகளாக மேலும் குறைந்துள்ளன. இவ்வாண்டு 30-6-2016 வரை 9,979 வழக்குகள் தாக்கலாகியுள்ளன.

காவல் துறையினர் குற்றங்கள் நடவாமல் தடுப்பதற்குப் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டாலும், குற்றங்கள் நடைபெற்றபோது அவற்றைப் புலன் விசாரணை செய்து, குற்றவாளிகளைக் கைது செய்து, நீதிமன்றங்களில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்து, தண்டனை பெற்றுத் தந்தபோதிலும், குற்றங்களை முற்றிலும் தவிர்ப்பது என்பது இயலாததாகும். காவல் துறையினர் தொடர்ந்து மாநிலத்தில் அமைதியைப் பராமரிப்பதிலும், குற்றங்கள் நடவாமல் தடுப்பதிலும், நடந்த குற்றங்களில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கைது செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதிலும் மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

உதாரணமாக, சென்னை, நுங்கம்பாக்கம் இரயில் நிலையத்தில் சுவாதி கொலை செய்யப்பட்டது; சென்னை, பெரியமேட்டில் பரஸ்மால் ஜெயின் என்பவர் அடையாளம் தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டது; சென்னை, கோடம்பாக்கம், டிரஸ்ட்புரத்தில், உயர் நீதிமன்ற வழக்கறிஞர் முருகன் என்பவர் சில நபர்களால் கொலை செய்யப்பட்டது; சென்னை, மணப்பாக்கத்திலுள்ள Hyundai நிறுவனத்திற்குச் சொந்தமான கிடங்கிலிருந்து, காவலாளியை மிரட்டி, ஏழு சொகுசு கார்களை கொள்ளையடித்துச் சென்றது போன்ற சம்பவங்களில் காவல்



துறையினர் வழக்குகள் பதிவு செய்து, உடனடியாக எதிரிகளைக் கண்டுபிடித்து கைது செய்துள்ளனர். குறிப்பாக, சுவாதி கொலை வழக்கில் துரிதமாகச் செயல்பட்டு, கொலையாளியைக் கண்டுபிடித்து, கைது செய்தது, அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் தாக்கலான வழக்குகளைப் பொறுத்தவரையில், எப்போதும்போல் இவை குறைவாகவே உள்ளன.

முற்பகல் 11-25

கடந்த தி.மு.க. ஆட்சியில் 2010 ஆம் ஆண்டு மே மாதத்தில் 147 கொலை வழக்குகள், 9 ஆதாயக் கொலை, 6 கூட்டுக் கொள்ளைகள், 165 கொள்ளை, 419 கன்னக் களவு மற்றும் 1,107 திருட்டு வழக்குகள் தாக்கலாகியுள்ளன. 48 கற்பழிப்பு வழக்குகள், 13 வரதட்சணை மரணங்கள், 127 மானபங்கம், 73 பாலியல் பலாத்காரம், 146 கணவர் மற்றும் உறவினரால் துன்புறுத்தப்படுதல் மற்றும் 142 பெண் சிறுமி கடத்தல் வழக்குகள் தாக்கலாகியுள்ளன. ஆனால், இவ்வாண்டு மே மாதத்தில் 138 கொலை வழக்குகளும், 7 ஆதாயக் கொலைகள், 2 கூட்டுக் கொள்ளைகள், 145 கொள்ளை, 372 கன்னக் களவு மற்றும் 860 திருட்டு வழக்குகளும் தாக்கலாகியுள்ளன. இதேபோன்று 17 கற்பழிப்பு வழக்குகள், 2 வரதட்சணை மரணங்கள், 61 மானபங்கம், 1 பாலியல் பலாத்காரம், 70 கணவர் மற்றும் உறவினரால் துன்புறுத்தப்படுதல் மற்றும் 86 பெண்/சிறுமி கடத்தல் வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன. இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்தே கடந்த தி.மு.க. ஆட்சியில், 2010 மே மாதம் தாக்கலான வழக்குகளை 2016 ஆம் ஆண்டு மே மாதம் தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில் அனைத்து வழக்குகளும் குறைவாகவே தாக்கலாகியுள்ளன என்பது புலப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2015 ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளைவிடவும், இவ்வாண்டு தாக்கலான வழக்குகள் குறைவாகவே உள்ளன. இதேபோன்று கடந்த தி.மு.க. ஆட்சியில் 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 152 கொலை வழக்குகள், 12 ஆதாயக் கொலை வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இதேபோன்று 53 கற்பழிப்பு வழக்குகள், 12 வரதட்சணை மரணங்கள், 96 மானபங்கம், 72 பாலியல் பலாத்காரம், 141 கணவர் மற்றும் உறவினரால் துன்புறுத்தப்படுதல் மற்றும் 147 பெண்/சிறுமி கடத்தல் வழக்குகள் தாக்கலாகியுள்ளன.

ஆனால், இவ்வாண்டு ஜூன் மாதத்தில் 127 கொலை வழக்குகள், 7 ஆதாயக் கொலை வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இதேபோன்று 31 கற்பழிப்பு வழக்குகள், 3 வரதட்சணை மரணங்கள், 62 மானபங்கம், 4 பாலியல் பலாத்காரம், 121 கணவர் மற்றும் உறவினரால் துன்புறுத்தப்படுதல் மற்றும் 99 பெண்/சிறுமி கடத்தல் வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன. கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் தாக்கலான மொத்த சொத்து மற்றும் உடலியல் சார்ந்த வழக்குகள் 2,402 ஆகும். ஆனால், 2016 ஆம் ஆண்டு மே மாதத்தில் இது 1,761 ஆகும். அதாவது 641 வழக்குகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் குறைந்துள்ளன என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தாக்கலான மொத்த சொத்து மற்றும் உடலியல் சார்ந்த வழக்குகள் 2,300 ஆகும். ஆனால், 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் 2,235 ஆகும். அதாவது 65 வழக்குகள் குறைவாகும். மேலும், 2010 மற்றும் 2015 ஆம் ஆண்டு தாக்கலான மொத்த வழக்குகளில் மாத சராசரியைவிட மே மற்றும் ஜூன் மாதங்களில் பெரும்பாலான தலைப்புகளில் வழக்குகள் மிகவும் குறைவாகவே தாக்கலாகியுள்ளன. (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, கவனியுங்கள், அங்கே பேசிக்கொண்டிருக்காதீர்கள். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், அப்போதைய தி.மு.க ஆட்சியின்போது 2010 ஆம் ஆண்டு மே மாதத்தில் 17 கொலை வழக்குகள், 1 ஆதாயக் கொலை, 16 கொள்ளை மற்றும் 86 கன்னக் களவு வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இதேபோன்று 5 கற்பழிப்பு வழக்குகள், 5 வரதட்சணை மரணங்கள், 12 மானபங்கம், 7 பாலியல் பலாத்காரம், 18 கணவர் மற்றும் உறவினரால் துன்புறுத்தப்படுதல் மற்றும் 4 பெண்/சிறுமி கடத்தல் வழக்குகள் தாக்கலாகியுள்ளன. ஆனால், இவ்வாண்டு மே மாதத்தில் சென்னை மாநகரில் 14 கொலை வழக்குகள்; 1 ஆதாயக் கொலை வழக்கு; 6 கொள்ளை மற்றும் 56 கன்னக் களவு வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இதேபோன்று, 1 வரதட்சணை மரணம்; 3 மானபங்கம்; 14 கணவர் மற்றும் உறவினரால் துன்புறுத்தப்படுதல் மற்றும் 2 பெண்/ சிறுமிகள் கடத்தல் வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன. கற்பழிப்பு மற்றும் பாலியல் பலாத்காரம் தொடர்பாக எந்த வழக்கும் இம்மாதத்தில் தாக்கலாகவில்லை.



முற்பகல் 11-30

கடந்த தி.மு.க. ஆட்சியில் 2010 ஆம் ஆண்டு மே மாதம் தாக்கலான வழக்குளை, 2016 ஆம் ஆண்டு மே மாதம் தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில், வழக்குகள் மிகவும் குறைவாகவே தாக்கலாகியுள்ளன. அதேபோன்று 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 17 கொலை வழக்குகள்; 2 ஆதாயக் கொலைகள்; 17 கொள்ளை மற்றும் 6 கன்னக் களவு வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இதேபோன்று 8 கற்பழிப்பு வழக்குகள்; 4 வரதட்சணை மரணங்கள்; 5 மானபங்கம்; 13 பாலியல் பலாத்காரம்; 24 . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேறு, இது வேறு. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** 24 கணவர் மற்றும் உறவினரால் துன்புறுத்தப்படுதல் மற்றும் 6 பெண்/சிறுமிகள் கடத்தல் வழக்குகள் தாக்கலாகியுள்ளன. சென்னை மாநகரில் இவ்வாண்டு ஜூன் மாதத்தில் (குறுக்கீடு) நன்றாக கவனியுங்கள். 17 கொலை வழக்குகள்; 1 ஆதாயக் கொலை; 2 கொள்ளை மற்றும் 47 கன்னக் களவு வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இதேபோன்று 3 கற்பழிப்பு வழக்குகள்; 1 வரதட்சணை மரணம்; 6 மானபங்கம்; 17 கணவர் மற்றும் உறவினரால் துன்புறுத்தப்படுதல் மற்றும் 2 பெண்/சிறுமிகள் கடத்தல் வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன.

கடந்த தி.மு.க. ஆட்சியில் 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தாக்கலான வழக்குகளை, 2016 ஆண்டு ஜூன் மாதம் தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில் வழக்குகள் மிகவும் குறைவாகவே தாக்கலாகியுள்ளன. எனவே, 6 ஆண்டுகளுக்கு முன்பு, கடந்த 2010 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது மே மற்றும் ஜூன் மாதங்களில் தாக்கலான வழக்குகளை, இவ்வாண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில், தாக்கலான வழக்குகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்து வருவதிலிருந்து மாநிலத்தில் குற்றங்கள் நிகழ்வது குறைந்தே வருகின்றன என்பதை இப்புள்ளிவிவரங்கள் நிரூபிக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கடந்த இரண்டு மாதங்களில் குற்றங்கள் அதிகரித்துள்ளன என்ற தி.மு.க.-வின் குற்றச்சாட்டு, கற்பனையான குற்றச்சாட்டுதானே தவிர, உண்மையானதல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையில் (குறுக்கீடு) அடுத்து இருக்கிறது. உண்மையில் வேகமாக மாறிவரும் சமுதாய சூழ்நிலை, ஜனத்தொகை அதிகரிப்பு, சமூக வலைதளங்களின் வளர்ச்சி,

நகரமயமாதல் போன்ற காரணங்களால் உலக அளவிலும், நமது நாட்டின் பிற மாநிலங்களிலும் குற்றங்கள் அதிகரித்து வரும் சூழ்நிலையில், தமிழ்நாட்டில் குற்றங்கள் மிக, மிகக் குறைந்து வந்துள்ளன என்பதனை நான் இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த தி.மு.க. ஆட்சியின்போது தமிழகத்தில் சீர்குலைந்திருந்த சட்டம்-ஒழுங்கைச் சீர்படுத்தி, ரவுடிகளின் கொட்டத்தை அடக்கி, பொதுமக்களிடையே தங்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் ஏற்பட்டிருந்த (மேசையைத் தட்டும் ஒலி) அச்சத்தைப் போக்கி, சட்டத்தின் ஆட்சியை மீண்டும் கொண்டுவந்து, மக்களிடையே புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதனை நான் இங்கு பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள்தான் பேசப் போகிறீர்கள், அப்போது பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசப் போகிறீர்கள், அப்போது பேசிக்கொள்ளலாம். திரு. சேகர்பாபு, நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரமில்லை, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையை மட்டும் கேட்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பதில், விரிவாகவும், விளக்கமாகவும் இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** எப்படி நன்றி சொல்லி முடிக்க முடியும்? (குறுக்கீடு) மிகவும் உபயோகமாக இருந்தது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது குற்றங்கள் நிகழ்ந்து, அதில் ஆதாரங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இருந்தால் (குறுக்கீடு) பொறுங்கள், நீங்களே வைத்துக்கொண்டால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் ஆதாரத்தை பேரவைத் தலைவரிடம் கொடுங்கள். ** உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, நீங்கள் பேசுவதற்கு நான் நிறைய நேரம் கொடுத்தேன். நீங்கள் மேற்கொண்டு விவாதத்தை வளர்த்து, ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்களை எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் அதோடு உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா குமரகுரு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு அவர்கள்.

*முற்பகல் 11-35*

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயே, மனித சக்தியை வென்ற மகா சக்தியே, மக்கள் போற்றும் மாதரசியே, வீரத்தின் விளை நிலமே, முப்பெரும் தேவியர் வாழ்த்தும் வாழும் மனித தெய்வமே, உலகத் தமிழர்களின் உரிமை காத்த திராவிடத்தின் அடையாளமே, எங்கள் குல தெய்வமே, இறவாப் புகழை நிலையாய்ப் பெற்ற இறைமகளே, தமிழகத்தின் ஒளி விளக்கே, பொதிகைத் தென்றலாய், பொங்கும் கருணையாய் புன்னகை முகத்தோடு அன்புத் தாயாக, அறிவுச் சுடராக, துணிவின் இலக்கணமாக, வீறு நடை போட்டு வரும் வாகைத் தாயே. தமிழகத்து மக்களை இதயத்தில் சுமந்து காப்பாற்றும் எங்கள் புனித சக்தியே, ஆலயத்தில் அடைக்கலமாகும் பக்தர்களுக்கெல்லாம் அன்னமிட்ட தாயே, பசித்த வயிற்றுக்கு அம்மா உணவகத்தில் அன்னமிட்டு மகிழும் வள்ளலாரின் வாரிசே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னதான் சொன்னாலும் வாய்ப்பு இல்லை. நான் அவருக்கு 1 மணி நேரம் 35 நிமிடங்கள் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இவ்வளவு நேரம் வாய்ப்புக் கொடுத்தால், நான் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு எவ்வளவு நேரம் கொடுக்கமுடியும்? 3 பேர் பேச வேண்டும். அதெல்லாம் முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான், வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் என்னதான் சொன்னாலும் சரி நான் உங்களுக்கு வாய்ப்புத் தரமுடியாது. (குறுக்கீடுகள்) இவ்வளவுதான் நேரம். நான் அவையை நடத்தி, முடிக்க வேண்டும். அதனால் முடியாது. உட்காருங்கள் எல்லோரும். நான் நிற்கிறேன். உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர், அவருக்கு இரண்டு நிமிடம் வாய்ப்புக் கொடுங்கள் என்று சொன்னார்கள். வாய்ப்புக் கொடுத்தேன் அவர் முறையாகப் பயன்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்) மேற்கொண்டு விவாதத்தை நடத்திக் கொண்டேயிருந்தால் அவர் ஒருவருக்காக மட்டும் சபையை நடத்த முடியாது. சபையை நான் எல்லாக் கட்சிக்காரர்களுக்காகவும் நடத்த வேண்டும். சபையை திரு. சேகர்பாபு ஒருவருக்காக மட்டும் நான் நடத்த முடியாது. உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் "இரண்டு நிமிடம் அவருக்கு வாய்ப்புக் கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டீர்கள். நான் வாய்ப்புக் கொடுத்தேன். அதற்குமேல் அரை மணி நேரம் ஆகிவிட்டது. இதற்குமேல் நான் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) நன்றி சொல்வதாக இருந்தால் மட்டும் அனுமதிக்கிறேன். நன்றி சொல்லாமல் மேற்கொண்டு புது subject பேசுவதாக இருந்தால் நான் அனுமதிக்க மாட்டேன். சொல்லுங்கள். நன்றியோடு உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி மட்டும் ஒரே ஒரு கருத்தை பதிவுசெய்து விடை பெறுகிறேன். மொத்தத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் record-க்கு வராது. (குறுக்கீடுகள்) நான் மைக் கொடுக்கவில்லை அதெல்லாம் record-க்கு வராது. (குறுக்கீடுகள்) Record ஆகாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள், (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சில கருத்துகளை சொன்னதன் அடிப்படையில் இந்த விவாதம் இடையில் நிறுத்தப்பட்டது. (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னீர்கள் அதனால் நிறுத்தப்பட்டது. திரும்பவும் அவர் ஆரம்பித்தார் என்றால் இங்கே நிறைய bundle bundle ஆக இருக்கின்றன. உங்களைப்பற்றிப் பேசியது bundle bundle ஆக இருக்கிறது. ஏன் தேவையில்லாத பேச்சு பேசுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நேரமில்லை உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடிக் கணினி தந்து மாணவரைக் காத்தாய், தாலிக்குத் தங்கம் தந்து எம் தங்கையரைக் காத்தாய், ஒன்றரைக் கோடி சிப்பாய் படை கொண்டு உச்சங்கள் எட்டுகிற ஓங்கு புகழ் சிம்மமே.

பீனிக்ஸ் பறவை போல் வீறு நடை கொண்டு எழும் வெற்றி திலகமே, பத்து கோடி தமிழர்களும் பாடுகிற தேவாரமே, பாரத அரசியலின் பூபாளமே, சதிகளை சம்ஹாரம் செய்யும் மகா சக்தியே, ஓராயிரம் எதிரிகள் ஓரணியில் திரண்டாலும் புறமுதுகிட்டு ஓடச் செய்து, புகழ் கொடி நாட்டி, புண்ணிய பூமி காக்க வந்த சிங்க நிகர் தலைவியே, சூது மதியாளர்களின் சூழ்ச்சிக்கு முடிவு கட்டி, எவராலும் வெல்ல முடியாத வெற்றி வரலாறு படைத்து, தமிழ் இனம் காத்து நிற்கும் தமிழர் குலச் சாமியே, அடக்க நினைத்தோரை அதிர்ந்திட வைத்து, அநீதியை எதிர்த்து அறப்போர் நடத்தி, நீதியை நிலைநாட்டிய வெற்றி சகாப்தமே, வணங்கிய கைகள் விலகும் முன்னரே வரம் நூறு தரும் அன்னையே, தமக்காக வாழாது, தமிழர்க்குத் தொண்டு செய்வதில் சந்தனமாய் கரைகின்ற, சந்தியா தாய் பெற்றெடுத்த, சத்தியத்தை வென்றெடுத்த, சரித்திர தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் விரல் அசைவிலும், விழித் திசையிலும் வழி நடக்கும் தொண்டர்களை வாழ வைக்கும் தாயே, மங்காத தமிழகத்தின் மரகதமே, மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே, தமிழகத்தின் விடி வெள்ளியே, எங்கள் வாழ்வே, தாங்கள் வீற்றிருக்கும் இந்த அவையில் தங்களின் பொற்பாதம் பணிந்து, எனது கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்கி எனது உரையைத் துவங்குகிறேன் தாயே.

[திரு. இரா. குமரகுரு] [2016 ஜூலை 28

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடைக்கல் என்னும் குக்கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எளிய தொண்டனாகிய என்னை எடைக்கல் கிராமத்தின் கிளைக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய கழகத் துணைச் செயலாளராகவும், ஒன்றியச் செயலாளராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும் பணியாற்ற வாய்ப்பு அளித்ததோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து 3-வது முறையாக உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட வாய்ப்பளித்து என்னை வெற்றி பெறச் செய்து, இந்த 15-வது சட்டமன்றப் பேரவையில் 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பேச வாய்ப்பளித்த எங்கள் குல தெய்வத்தின் பொற்பாதங்களை வணங்கி, கோடானுகோடி நன்றிகளை நானும், எனது குடும்பமும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம். என்னை வெற்றி பெறச் செய்த உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களுக்கும் கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

தமிழக அரசியல் வரலாற்றில் 32 ஆண்டுகளுக்குப் பின் வரலாற்றுச் சாதனையாக தன்னந்தனியாக யாருடனும் கூட்டணி வைக்காமல், மக்களுடன் மட்டுமே கூட்டணி வைத்து, அனைத்துத் தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தி, இரட்டை இலைச் சின்னத்தில் போடியிடச் செய்து தொடர்ந்து இரண்டாவது முறையாக வெற்றி பெற்று, ஆறாவது முறையாக தமிழக முதல்வராக அரியணையில் அமர்ந்த எங்கள் அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன் தாயே!

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்று அடைக்கலம் கேட்டு வந்ததால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தயவால், 29 சட்டமன்ற உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சித் தலைவராக்கி, தனக்கு எதிரே அமர வைத்து அழகு பார்த்தார்கள். தண்ணீரில் விளையாடும் நீர் தவளையை உட்கார வைத்தால் அது உட்காருமா? அகங்காரம் கொண்டு துள்ளி, துள்ளி ஆட்டம் போட்டது. கடந்த 2012 பிப்ரவரி 1 ஆம் தேதி இந்தச் சட்டமன்றப் பேரவையிலே அரசியல் நாகரிகமின்றி பேசியதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள், அவர்களுக்கு வரவேண்டிய ஏற்றமும்,



2016 ஜூலை 28] [திரு. இரா. குமரகுரு]

வரக்கூடிய ஏற்றமும் எங்களால் வந்து முடிந்துவிட்டது, இனிமேல் அவர்களுக்கு இறங்கு முகம்தான் எனக் கூறினார்கள். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் அவர் உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு டெபாசிட் இழந்ததோடு மட்டுமல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) அவரது கட்சியின் கூடாரத்தையே காலியாக்கி விட்டார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் நேரத்திலே பல்வேறு வாக்குறுதிகளை அளித்தார்கள். அவற்றைச் செயல்படுத்த முடியாது என்று பல எதிர்க் கட்சிகள் பிரச்சாரம் செய்தன. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாக்களித்தவர்கள் கையில் வைத்த மை காயும் முன்னரே செயல்படுத்திக் காட்டியுள்ளார்கள். அதாவது தேர்தல் நடைபெற்றதோ மே 16 ஆம் தேதி, வாக்கு எண்ணிக்கையோ மே 19 ஆம் தேதி, தொடர்ந்து இரண்டாவது முறையாக வரலாற்று வெற்றி பெற்று மே 23 ஆம் தேதி ஆறாவது முறையாக எங்கள் அன்னை மாண்புமிகு அம்மா அவர்கள் அரியணை ஏறியதும், முத்தான முதல் கையெழுத்தாக விவசாயிகள் நலன் காக்க குறு மற்றும் சிறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்றிருந்த கடன் ரூ.5,780.92 கோடியை தள்ளுபடி செய்து விவசாயிகளைக் காத்த காவல் தெய்வம் எங்கள் அம்மா.

இரண்டாவது கையெழுத்தாக அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை மின்சாரம் இலவசம் என அறிவித்து தாய்மார்கள் நெஞ்சமெல்லாம் நிலைத்து நிற்கிறார் எங்கள் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூன்றாவது கையெழுத்தாக திருமண உதவித் தொகை வழங்கும் திட்டத்தில், செயல்படுத்தப்படும் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தில் 4 கிராம் தங்கத்தை 8 கிராமாக உயர்த்தி வழங்கி ஏழை, எளிய தாய்மார்களின் வாழ்வில் ஒளியேற்றிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எனச் சொல்லுவதில் பெருமைப்படுகிறேன்.

நான்காவது கையெழுத்தாக நெசவாளர்களின் நலன் காத்திட, கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் மின்சாரமும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் மின்சாரமும் இலவசமாக வழங்கப்படும் என அறிவித்து நெசவாளர் வாழ்வில் ஒளியேற்றி வைத்த தலைவி, எங்களது தானைத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மேலும், தேர்தல் நேரத்திலே மற்ற கட்சியினரெல்லாம் பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என பிரச்சாரம் செய்தனர். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் பூரண மதுவிலக்கு என்பது சாத்தியமல்ல, படிப்படியாக மதுவிலக்கு கொண்டுவரப்படும் எனக் கூறியதை நிறைவேற்றும் வகையில் ஐந்தாவது கையெழுத்தாக 500 டாஸ்மாக் மதுபானக் கடைகளை மூடியும், விற்பனை நேரத்தில் இரண்டு மணி நேரத்தைக் குறைத்தும் மக்கள் நலனைக் காத்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் கல்வி மிக அவசியமான ஒன்றாகும். கல்வியால் அனைவரும் பயன் பெற்று, தரமான கல்வி பயில வேண்டுமெனில் ஒரு காலக்கட்டத்தில் தனியார் பள்ளிகளை நாட வேண்டிய சூழ்நிலை இருந்து வந்தது. சாதாரண ஏழை குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தனியார் பள்ளிகளில் சேர்ந்து பயில இயலாத நிலையில் இருப்பார்கள். ஏழை குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகள் அரசுப் பள்ளிகளில்தான் சேர்ந்து பயின்று வருகின்றனர். இவர்களின் கல்வி சிறந்திடவும், வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடைந்திடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற காலம் முதல் தொடர்ந்து எண்ணற்ற பல நலத் திட்டங்களை கல்வித் துறைக்கு வழங்கி வருகிறார்கள். ஏழையெளிய மாணவர்கள் சிறந்த கல்வி பயில வேண்டும் என்பதற்காக அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டு, பேனா மற்றும் கல்வி உபகரணப் பொருட்கள், மிதிவண்டிகள், மடிக் கணினி போன்ற அனைத்தையும் வழங்கி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைப் பெருமையாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





மேலும், தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நிகராக அரசுப் பள்ளிகளிலும் திறன்மிக்க ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர். இதனால் அரசுப் பள்ளிகளில் சேர்க்கை சதவிகிதம் ஆண்டாண்டிற்கு அதிகரித்து வருகிறது. கடந்த தி.மு.க. ஆட்சி பள்ளிக் கல்வித் துறைக்கு 39,058 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடந்த 5 ஆண்டுகளில் பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் 84,568 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து கல்வித் தரத்தை மேம்பாடு செய்தது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காக நடப்பு நிதியாண்டில் திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் 24,130 கோடி ரூபாய் பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் ஒதுக்கீடு செய்த தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுக் காலத்தில் உயர் கல்வித் துறைக்கு மிகக் குறைந்த அளவாக 6,142 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டது. 10 புதிய கலை அறிவியல் கல்லூரிகளும், 8 தொழில்நுட்பக் கல்லூரிகளும், 26 புதிய பாடப் பிரிவுகள் மட்டுமே தொடங்கப்பட்டதால் தமிழகம் உயர் கல்வியில் பின்தங்கி இருந்தது. கடந்த முறை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று 2011 முதல் 2016 வரை சிறப்பான ஆட்சி புரிந்து, உயர் கல்வித் துறைக்கு 14,609 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, உயர் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் எங்கெல்லாம் கலைக் கல்லூரி தேவைப்படுகிறதோ, அதனைக் கண்டறிந்து அந்த இடங்களில் புதிதாக 39 கலைக் கல்லூரிகளையும், 11 புதிய பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளையும், 4 தொழில்நுட்பக் கல்லூரிகளையும் நிறுவி, 959 புதிய பாடப் பிரிவுகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடங்கியது. இதன் காரணமாக கல்வியில் புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டு, தமிழ்நாடு அளவில் 44.8 சதவிகிதமும், தேசிய அளவில் 23.6 சதவிகிதமும் பெற்று உயர் கல்வியில் முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதும், இதற்கு அடித்தளமிட்டது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

அரசு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைத் தொடர்ந்து, உயர் கல்வியில் தமிழகம் முதன்மையடைய வேண்டும் என்பதற்காக 2016-2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு, உயர் கல்வித் துறைக்கு 3,679 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையிலும், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி நடைபெறும் தமிழகம் முதல் மாநிலமாகச் சிறந்து விளங்குகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுக்கால ஆட்சியிலே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு புதிதாக 172 ஆரம்ப சுகாதார நிலையங்களையும், 122 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகளுடன்கூடிய சுகாதார நிலையங்களாகவும் தரம் உயர்த்தியுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிலும் 37 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஏற்கெனவே இயங்கி வரும் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகளுடன்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்திடவும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சேர்ந்து, உயர் சிகிச்சைப் பெற்று பெரிதும் பயன் பெற்று வருகின்றனர். ஆனால், முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் காப்பீட்டுத் திட்டத்தைத் தனியார் நிறுவனமான Star Health Insurance மூலமாகச் செயல்படுத்திய காரணத்தினால், தவறான வழியில் நிதி அனைத்தும் தனியார் நிறுவனத்திற்குச் சென்றது. இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முறியடித்து, மக்கள் பணம், மக்களுக்கே சென்றடைய வேண்டும் என்கிற நோக்கத்தோடு United India Insurance மூலம் செயல்படுத்தி, இது வரை 1,138 கோடி ரூபாயினை அரசு மருத்துவமனைகள் ஈட்டியுள்ளன. இந்த வருவாயின்மூலம் அரசு மருத்துவமனைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மேலும், தாய்மார்களின் மனநலனைக் கருத்தில்கொண்டு, எவரும் சிந்தித்துப் பார்க்க முடியாத வகையில் பச்சிளம் குழந்தைகளைப் பேணிக் காப்பதற்காக கிலுகிலுப்பை, baby soap, baby oil போன்ற 13 வகையான பொருட்கள் அடங்கிய "அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்" வழங்கிய கருணைக் கடல் எங்கள் அம்மா. மேலும், "அம்மா மகப்பேறு சஞ்சீவி" மற்றும் "அம்மா ஆரோக்கியத் திட்டம்" எனப் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி, ஏழையெளிய தாய்மார்களின் இதயங்களில் விளங்குகிறார்கள் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நடப்பு நிதியாண்டிலும் சுகாதாரத் துறைக்கு மட்டும் 9,073 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், விவசாயப் பெருமக்களின் வளமான வாழ்விற்கும், வேளாண்மைத் துறை முக்கியக் காரணமாகும். கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் வேளாண்மைத் துறைக்கு 23,583 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், முந்தைய தி.மு.க. அரசின் ஐந்தாண்டுகளில் 7,655 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது. முந்தைய தி.மு.க. அரசு உணவு உற்பத்தியைப் பெருக்க எடுத்த நடவடிக்கைகளால் 75 இலட்சம் மெட்ரிக் டன் மட்டும்தான் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால், கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் 127.96 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டு, 68.48% வளர்ச்சியை எட்டியுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி இலக்காக 147 இலட்சம் மெட்ரிக் டன் என நிர்ணயம் செய்து, அதை அடைவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து, செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகள் நலனில் அக்கறைக் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியின்படி குறு, சிறு விவசாயிகளுக்கு 5,550 கோடி ரூபாய் தள்ளுபடி செய்துள்ளது. நடப்பு நிதியாண்டில் மட்டும் ஒரு கோடியே 69 இலட்சம் குறு, சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், இத்திட்டத்திற்கு 2016-2017 ஆம் ஆண்டில் மட்டும் 1,680 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள்

தடையில்லாமல் வட்டியில்லாமல் பயிர்க் கடன் பெறுவதற்கு இந்த வருடம் மட்டும் 6,000 கோடி ரூபாய் நிதி வழங்கிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்காகவும், தமிழகர்களின் நலனுக்காவும், தமிழர்களின் உரிமைக்காகவும், தமிழுக்காகவும் பாடுபடுகின்ற ஒப்பற்றத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். காவேரிப் பிரச்சினையாக இருந்தாலும், முல்லைப் பெரியாறு பிரச்சினையாக இருந்தாலும், பாலாற்றுப் பிரச்சினையாக இருந்தாலும், உச்ச நீதிமன்றம் வரை சென்று, தீர்ப்பு பெற்று வெற்றி பெறுவது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திட உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைப் பெற்று தமிழர்களின் உரிமையை நிலை நாட்டிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். காவேரிப் பிரச்சினையில் நடுவர் மன்றம் வழங்கிய தீர்ப்பை மத்திய அரசின் gazette-ல் வெளியிட, அப்போது மத்தியில் ஆண்ட காங்கிரஸ் அரசில் அங்கம் வகித்த முந்தைய தி.மு.க. அரசு எந்தக் குரலும் எழுப்பவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், உச்ச நீதிமன்றத்தில் வாதாடி, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசின் gazette-ல் வெளியிடச் செய்து, காவேரியைக் காத்த எங்கள் காவேரித் தாய், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

இலங்கைத் தமிழர்களுக்காக சட்டமன்றப் பேரவையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் இயற்றி, அப்போதைய இலங்கை அதிபர் திரு. ராஜபக்சே அவர்களுக்குக் கண்டனம் தெரிவித்து, இலங்கைத் தமிழர்களின் நலன் காத்த காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமிற்கு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த நிதிநிலை அறிக்கையில் 105.98 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை நான் பெருமையோடு இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், தொழில் துறை வளர்ச்சியடைய வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, உரையை முடியுங்கள்.

**திரு. இரா. குமரகுரு:** பல்வேறு வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்து, கடந்த 2015 ஆம் ஆண்டு உலகமே வியக்கும் வகையில், "உலக முதலீட்டாளர்கள் மாநாடு" நடத்தி, 4.70 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில், 2.42 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான தொழில் முதலீட்டை ஈர்த்திட வழிவகை செய்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, உங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். நான் அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குத் தேவையான சில முக்கியக் கோரிக்கைகள் இருக்கின்றன. என்னுடைய தொகுதி கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், என்னுடைய தொகுதியிலுள்ள மாணவிகள், வெளியூர் சென்று மேல்படிப்பு பயில மிகவும் சிரமப்படுகிறார்கள். என்னுடைய தொகுதியிலுள்ள மாணவியர்கள் நலன் கருதி, உளுந்தூர்பேட்டையில் அரசு மகளிர் கலைக் கல்லூரி துவக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, உங்கள் தொகுதி குறித்த கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவற்றை, நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன், உட்காருங்கள்.

**திரு. இரா. குமரகுரு:**

தொகுதிக் கோரிக்கைகள்:

உளுந்தூர்பேட்டையில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க வேண்டும்.

[திரு. இரா. குமரகுரு] [2016 ஜூலை 28

உளுந்தூர்பேட்டையில் பால் பண்ணை அமைக்க வேண்டும்.

எலவனாசூர்கோட்டையை பேரூராட்சியாகத் தரம் உயர்த்திட வேண்டும்.

உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் அதிநவீன அவசர விபத்து சிகிச்சைக்கான உபகரணங்களை நிறுவி, நரம்பியல் மற்றும் எலும்பியல் பிரிவு மருத்துவ நிபுணர்களை நியமனம் செய்ய வேண்டும்.

கொரட்டூர் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து கொ. குச்சிப்பாளையம் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டும்.

தாங்கல் மற்றும் புத்தனந்தல் கிராமங்களிலுள்ள தடுப்பணைகள் சீரமைக்கப்பட வேண்டும்.

பே. குச்சிப்பாளையம் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டையிலுள்ள நகரப் பிரிவு மின் அலுவலகத்தில் இணைக்கப்பட்டுள்ள கிராமங்களைப் பிரித்து அருகிலுள்ள செங்குறிச்சி மின் அலுவலகத்தில் இணைக்க வேண்டும்.

திருநாவலூரில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டும்.

வெள்ளையூர் மற்றும் பாதூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டும்.

ஆதனூர், பேரங்கியூர் மற்றும் பெரியசெவலை கிராமங்களில் புதிய கால்நடை மருத்துவமனைகள் அமைக்க வேண்டும்.

திருநாவலூரை மையமாகக் கொண்டு புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டையில் புதிய சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை ஒன்றியம், பரிந்தல் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, பரிந்தல் மேட்டுக்காலனியிலும், உளுந்தூர்பேட்டை ஒன்றியம், குணமங்கலம் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து குணமங்கலம் முஸ்லிம் தெருவிலும்,



2016 ஜூலை 28] [திரு. இரா. குமரகுரு]

உளுந்தூர்பேட்டை ஒன்றியம், எலவனாசூர்கோட்டை கடை எண்-1 நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து ரஹிமான் தக்கா பகுதியிலும், உளுந்தூர்பேட்டை ஒன்றியம், சீதேவி நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து சவரியார்புரம் கிராமத்திலும், உளுந்தூர்பேட்டை ஒன்றியம், பின்னல்வாடி நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து பின்னல்வாடி காலனியிலும் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டும்.

திருநாவலூர் ஒன்றியம், நாச்சியார்பேட்டை நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து நாச்சியார்பேட்டை மேடு பகுதியிலும், திருநாவலூர் ஒன்றியம், வேலூர் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து வாணியங்குப்பம் கிராமத்திலும், திருநாவலூர் ஒன்றியம், பிள்ளையார்குப்பம் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து பரமநத்தம் கிராமத்திலும், திருநாவலூர் ஒன்றியம், உடையானந்தல் ஊராட்சி, வைப்பாளையம் கிராமத்திலும் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டும்.

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், திருமுண்டீஸ்வரம் கிராமம் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து சாராயமேடு பகுதியிலும், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், கண்ணராம்பட்டு நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து கண்ணராம்பட்டு காலனியிலும், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், ஆமூர் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து ஆமூர் காலனியிலும் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டையிலிருந்து நரிப்பாளையம் கிராமத்திற்கு வெள்ளையூர், ஏமம, நத்தகாளி, வடகுறும்பூர், கூவாடு, எல்லைக்கிராமம், வடுகபாளையம், பெரியக்குறுக்கை, அத்திப்பாக்கம் வழியாக பேருந்து இயக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டையிலிருந்து செம்மணங்கூர் புதூர் கிராமத்திற்கு உளுந்தாண்டார்கோவில், செம்மணங்கூர் வழியாகவும், விழுப்புரம் முதல் அயன்வேலூருக்கு மடப்பட்டு, பரிக்கல், பெரும்பாக்கம் வழியாகவும், விழுப்புரத்திலிருந்து டி. குமாரமங்கலத்திற்கு பேரங்கியூர், இருவேல்பட்டு, காரப்பட்டு வழியாகவும் புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டும்.

உளுந்தூர்பேட்டையிலிருந்து கல்சிறுநாகலூர் வரை இயங்கும் நகரப் பேருந்தை சவுரியார்புரம் வரையும், உளுந்தூர்பேட்டையிலிருந்து எறையூர் வரை இயங்கும் நகரப்

பேருந்தை எஸ். மலையனூர் வரையும், விழுப்புரத்திலிருந்து இருந்தை வரை இயங்கும் நகரப் பேருந்தை கொ. குச்சிப்பாளையம் வரையும், பண்ருட்டியிலிருந்து நன்னிக்குப்பம் வரை இயங்கும் நகரப் பேருந்தை தொப்பையான்குளம் வரையும், பண்ருட்டியிலிருந்து பிள்ளையார்குப்பம் வரை இயங்கும் நகரப் பேருந்தை களமருதூர் வரையும், திருக்கோவிலூரிலிருந்து ஆமூர் வரை இயங்கும் நகரப் பேருந்தை பிள்ளையார்குப்பம் வரையும், திருக்கோவிலூரிலிருந்து எலவனாசூர்கோட்டை வரை இயங்கும் நகரப் பேருந்தை பு. மலையனூர் வரையும், திருக்கோவிலூரிலிருந்து பாசார் வரை இயங்கும் நகரப் பேருந்தை சவுரியார்புரம் வரையும், கள்ளக்குறிச்சியிலிருந்து குருபீடபுரம் வரை இயங்கும் நகரப் பேருந்தை ஆசனூர் வரையும், கள்ளக்குறிச்சியிலிருந்து மண்டகப்பாடி வரை இயங்கும் நகரப் பேருந்தை சவுரியார்புரம் வரையும், கள்ளக்குறிச்சியிலிருந்து அதையூர் வரை செல்லும் பேருந்தை தானம் வரையும், கள்ளக்குறிச்சியிலிருந்து எறஞ்சி வரை செல்லும் பேருந்தை ஆசனூர் வரையும் நீட்டிப்பு செய்ய வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, காந்தலவாடி மற்றும் பூ. மலையனூர் கிராமங்களுக்கு மதிய நேரத்தில் கூடுதல் நடை பேருந்துகள் இயக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, நன்னாவரம் கிராமத்திற்கு காலை மற்றும் மாலையில் பள்ளி நேரத்தில் கூடுதல் நடை பேருந்துகள் இயக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, உ. கீரனூர் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் உளுந்தூர்பேட்டை அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்களுக்கு இராஜகோபுரம் அமைத்து குடமுழுக்கு செய்ய வேண்டும்.

உளுந்தூர்பேட்டை ஒன்றியம், எ. சாத்தனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து அஜிஸ்நகர் பகுதியை தனி ஊராட்சியாகவும், உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒன்றியம், சேந்தமங்கலம் ஊராட்சியை மூன்று ஊராட்சிகளாகப் பிரித்து, சேந்தமங்கலம், மாரனோடை மற்றும் வண்டிப்பாளையம் பகுதிகளை தனி ஊராட்சிகளாகவும், உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், சித்தாணங்கூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து மாமந்தூர் பகுதியை தனி ஊராட்சியாகவும், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், ஆமூர் ஊராட்சியை



இரண்டாகப் பிரித்து துலங்கம்பட்டு பகுதியை தனி ஊராட்சியாகவும், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், டி. கொளத்தூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து கொண்டசமுத்திரம் பகுதியை தனி ஊராட்சியாகவும், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், சரவணப்பாக்கம் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து கொத்தனூர் பகுதியை தனி ஊராட்சியாகவும் அறிவிக்க வேண்டும்.

திருநாவலூர் ஒன்றிய தோட்டக்கலைத் துறைக்கு புதிய அலுவலகக் கட்டடம் அமைக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருப்பெயர், செங்குறிச்சி, அரசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்புக் கிடங்கு அமைக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஒரத்தூர், திருநாவலூர், பெரியசெவலை, சேந்தநாடு, கூவாகம், ஆசனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நவீன அலுவலகக் கட்டடம் அமைக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, அரசூர் அரசு உயர்நிலைப் பள்ளி, உளுந்தூர்பேட்டை தொகுதி, செங்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளி, உளுந்தூர்பேட்டை தொகுதி, எம். குண்ணத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளி, உளுந்தூர்பேட்டை தொகுதி, இருந்தை அரசு உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட பின்னால்வாடி, பிள்ளையார்குப்பம், ஆதனூர், இலுப்பையூர், பு. கிள்ளனூர், கருவேப்பிலைபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டும்

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட சாத்தனூர், புல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டும்.

உளுந்தூர்பேட்டை களமருதூரில் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் நகர கூட்டுறவு வங்கி தொடங்க வேண்டும்.

*உளுந்தூர்பேட்டை தொகுதி, எலவனாசூர்கோட்டையில் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்.*

*உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து களமருதூரிலும், திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து அரசூரிலும் புதிய புறக்காவல் நிலையங்கள் அமைக்க வேண்டும்.*

*உளுந்தூர்பேட்டை தொகுதி, கெடிலம் ஆற்றின் குறுக்கே கிழக்கு மருதூர் கிராமத்திற்கு அருகிலும், சேஷா நதியின் குறுக்கே பாதூர் கிராமத்திற்கு அருகிலும், நரியன் ஓடையின் குறுக்கே விஜயங்குப்பம் கிராமத்திற்கு அருகிலும், கெடிலம் ஆற்றின் குறுக்கே கோவிந்தராசப்பட்டினம் அருகிலும், கெடிலம் ஆற்றின் குறுக்கே பிள்ளையார்குப்பம் கிராமத்திற்கு அருகிலும், கெடிலம் ஆற்றின் குறுக்கே பெரும்பட்டு கிராமத்திற்கு அருகிலும், சேஷா நதியின் குறுக்கே பில்ராம்பட்டு கிராமத்திற்கு அருகிலும், நரியன் ஓடையின் குறுக்கே கூ. கள்ளக்குறிச்சி கிராமத்திற்கு அருகிலும், சேஷா நதியின் குறுக்கே களவனூர் கிராமத்திற்கு அருகிலும் தடுப்பணைகள் அமைக்க வேண்டும்.*

*உளுந்தூர்பேட்டை தொகுதி, கெடிலம் ஆற்றின் குறுக்கே உடையானந்தல் கிராமத்திற்கும், திருநாவலூருக்கும் இடையில் தரைப்பாலம் அமைக்க வேண்டும்.*

*உளுந்தூர்பேட்டை தொகுதி, விழுப்புரத்திலிருந்து மேல்தாணியலாம்பட்டு கிராமத்திற்கு இரண்டு நடை கூடுதலாக நகரப் பேருந்து இயக்க வேண்டும்.*

*உளுந்தூர்பேட்டையிலிருந்து பெரியக்குறுக்கை கிராமத்திற்கு, வெள்ளையூர், நத்தகாளி, ஏமம், அங்கனூர், எஸ். மலையனூர், வடகுறும்பூர், கூவாடு, எல்லை கிராமம், வருதபாளையம் வழியாக நகரப் பேருந்து இயக்க வேண்டும்.*

*விழுப்புரத்திலிருந்து களமருதூர் கிராமத்திற்கு வழி கெடிலம், மாரனோடை, பா. கிள்ளனூர் வழியாகப் புதிய நகரப் பேருந்து இயக்க வேண்டும்.*

*விழுப்புரம் முதல் பரிக்கல் வரை இயங்கும் தடம் எண் 60 என்ற நகரப் பேருந்தை வேலூர் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.*



*விழுப்புரம் முதல் பிடாகம் வரை இயங்கும் தடம் எண் 64 என்ற நகரப் பேருந்தை பேரங்கியூர், கரடிப்பாக்கம் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.*

*உளுந்தூர்பேட்டை முதல் பாலி வரை இயங்கும் நகரப் பேருந்தை பாலி புதுக் காலனி, ஷேக்உசேன்பேட்டை வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.*

*உளுந்தூர்பேட்டை முதல் பு. மலையனூர் வரை இயங்கும் நகரப் பேருந்தை சிறுவத்தூர் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.*

*உளுந்தூர்பேட்டை முதல் பின்னல்வாடி வரை இயங்கும் நகரப் பேருந்தை சாலப்பாக்கம், ஏ-புத்தூர் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, நான் கூறியதுபோன்று சரியாக 12 மணிக்கு நீங்கள் உரையை முடித்துவிட வேண்டும்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, கடந்த ஜூலை 21 ஆம் தேதி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த நிதிநிலை அறிக்கை பன்முகத் தன்மையோடு, சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதன் பின்னால், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அறிவாற்றலும், தூரநோக்குப் பார்வையும் இருக்கின்றது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவர். நிதிநிலை அறிக்கை என்பது, ஓர் ஆட்சியின் ஓராண்டுக் கால கொள்கை விளக்கத்தைப் பறைசாற்றக் கூடியது. அந்த வகையில், இந்த அரசின் தெளிவான செயல் திட்டங்களை இந்த பட்ஜெட்டில் அறிய முடிகிறது. இது, வரியில்லாத பட்ஜெட்; மக்களுக்கு வலி கொடுக்காத பட்ஜெட்; (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்தரப்புக்கு வழி கொடுக்காத பட்ஜெட். அந்த வகையில், இந்த பட்ஜெட், வாசமுள்ள மலர்களை இணைத்துக் கட்டிய ஒரு பூமாலையாக மணக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் மக்கள் நல சிந்தனைகளையும், தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளையும்*

உள்ளடக்கியதாக இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. பொருளாதார வளர்ச்சியில் அனைத்துத் தரப்பு மக்களும் சீராகப் பயன்பெறுவதை உறுதி செய்து, ஏழையெளிய மக்களின் நலன்களை மேம்படுத்தும் வகையில், மிகுந்த மதிநுட்பத்தோடு நிதி ஒதுக்கீடு பிரிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள்தான் உயிர் நாடி என்பதை உணர்ந்து, அதற்காக 11,514.34 கோடி ரூபாய் ஒதுக்கீடு; மக்களின் ஆரோக்கியத்தினையும், நல்வாழ்வினையும் கருத்திற்கொண்டு, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 9,073 கோடி ரூபாய் ஒதுக்கீடு; வளரும் தலைமுறையின் நலன் கருதி, உயர் கல்வித் துறைக்கு 3,679.1 கோடி ரூபாய் ஒதுக்கீடு; ஓர் ஓலைக் குடிசையாவது கிடைக்காதா என்று ஏங்கித் தவிக்கும் மக்களின் கனவுகள் நிறைவேற, பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 20 ஆயிரம் வீடுகள் புதிதாகக் கட்ட 420 கோடி ரூபாய் ஒதுக்கீடு; உலகம் முழுக்க பல நாடுகளில் ஆழமாகக், கவனிக்கப்படும், விவாதிக்கப்படும் நீர் மேலாண்மையைச் செம்மைப்படுத்தும் வகையில் நீர்வள ஆதாரத் துறைக்கு 3,406.69 கோடி ரூபாய் ஒதுக்கீடு; போக்குவரத்துத் துறைக்கு 1,295.8 கோடி ரூபாய் ஒதுக்கீடு; தொழில் துறைக்கு 2,104.49 கோடி ரூபாய் ஒதுக்கீடு; கைத்தறி மற்றும் துணி நூல் துறைக்கு 1,129.74 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு; கைத்திறன் மற்றும் கதர்த் துறைக்காக 174.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு என பல வகையிலும் இந்த நிதி ஒதுக்கீடு சிறப்பான முறையில் செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. குறிப்பாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை வலிமைப்படுத்தும் வகையில், இத்திட்டத்திற்காக 7,155 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, மொத்தமாக ஊரக வளர்ச்சித் துறைக்காக 21,186.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

“உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்”

என்ற திருக்குறளை உணர்ந்து, விவசாயிகளின் கடன்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தள்ளுபடி செய்திருப்பதோடு, வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்கு பல சிறப்புத் திட்டங்களைத் தீட்டி, அதற்கென தனித் தனியாக நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறார்கள். இவற்றில், 2016-2017 ஆம் ஆண்டு, கூட்டுறவு வங்கிகளின்மூலம் விவசாயிகளுக்கு 6,000 கோடி வரை புதிதாக பயிர்க் கடன் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது, காய்ந்து கிடக்கும் விவசாயிகளின் மனதில் நம்பிக்கையை விதைத்திருக்கிறது.





*முற்பகல் 11-55*

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அயராத முயற்சியின் காரணமாக இலங்கையிலே கைது செய்யப்பட்டிருக்கக்கூடிய மீனவர்கள் இன்று விடுதலையாகி, காரைக்கால் துறைமுகத்திற்கு வருகிறார்கள். இதற்காக தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும், மீனவ மக்களின் சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கண்ணீரிலும் கடலிலும் தவிக்கும் மீனவ மக்களின் நலன் காக்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கையில் மீன் வளத் துறைக்கு மொத்தமாக ரூ.243.79 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 13 கடலோர மாவட்டங்களில் வாழும் அம்மக்களுக்கு மட்டுமின்றி, தமிழகத்தின் வளர்ச்சிக்கும் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை. முக்கியமாக மீன்பிடி தடைக் காலம் மற்றும் மீன்பிடி குறைவாக உள்ள காலங்களில் வழங்கப்பட்டு வந்த மீனவர்களுக்கான நிவாரண உதவிகள் மாதம் ரூபாய் ஐந்தாயிரமாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு அம்மக்களுக்கு வசந்தகால மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சிறுபான்மை மக்களின் பேராதரவைப் பெற்ற அரசாகவும், சிறுபான்மை மக்களின்மீது பேரன்பைக் காட்டும் அரசாகவும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பீட்டு அளவில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மத கலவரங்களைக் கட்டுப்படுத்திய உறுதியான அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மை மக்களின்மீது இந்த அரசு எவ்வளவு அக்கறையாக இருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்கிறேன். சமீபத்திலே சகோதரி சுவாதி படுகொலை செய்யப்பட்டார். அது எல்லோருக்கும் ஆழ்ந்த வேதனையைத் தரக்கூடியது. அந்த நேரத்திலே சமூக இணையதளங்களிலே சில பொறுப்பற்றவர்கள் இதற்கு முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் காரணம் என்று தொடர்ந்து அவதூறு பரப்பிய நேரத்திலே இந்த அரசு நிதானமாகச் செயல்பட்டு, காவல் துறையை சுதந்திரமாகச் செயல்பட வைத்து, உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்தது, (மேசையைத் தட்டும் ஒலி) அவதூறுக்குள்ளான சிறுபான்மை மக்களுக்கு மிகப்

பெரிய ஆறுதலைத் தந்தது என்ற அடிப்படையிலே, நெஞ்சார்ந்த நன்றிகளை நான் இங்கே பதிவு செய்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தனது சொந்த செலவில், தனது பெயரை அழைப்பிதழில் போட்டு 'வாருங்கள்' என உரிமையோடு, மனமகிழ்ச்சியோடு நடத்தும் ஒரே நிகழ்ச்சி இப்ஃதார் நிகழ்ச்சி மட்டும்தான் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஜவஹர்லால் நேரு அவர்கள் சமூக நல்லிணக்கத்தை வளர்க்கும் பொருட்டாகவும், சிறுபான்மை மக்களை அரவணைக்கும் விதமாகவும் இப்ஃதார் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். நோன்பாளிகளை சகோதர சமுதாயத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் அழைத்து உபசரிக்கும் இந்த முறை இப்போதும் வட இந்தியாவிலே பின்பற்றப்படுகிறது. அந்த வகையில், முஸ்லிம் சமுதாய மக்களை அழைத்து, சொந்தச் செலவில் இப்ஃதார் விருந்து கொடுக்கும் ஜவஹர்லால் நேரு அவர்களின் நடைமுறையை தமிழ்நாட்டில் கொண்டு வந்தது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2001-2006 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தின்போது சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு வழங்க செய்யும் வகையிலே, அரசாணையைப் பிறப்பித்ததும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான். அதுதான் பின்னாளிலே இடஒதுக்கீடு சிறுபான்மையினருக்குக் கிடைக்க வழி செய்தது. எனவே, அம்மக்களுக்காக நாங்கள் கேட்கும் பல கோரிக்கைகளை நிறைவேற்றி தருவீர்கள் என்ற நம்பிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையிலே, முஸ்லிம்களுக்கான 3.5 சதவிகித இட ஒதுக்கீட்டை உயர்த்தித் தருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உறுதியாக இருக்கிறது. எனவே, அதை உயர்த்தித் தாருங்கள்.

முதல் கட்டமாக இந்த நம்பிக்கையை உறுதி செய்யும் விதமாக பள்ளிவாசல்களில் பணியாற்றும் மார்க்க அறிஞர்களான உலமாக்களுடைய ஓய்வூதியத் தொகை ஆயிரம் ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தித் தரப்படும் என்ற அறிவிப்பு, *(மேசையைத் தட்டும் ஒலி)* ஜமாத்தார்களின் மற்றும் மார்க்க அறிஞர்களுக்கு சாரல் மழையில் நனைந்த சந்தோஷத்தைத் தந்திருக்கிறது. அதற்காக நன்றிகளை மீண்டும் நாங்கள் பதிவு செய்கின்றோம்.



இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ஏழை கிறித்தவர்கள் ஜெருசலம் செல்ல நிதியுதவி வழங்கும் திட்டம் தமிழகத்தில்தான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தத் திட்டம் தொடரும் என அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

தமிழகத்திலே வாழும் ஈழத் தமிழ் அகதிகளின் நலன் காக்கும் வகையிலே, திருமண உதவித் திட்டங்கள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் யாவையும் இந்த அரசு சிறப்பாகச் செய்து வருகிறது. அம்மக்களின் நலன்களைப் பேணும் வகையில், ரூ.105.98 கோடி ஒதுக்கியிருப்பது உலகெங்கும் தேசத்தைக் கடந்த நதிகளாக வாழும் ஈழத் தமிழ் சொந்தங்களுக்கு ஒரு நற்செய்தி என்பதிலே ஐயமில்லை. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு ஈழத் தமிழர்களின்மீது வைத்திருக்கும் அக்கறையை இதன்மூலம் உணரமுடிகிறது.

உலகத் தமிழ் மாநாட்டை தஞ்சை மாநகரில் நடத்திய வரலாற்றுப் பெருமை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு உண்டு. அதன் வழியாக தமிழுக்கு பெருமை சேர்க்கும் வகையிலும், தமிழ் சான்றோர்களுக்கு வலிமை சேர்க்கின்ற வகையிலும் இந்த ஆட்சி செயல்படும் என்பதை நிரூபிக்கும் வகையிலும், புகழ் பெற்ற பெண் எழுத்தாளர்களுக்கான அம்மா இலக்கிய விருது, *(மேசையைத் தட்டும் ஒலி)* உலகளவிலேயே சிறந்த தமிழ் அறிஞர்களுக்கான உலகத் தமிழ்ச் சங்க விருது, நல்ல மொழிப் பெயர்ப்பாளர்களுக்கான சிறந்த மொழிப் பெயர்ப்பாளர்கள் விருது போன்றவை இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என்ற அறிவிப்பு தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடியது. மேலும், தமிழ் வளர்ச்சிக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறைக்கு ரூ.32.94 கோடி ஒதுக்கப்படும் என அறிவித்திருப்பது அரசியல் வேறுபாடுகளைக் கடந்து அனைவராலும் வரவேற்கப்படுகிறது. இவ்வாண்டு தனி தமிழ் இயக்கம் தொடங்கப்பட்ட 100-வது ஆண்டு ஆகும். தனி தமிழ் இயக்கத்திற்கு விதையாக இருந்தவர் ஐயா மறைமலை அடிகள் ஆவார்கள். இத்தருணத்தில் தமிழ் வரலாற்றின் வைரங்களில் ஒருவராகத் திகழும்

ஐயா மறைமலை அடிகளாருக்கு சிறப்புச் சேர்க்கும் வகையில், அவர் பிறந்த நாகப்பட்டினத்திலே நூலகத்துடன் கூடிய தனி தமிழ் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்குமாறு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களிடம் நான் வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் *12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். தமிமுன் அன்சாரி, உரையை முடியுங்கள்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** உரையை முடித்துவிடுகிறேன். தொகுதிக் கோரிக்கைகள். நான் வெற்றி பெற்று வந்திருக்கும் நாகப்பட்டினம் தொகுதி வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இந்துக்களும், முஸ்லிம்களும், கிறித்தவர்களும் நிறைந்து, ஒற்றுமையாக வாழும் ஒரு தொகுதி; சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் ஊர்களில் ஒன்று; கடல் கடந்து வெற்றிகளைப் பெற்ற, இந்தியாவின் ஒரே பேரரசாம் சோழப் பேரரசின் துறைமுகம் இயங்கிய ஊர்; ஒரு காலத்தில் உலகைத் தமிழகத்தோடு இணைத்த பட்டினம்; 1984 வரை சிங்கப்பூருக்கும், மலேசியாவுக்கும் பயணிகள் போக்குவரத்து அங்கே நடைபெற்றது. வ.உ.சி. கப்பல் தீப்பிடித்த பிறகு பயணிகள் போக்குவரத்து நின்று போனது. பிறகு சரக்குப் போக்குவரத்தும் நின்று போனது. அதனால் நாகப்பட்டினத்தின் வளர்ச்சியே தடைபட்டு போனது. இந்நிலையில்தான், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் முதன்முதலாக 1991 ஆம் ஆண்டிலே முதல்வர் பொறுப்பேற்றபோது, முதலில் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்தின் பெயரால் நாகப்பட்டினத்தை தனி மாவட்டமாக அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்பிறகு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு அமையும்போதெல்லாம் நாகப்பட்டினம் வளர்ச்சியைப் பெற்று வருகிறது. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நாகப்பட்டினம் மக்கள் மிகுந்த நன்றிக்கடன்பட்டு இருக்கிறார்கள். அந்த வகையில் நாகப்பட்டினத்தை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கோடும், காவேரி டெல்டா மாவட்டங்களினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில்கொண்டும், கடந்த ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தனியார் பங்கேற்புடன் பசுமை சூழலுடன்கூடிய ஆழ்கடல் துறைமுகம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அந்தக் கனவுத் திட்டத்தை விரைவிலே செயல்படுத்தி, சோழ மன்னர்களின் சரித்திரத்தைப் புதுப்பித்து நீங்களும், அந்தச் சரித்திரத்திலே



இடம்பெற வேண்டுமென்று இங்கே கோரிக்கையாக வைக்கின்றேன். நேரமாகிவிட்டது என்று சொன்னார்கள், நிறைவாக சொல்லிக்கொள்கிறேன்.

கொந்தளிப்பான கடல்தான் மிகச் சிறந்த மாலுமிகளை உருவாக்குகிறது. எதிர்ப்புகளும், விமர்சனங்களும்தான் சிறந்த தலைவர்களை உலகிற்கு அடையாளம் காட்டுகிறது. அந்த வகையில், பிரச்சினைகளை எதிர்கொண்டு, சவால்களை வென்றெடுத்து, துணிச்சலுடன் முடிவுகளை எடுக்கும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தனது தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றி, சமூக நீதி காத்த, சமத்துவம் வளர்த்த தலைவராக, தேச வரலாற்றில் இடம்பெற இறைவனிடம் பிராத்திக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரையும் அன்பால் அரவணைக்கும் பண்பால், தலைமைத்துவத்தால் அனைவரையும் தன்பால் ஈர்க்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அடிக்கடி பேச இப்படி வாய்ப்புகளை வழங்கி என்னைப் போன்றவர்களை ஊக்குவிக்குமாறு கேட்டு, விடைபெற்று அமர்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலையைப் பற்றி விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு வரியில்லாத நிதிநிலை அறிக்கை என்பதை நான் வரவேற்கிறேன். அதேசமயத்தில் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், காரைக்குடியிலே நீண்ட நாட்களாக சட்டக் கல்லூரி வேண்டுமென்று நாங்கள் சொல்லி வருகிறோம். அதேபோல, காரைக்குடியிலே மகளிர் கலைக் கல்லூரி ஒன்று வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறோம். இன்னொன்று,

கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், ஆரம்ப நிலையிலே இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்கள் கிராமப்புறங்களிலே சரியாகச் செயல்படுவது இல்லை என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் பல பள்ளிக்கூடங்களை மூடுகின்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணமென்றால், போதிய மாணவர்கள் அரசுப் பள்ளிகளிலே சேருவது கிடையாது. அதற்கு என்ன காரணம் என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 24,103 ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளும், 7,219 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் 22,34,995 மாணவர்கள் பயில்கின்றனர். ஒவ்வோராண்டும் தேவையின் அடிப்படையில் புதிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகள், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் அதன் விதிகளின்படி தொடங்கப்படுகின்றன. இதனால் தொடக்கப் பள்ளியில் பயிலும் அனைத்துக் குழந்தைகளும் அவர்களது குடியிருப்புகளுக்கு அருகிலேயே பள்ளி வசதியைப் பெறுவர். அதாவது, குடியிருப்பிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிற்குள் தொடக்கப் பள்ளியும், 3 கிலோ மீட்டர் தொலைவிற்குள் நடுநிலைப் பள்ளியும் அமைக்கப்படுகின்றன. இதன்படி கடந்த ஐந்தாண்டுகளில் கூடுதலாக 221 ஊராட்சி ஒன்றிய, நகராட்சி அரசு தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 112 ஊராட்சி ஒன்றிய, நகராட்சி அரசு தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறு பரவலாகப் பள்ளிகள் துவங்கப்படுவதால் குடியிருப்புகளிலிருந்து தொலைவிலுள்ள பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள், தங்கள் குடியிருப்புகளுக்கு அருகிலுள்ள பள்ளிகளில் சேர்ந்து படிக்கும் நல்வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் மாறுபடுவதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும், பெற்றோர்களின் விருப்பத்தையும், சமுதாயத்தின் தேவையையும் நிறைவேற்றும்பொருட்டு, தொடக்க மற்றும் நடுநிலைப்



பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளதால், ஆங்கில வழிக் கல்வியைப் பயில்வதற்காக அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் சேர்ந்து வருகின்றனர்.

2014-2015 ஆம் கல்வியாண்டில் ஆங்கில வழி வகுப்புகளில் மட்டும் 1,07,078 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, கல்வி பயின்று வருகின்றனர். இதன் காரணமாகவும் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர்கள் விகிதாச்சாரம் மாறுவதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. சாலை இணைப்பு, போக்குவரத்து வசதியில்லாத பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு பாதுகாவலுடன்கூடிய போக்குவரத்து வசதியும் 'அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்' மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 10,229 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். ஏழையெளிய பெற்றோர்களின் எதிர்பார்ப்பை ஈடுசெய்யும் மக்களின் அரசாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தம் 221 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன என்பதையும், 112 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தப் பள்ளியும் மூடப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆசிரியர் தேர்வு முறையில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டுவந்து, தகுதித் தேர்வு முறையை அறிமுகப்படுத்தி, ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுகிற காரணத்தால், தனியார் பள்ளிகளுக்குப் பிள்ளைகளை அனுப்ப வேண்டுமென்கிற பெற்றோர்களின் எண்ணம் மாறி, அரசுப் பள்ளிகளில் சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குத் தலைதூக்கி இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய புதிய நடைமுறை வரவேற்புக்குரியதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதன்வாயிலாகப் பள்ளி தேர்ச்சி விகிதங்கள் குறைந்திருந்த நிலை மாறி, நூற்றுக்கு நூறு சதவிகித மாணவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் பள்ளிகளிலிருந்து தேர்ச்சி பெற்றிருக்கின்றார்கள் என்ற வரலாறு இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசிரியர் நியமன நடைமுறை மாற்றத்தால் உருவாகியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருப்பது ஆரம்பக் கல்வி. ஆரம்பக் கல்வியிலே இன்றைக்கு அரசுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அறிக்கை வந்திருக்கிறது. பள்ளிகளில் குழந்தைகள் இல்லை, எனக்குத் தெரிந்துகூட ஒரு பள்ளியிலே ஆசிரியர் நிதமும் காலையிலேயே பள்ளிக்குச் செல்கிறார். ஆனால் அங்கே குழந்தைகள் இல்லை. இந்த நிலையை மாற்றுவதற்கு . . .

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாகப் பேசிக் கொண்டிருக்கிறார். எந்த மாவட்டத்தில், எந்தக் கிராமத்தில், எந்த ஊராட்சியில், எந்தப் பள்ளியில், எதனால் பள்ளிக் குழந்தைகள் சேர்க்கை விகிதம் குறைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அதற்குரிய விடை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை ஒன்றியம், கீழ்க்குடி பள்ளியில் ஆசிரியர் இருக்கிறார், குழந்தைகள் இல்லை. நான் குறிப்பிட்டுச் சொல்லாததற்குக் காரணம், பொதுவாக இந்த



அரசு அதிலே கவனம் செலுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் சொன்னேனேயொழிய, குற்றம் கண்டுபிடிப்பதற்காக அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மருத்துவமனை. சிவகங்கை மாவட்டம், சிவகங்கையிலே தலைமை மருத்துவமனை அமைந்திருக்கிறது. சிவகங்கை மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஏற்பட்டதால், அங்கே இருக்கக்கூடிய தலைமை மருத்துவமனையை காரைக்குடிக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது. ஆனால், முழுமையாக மருத்துவத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் சிவகங்கையிலிருந்து காரைக்குடிக்கு மாற்றப்படவில்லை. குறிப்பாக, J.D. போன்றவர்கள் எல்லாம் சிவகங்கையிலேதான் அலுவலகத்தை வைத்திருக்கிறார்கள். காரைக்குடியிலே இருக்கக்கூடிய மருத்துவமனைக்குப் போதுமான வசதிகள் இல்லை. C.T. scan, M.R.I. scan வசதி கிடையாது. சாதாரண scan செய்வதற்குக்கூட அதற்குரிய மருத்துவர்கள் அங்கே இல்லை. கட்டட வசதிகள் இல்லை. இதையெல்லாம் நீங்கள் கவனித்து உடனடியாக அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுகின்றபொழுது, மாவட்ட தலைமை மருத்துவமனையாக அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய அடுத்த பெரிய தாலுகா மருத்துவமனை தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட தலைமை மருத்துவமனையாக உயர்த்தப்படும். அந்த வகையிலே சிவகங்கையிலே மருத்துவக் கல்லூரி அமைந்ததற்குப் பின்னாலே, தாங்கள் குறிப்பிடுகின்ற காரைக்குடி அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக உயர்த்தப்பட்டு, அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், அங்கு எந்த வசதியும் செய்யப்படவில்லை என்று சொன்னீர்கள். அது மாவட்ட தலைமை மருத்துவமனையாக உயர்த்தப்பட்டதற்கு பின்னால் ரூ.2.26 கோடி செலவிலே அங்கே 50 bedded General Ward - பொதுப் பிரிவிற்கான கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அதேபோல, 50 bedded Maternity Ward - மகப்பேறுக்கான கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது. அதேபோல NRHM நிதியிலே

ரூ.112 இலட்சம் செலவிலே 36 படுக்கைகள் கொண்ட Maternity Block கட்டப்பட்டு பயன்பாட்டிலே உள்ளது. அங்கே இருக்கக்கூடிய மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. அங்கே M.R.I. scan போன்ற வசதிகள் வேண்டும் என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் நோக்கம், முதலிலே மருத்துவக் கல்லூரிகள் இருக்கக்கூடிய மாவட்டத்தின் தலைமை இடத்திலே M.R.I. scan அமைக்கப்படுவதுதான். சிவகங்கை மருத்துவக் கல்லூரியிலே C.T. scan பயன்பாட்டில் இருக்கிறது. M.R.I. scan நிறுவப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆக, முதலிலே மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு M.R.I. scan போன்ற வசதிகள் கொடுக்கப்பட்டு, அதற்கடுத்து, படிப்படியாக அனைத்து வசதிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு விரிவாக்கம் செய்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடிய விரைவிலே அதற்குரிய வசதிகளை செய்து தரும்படி உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மித்திராவயல் என்ற ஊரிலே இருந்த அரசுக்குச் சொந்தமான மருத்துவமனையிலே வேலை செய்த மருத்துவர் ஓய்வு பெற்றதனால் அந்த மருத்துவமனையை மூடி வைத்திருக்கிறார்கள். அதை உடனடியாகத் திறந்து செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, தேவக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புலியாலில் ஒரு புதிய மருத்துவமனை அமைப்பதற்குரிய . . .

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு மருத்துவர் ஓய்வு பெறுவதாலேயே அந்த மருத்துவமனையை மூடக்கூடிய நிலை இருப்பதாகச் சொல்வது தவறான கருத்து. இதுகுறித்து உடனடியாக நான் ஆய்வு செய்து, இந்த அவையில் எனது பதிலைத் தெரிவிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறான செய்தியைச் சொல்லவில்லை. அங்கே மருத்துவமனை இயங்குவதற்கான நடவடிக்கைகளை நீங்கள் செய்து தாருங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயக் கடன்களை நீங்கள் இரத்துச் செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஏறத்தாழ 5,250 கோடி ரூபாய் விவசாயக் கடன்களை இரத்து செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதை நான் வரவேற்கின்றேன். ஆனால், விவசாயத்தைப் பொறுத்தமட்டில் சில ஆண்டுகளுக்கு முன்பாகவே உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு, எவ்வளவு ஏக்கர் நிலங்களை ஒரு விவசாயி வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி 15 standard acre வரையில் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். சிறிய விவசாயி, மிகச் சிறிய விவசாயி என்ற பாகுபாடு இல்லாமல் அத்தனை விவசாயிகளின் விவசாயக் கடன்களை நீங்கள் இரத்துச் செய்ய வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்றால், விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்றால், நீங்கள் விவசாயக் கடன்களை இரத்துச் செய்ய வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நெல்லின் விலையை தற்பொழுது கொடுக்கின்ற விலையிலிருந்து குவின்டால் ஒன்றுக்கு 1,000 ரூபாய் இன்னும் அதிகப்படுத்தித் தர வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிப்பது மத்திய அரசாங்கம்தான். மாண்புமிகு மூத்த சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவருக்கு இது தெரியும். நீங்கள் மத்தியில் ஆட்சியில் இருந்த காலத்திலெல்லாம் அதைப் பற்றி ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடாமல், இப்போது மாநில அரசாங்கத்தைப் பார்த்து நீங்கள் 1,000 ரூபாய் உயர்த்திக் கொடுங்கள் என்று சொன்னால் அது எந்தவகையில் நியாயம். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுடைய நலனைக் கருதி, விவசாயிகளுக்கு மத்திய அரசாங்கம் சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தாலும், ஊக்கத் தொகை கொடுத்தால் மற்ற மானியங்கள் நிறுத்தப்படும் என்ற கட்டுப்பாடுகள் இருந்தாலும், அந்த நிலையிலும் ஒரு குவின்டால் சன்ன இரக நெல்லுக்கு 70 ரூபாய், சாதாரண இரக நெல்லுக்கு 50 ரூபாய் எனவும் ஊக்கத் தொகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்புப் பருவத்தில் மட்டும், தமிழக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட 16 இலட்சத்து 72 ஆயிரம் மெட்ரிக் டன் நெல்லுக்கு 104 கோடி ரூபாயை ஊக்கத் தொகையாகக் கொடுத்த தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, விவசாயிகள் நலனில் அனைத்து நாட்களும் அக்கறையோடு செயல்படுகின்ற முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

பிற்பகல் 12-20

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் என்பது தமிழகத்தின் முதுகெலும்பு என்று சொல்வோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மத்திய அரசுக்கும் எந்தெந்த வகையிலே தொடர்பு இருக்கிறது என்பதையும் நான் அறிவேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவுக் கூர்ந்து



விவசாயிகளுக்கு இந்த உதவியைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இதேபோல. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சாதாரண மக்களுக்கு, அது விவசாயிகளாக இருந்தாலும், எந்தத் தரப்பு மக்களாக இருந்தாலும் அவர்களுக்குரிய உரிமையை பெற்றுத் தர முடியும் என்கிற நம்பிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளிப்படுத்தியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சிவகங்கை மாவட்டத்தில் விளைகிற ஜோதி நெல், T.K.M-9 மற்றும் சீர்காழி, சிதம்பரம் போன்ற பகுதிகளில் விளைகிற குந்தாலி போன்ற நெல் எல்லாம் அன்றைக்கு கொள்முதல் செய்யப்படவில்லை என சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே அவையில் உடனடியாக உத்தரவிட்டு, அந்த நெல் எல்லாம் கொள்முதல் செய்யப்பட்டது என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்குகின்ற வகையில், தமிழகத்தில் இருக்கிற விவசாயிகளுக்குக் குறுகிய கால வட்டிக் கடன் அறிவித்தார்கள். இரண்டு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு விலை விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்கான வழியைச் செய்துள்ளார்கள். கூட்டுறவுத் துறையின் சார்பாக இன்றைக்கு 5,10,600 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள 3,789 கிடங்குகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 5 ஆண்டுகளில் இவ்வளவு கட்டிக்

கொடுத்திருப்பது என்பது, இந்திய திருநாட்டிலேயே வேறு எந்த மாநிலத்திலும் செய்யப்படாத ஒரு மாபெரும் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளின் நன்மைக்காக சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் எனப் பாகுபாடில்லாமல் சொட்டு நீர்ப் பாசனத்திற்கு முழுமையாக இன்றைக்கு உதவி செய்திருக்கிறார்கள். மேலும், குறு, சிறு விவசாயிகள் விளைவித்த பொருட்களை அவர்கள் வைத்துக்கொள்வதற்கு இடம் இருக்காது என்ற காரணத்தினால்தான், இந்தக் கிடங்குகளைக் கட்டிக் கொடுத்து, நல்ல விலை கிடைக்கின்ற வரையில் 6 மாதம் வரை வைத்துக்கொள்ளலாம். வைக்கப்படுகின்ற பொருட்களுக்கு ஏறத்தாழ 80 சதவிகிதம் அங்கே கடன் வழங்கப்படும். அந்த Godown-ல் வைத்து, விற்பனை செய்யலாம் என்ற ஒரு வாய்ப்பையும் வழங்கியுள்ளார்கள்.

உரம் தட்டுப்பாடற்ற முறையில் கிடைக்க வேண்டும் என்பதற்காக 150 கோடி ரூபாய் கூட்டுறவு விற்பனை இணையத்திற்குக் கொடுத்தார்கள். வேளாண் பயிரிடும் காலத்திலும், அறுவடைக் காலத்திலும் இன்றைக்குப் பணியாளர்கள் கிடைக்காத சூழ்நிலையில், வேளாண்மையில் ஒரு புதுமையை உருவாக்குகின்ற வகையில் இயந்திரமயமாக்குகின்ற வகையில், 2104 சங்கங்களுக்கு ஏறத்தாழ ஒவ்வொரு சங்கமும் 50 சதவிகிதம் மானியத்திலே 20 இலட்சம் ரூபாய் வரைக்கும் வாங்கிக்கொள்ளலாம் என்று ஓர் அற்புதமான திட்டத்தைக் கொடுத்து மாண்புமிகு அம்மா அவர்கள் கருவிகளை எல்லாம் வாங்கிக் கொடுத்தார்கள். இதன் மூலமாக விவசாயிகளுக்கு அறுவடைக் காலங்களிலும், பயிரிடும் காலங்களிலும் வாய்ப்பு, வசதி கொடுத்து, தனியாரிடத்திலே அவர்கள் கடன் வாங்கக் கூடாது, அதிக வட்டியாகிவிடும் என்ற அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் இதுபோன்று செய்திருக்கிறார்கள். விலை மற்றும் விளைச்சல் குறைகின்ற காலங்களில் 100 கோடி ரூபாய் விலை நிலைப்படுத்தும் நிதியையும் சேர்த்துக் கொடுத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் உளுந்தம் பருப்பு மற்றும் வற்றல் வாங்கியிருக்கிறார்கள். புளி வாங்கி மொத்த கூட்டுறவு பண்டகச் சாலை மூலமாக விற்பனைக்கு வழியெல்லாம் செய்து இருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நடவடிக்கைகள் விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்குத்தான். ஒரு மாநில அரசு என்பது ஓரளவுக்குத்தான் நிதி ஆதாரத்தை பெற்றிருக்கிறது. விவசாயிகளுக்கு



எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவுக்குத்தான் செய்ய முடியும். எனவே, அந்த அளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இன்றைக்குச் செய்திருக்கிறது என்பதையும், தமிழகத்தில் இருக்கிற விவசாயிகள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசே இந்த நெல் கொள்முதலைச் செய்யலாம் என்பது என்னுடைய கருத்து. அதை நமது அரசு, மத்திய அரசை வற்புறுத்தி, இந்தக் கொள்முதலைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு முன்பாக மத்தியிலே ஆட்சி செய்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஆட்சிக் காலத்திலே விவசாயக் கடனை, 72 ஆயிரம் கோடி ரூபாயை இரத்துச் செய்தது. ஏறத்தாழ 4 கோடியே 36 ஆயிரம் விவசாயிகள் அந்தவகையிலே பயனடைந்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக கரும்பு. கரும்பு விவசாயத்தைப் பொறுத்தமட்டில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு தவறான கருத்தை பதிவு செய்கின்றார்கள். உண்மை என்னவென்றால்--இங்கேயிருப்பவர்கள் எல்லோரும் விவசாயிகள்தான். விவசாயக் குடும்பத்தைச் சார்ந்து வந்திருக்கிறோம். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் உரத்திற்கு மானியம் வழங்கியதை இரத்துச் செய்தார்கள். விவசாயிகளுடைய விவசாயத்திற்கு ஆதாரமாக இருப்பது உரம்தான். இன்றைக்கு அந்த உரத்தினுடைய விலை பன்மடங்கு உயர்ந்துவிட்டது. இந்த மாபெரும் தவறைச் செய்ததால், இந்திய அளவில் பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் இறந்துவிட்டார்கள்.

[திரு. செல்லூர் கா. ராஜு] [2016 ஜூலை 28

தற்கொலைக்கு ஆளாக்கப்பட்டார்கள். இந்த நிலையில் அந்த அரசாங்கம் தேர்தலைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில்தான் கடனை இரத்துச் செய்தார்களேயொழிய வேறு ஒன்றும் இல்லை. அன்றைக்கு இரத்துச் செய்தார்கள், அதனால் யார் பயனடைந்தார்கள்? அன்றைக்கு வாங்கிய உரத்தினுடைய விலை எவ்வளவு? இன்றைக்கு விற்கும் உரத்தின் விலை என்ன என்பதை நீங்களெல்லாம் பார்த்துக்கொள்ளுங்கள். இதற்கு, அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக கட்சிகள்தான் முழுக்க முழுக்க காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) உண்மையைச் சொல்லியாக வேண்டும். இதை நான் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். தவறாக, உங்களைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. (குறுக்கீடுகள்) என்ன நடந்தது? எதனால் அவர்கள் அதனைச் செய்தார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) கையெழுத்திட்டது நீங்கள். (குறுக்கீடுகள்) அப்போது அந்தத் துறை அமைச்சராக இருந்தவர் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர். (குறுக்கீடுகள்) நீங்கள் அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்தீர்கள். (குறுக்கீடுகள்) 72 ஆயிரம் கோடி ரூபாயை இரத்துச் செய்தார்கள் என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பதிவு செய்ததால்தான் இதை நான் சொல்கிறேன். இல்லையென்றால் அதைச் சொல்வதற்கான வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, என்ன? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)



2016 ஜூலை 28]

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்களுடைய நடவடிக்கை காலையிலிருந்து இப்படித்தான் இருந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேகர்பாபு அவர்கள் காலையிலிருந்து இதேபோல்தான் நடந்துகொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர், (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசாங்கமே நெல்லைக் கொள்முதல் செய்யலாம் என்கின்ற ஒரு செய்தியை இங்கே அவருடைய ஆலோசனையாகச் சொன்னார். மத்திய அரசாங்கத்தினுடைய agency தான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திற்கு ஓர் ஆண்டிற்கு 40 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி தேவைப்படுகிறது. இந்தத் தேவையில் நம்முடைய கொள்முதலிலிருந்து வரப்பெறுகின்ற அரிசி 15 இலட்சம் மெட்ரிக் டன்தான். இடையிலே இருக்கின்ற இடைவெளியைச் சரி செய்வதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசுடன் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை 1-10-2002 அன்று செய்துகொண்டார்கள். அதனடிப்படையிலேதான் மத்திய அரசாங்கத்தினுடைய agency ஆக மத்திய அரசாங்கத்திடமிருந்து பணம் பெறுவது, அதனை அரிசியாக மறுபடியும் deposit செய்து சரி செய்வது என்று, இந்த முறையைத்தான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து கொண்ட அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் எல்லா காலமும் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது என்பதையும், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் இதைத்தான் பின்பற்றினார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

**திரு. கரி. இராமசாமி:** நன்றி. மத்தியில் இப்பொழுது இருப்பது பா.ஜ.க. அரசு. தமிழகத்திலே இருப்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. விவசாயிகளுக்கு உதவி செய்யுங்கள் என்று நாங்கள் இப்போது உங்களைக் கேட்கிறோம். நீங்கள் ஏன் இதற்கு முன்பாக நடந்ததை உதாரணத்திற்குக் கொண்டு வருகிறீர்கள்? (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், நான் சொல்கிறேன். உதாரணங்கள் சொன்னால் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, ஐயா, இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** இருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். அந்த உர மானியத்தை இரத்துச் செய்ததினால்தானே இப்போது உர விலையெல்லாம் கூடியிருக்கிறது. அதைத்தான் சொல்கிறோம். அதை நீங்கள் சொன்னதினால்தான் நாங்கள் சொல்கிறோம். இல்லையென்றால் நாங்கள் எதற்குப் பேசுகிறோம். நீங்கள், காங்கிரஸ் ஆட்சியிலே ரூ.72,000 கோடி கடனை இரத்துச் செய்தோம் என்று சொன்னீர்கள். நீங்கள்தான் பழையதை எடுத்துப் பேசுகிறீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இப்போது ஒரு மாநில அரசால் எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவுக்குச் செய்து வருகிறார்கள். இந்தியாவிலேயே அதிகமாக உதவி செய்யக்கூடிய ஆற்றல் படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்காக நிறைய திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மானியக் கோரிக்கை விவாதம் வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளலாம். எனவே, இதை விட்டுவிட்டு நீங்கள் வேறு subject-க்குச் சென்றீர்களென்றால் நல்லதென்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதம் வணங்குகிறேன். தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் விவசாயிகளின் காவலனாக



இருக்கின்றார்கள் என்பதை மரியாதைக்குரிய காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று விவசாயிகளுடைய தோழனாக, குடும்ப நண்பனாக இருந்து, இன்றைக்கு விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றி, அனைத்து நலத் திட்டங்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகிறார்கள். அதன் முதல் படியாகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறு, சிறு விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்துள்ளார்கள். காவேரி டெல்டா மாவட்டங்களினுடைய விவசாயத்தை வளர்க்கவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றவும் சுமார் 54 கோடியே 65 இலட்சம் ரூபாய் அளவில் தொகுப்புத் திட்டத்தில் நிதி வழங்கி, அந்த விவசாயிகளுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தி, சுமார் 487 கோடி ரூபாயை மானியமாக ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளுடைய நலனுக்காக தற்போதைய நிலையைக் கருதி, பண்ணை விவசாயம் மற்றும் இயந்திரமயமாக்குதலைப் புகுத்தி, புதிய தொழில்நுட்பங்களுடன் விவசாயத்தை வளர்த்து வருபவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மைத் துறையில் இன்றைக்கு புதுமையைப் புகுத்தி, இரண்டு மடங்கு உற்பத்தி செய்கின்ற வேளாண் விவசாயிகளுக்கு, 3 மடங்கு வருமானம் வருகின்ற அளவிற்கு பொற்கால ஆட்சி நடத்தி வருபவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளைப் பற்றிக் கவலைப்பட்டு அவர்களுக்கு வாழ்வளிப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். விவசாயிகளைப் பற்றிக் கவலைப்படாமல், எல்லாவற்றையும் விலையேற்றி அவர்களுக்குக் கெடுதல் செய்ததுதான் காங்கிரஸ் ஆட்சி என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னை யாரென்று சொல்ல விரும்பியபோது, 'நான் ஒரு விவசாயி' என்று சொன்னவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, 'முன்பு நடந்ததையெல்லாம் இப்பொழுது ஏன் சொல்கிறீர்கள்' என்று கேட்டார்கள். அதனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இப்போது செய்துகொண்டிருக்கிற ஒரு சாதனையை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) என்னுடைய மாவட்டம் டெல்டா மாவட்டம். விவசாயி என்கிற முறையிலே நான் பதில் சொல்ல விரும்புகிறேன். 'குறு, சிறு விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்வதிலே, இன்னும் கூடுதலாகத் தள்ளுபடி செய்யலாம், கூடுதலாகத் தள்ளுபடி செய்யலாம்' என்று திராவிட முன்னேற்றக் கழக மற்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எல்லோருமே பேசுகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே உண்மையாக என்ன நடந்திருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிய வேண்டும். ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வறட்சி ஏற்படுகிறபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் வறட்சி நிவாரணத்தைத் தாராளமாக வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவதாக, நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்கிற பேய் மழை அல்லது புயல், வெள்ளம் போன்ற காரணங்களினால் பயிர்கள் பாதிக்கப்பட்டால், பாதிக்கப்பட்ட பயிரின் அளவிற்கு ஏற்றவகையில் நஞ்சை, புஞ்சை என்று இரண்டாகப் பிரித்து, அதற்கேற்றவகையில் நிவாரணத் தொகையை மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக வருவாய்த் துறையின்மூலம் கணக்கெடுத்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவதாக, எந்தளவுக்கு பயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறதோ, அந்தளவுக்குரிய தொகையை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் நஷ்டஈடாக வழங்குகிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா



அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான்காவதாக, இப்பொழுது குறு, சிறு விவசாயிகள் செலுத்த வேண்டிய கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழுமையாக எதையும் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. இன்னும் எங்களுக்குத் தேவை என்றுதான் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, கரும்பு விவசாயிகள் தமிழகத்திலே அதிகமான சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை. குறிப்பாக நான் சொல்ல விரும்புகிறேன். முதல் கட்டமாக அரசு அறிவித்த தொகையிலிருந்து ஏறத்தாழ ரூ.300/- குறைவாக தனியார் ஆலைகள் வழங்கியிருக்கின்றன. அந்த வகையிலே பார்க்கும்போது, ரூ.620 கோடி அளவிற்கு இன்னும் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை.

நீதிமன்றம் ஒரு தீர்ப்பைச் சொல்லியிருக்கிறது. என்ன தீர்ப்பு சொல்லியிருக்கிறது என்றால், வாடகைக்காக ரூ.100/- உட்பட தனியார் ஆலைகள் ரூ.2,850/- வழங்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறது. ஆனால், ரூ.2,300/- மட்டுமே வழங்கப்படுகிறது. இந்த வகையில் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய தொகை ஏறத்தாழ ரூ.550 கோடி. இதற்குக் காரணம் என்னவென்றால், தனியார் சர்க்கரை ஆலையைச் சார்ந்தவர்கள் அவர்களுக்குள் ஒரு சிண்டிகேட்டை அமைத்து விவசாயிகளுக்கு ஒரு பாதகமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டும். அரசு ஏன் கவனம் செலுத்தாமல் இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சர்க்கரை ஆலைகளும், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களும் சேர்ந்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு 2013-2014, 2014-2015, 2016-2017 ஆகிய மூன்று பருவங்களுக்குண்டான நிலுவைத் தொகையை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கு கோடிட்டுக் காட்டினார்கள்.

கர்நாடகா, ஆந்திரா போன்ற மற்ற மாநிலங்களைவிட மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையான ரூ.2,300/-உடன், வாடகைக் கட்டணம் (transport cost) ரூ.100/-ஐயும் சேர்த்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் தமிழகத்தில்தான் வழங்குகின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இன்றைய சூழ்நிலையில், 2013-2014, 2014-2015, 2015-2016 ஆகிய மூன்று பருவங்களுக்குண்டான சர்க்கரை விலையில் ஏற்பட்ட மாபெரும் விலை வீழ்ச்சி, ரூ.19/-, ரூ.20/-, ரூ.21/-, ரூ.22/- என்ற விலை வீழ்ச்சியின் காரணமாக கரும்பு விவசாயிகளுக்கும், குறிப்பாக, தனியார் ஆலை உரிமையாளர்களுக்கும் மிகப் பெரிய இடைவெளி ஏற்பட்டுவிட்டது. இதன் காரணமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், தற்போதைய 15-வது சட்டமன்றப் பேரவையில் தொழில் துறை அமைச்சராக நான் வந்ததற்குப் பிறகு, பல்வேறு காலகட்டங்களாக ஆலை நிருவாகத்தோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், பல்வேறு கட்டங்களாக ஆலை நிருவாக உரிமையாளர்களை, தனியார் சர்க்கரை ஆலை உரிமையாளர்களைப் பலமுறை அழைத்துப் பேசி, கரும்பு நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது. பல்வேறு வகைகளிலும் வலியுறுத்தி இருக்கின்றோம். மைய அரசு நிர்ணயித்த விலையில், FRP--தனியார் சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் போக்குவரத்துக் கட்டணம் உட்பட அனைத்து கட்டணங்களையும் படிப்படியாகக் கொடுப்பதாக



ஒப்புக்கொண்டுள்ளார்கள். மைய அரசு நிர்ணயித்த விலையைக்கூட மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா போன்ற பிற மாநிலங்களில் தனியார் ஆலை நிருவாகங்கள் வழங்கவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், தனியார் சர்க்கரை ஆலை நிருவாகம், மைய அரசு நிர்ணயித்த விலையை, போக்குவரத்துக் கட்டணம் உட்பட படிப்படியாக நமது மாநிலத்தில் வழங்கி வருகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் சர்க்கரை ஆலை உரிமையாளர்கள், மைய அரசு நிர்ணயித்த விலையை படிப்படியாக வழங்குவதாகவும், மாநில அரசு பரிந்துரை செய்த விலைக்கு காலக்கெடு கேட்டிருக்கிறார்கள். அதில் சிரமங்கள் இருப்பதால் காலக்கெடு கேட்டிருக்கிறார்கள். மேலும், மகாராஷ்டிரா, ஆந்திரா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களில் உள்ளதைப்போன்று முத்தரப்புக் குழு அமைத்து, சர்க்கரை விலைக்கேற்ப இலாபத்தில் ஒரு பங்கீட்டினை விவசாயிகளுக்கும் பணமாக வழங்கலாம் என்ற ஒரு திட்டத்தையும் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தில் 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், 2 பொதுத் துறை நிறுவனங்களும் மற்றும் 25 தனியார் சர்க்கரை ஆலைகளும் இருக்கின்றன. நீண்ட காலத்திற்கு முன்பு 250 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி நடைபெற்றது. தற்போது படிப்படியாக 150 இலட்சம் டன்னாகக் குறைந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆலை நிருவாகத்தையும் மற்றும் வேளாண் கரும்பு சாகுபடி செய்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களையும் காப்பாற்ற வேண்டிய நிலைமையில் இருக்கின்றார்கள். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், சர்க்கரை கட்டுமானம் 9.5 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ளது. பிற மாநிலங்களில் சர்க்கரை கட்டுமானம் 12 சதவிகிதமாக இருக்கின்றது. மேற்கண்ட சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, கரும்பு விவசாயிகளினுடைய நிலுவைத் தொகையை வழங்குவதற்குண்டான நடவடிக்கையை தமிழக முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, தகுந்த முடிவெடுக்கப்படும், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளைக் காப்பாற்றித் தாருங்கள் என்று உங்களிடம் நான் கோரிக்கை வைக்கிறேன். ஏறத்தாழ 1,500. . .

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** அது ஒரு agro based industry. தனியார் சர்க்கரை ஆலைகள் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பைத் தருகின்ற ஆலைகளாகும். அவை, விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகளாகவும், ஊரகப் பகுதிகளில் அமையப் பெற்றுள்ள விவசாயிகளுக்கான தொழிற்சாலைகளாகவும் இருக்கின்றன. இத்தொழிற்சாலைகள் கிராமப்புறங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் இலட்சோபலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற நிறுவனங்கள் என்கின்ற காரணத்தினால், இது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். இரண்டையும் இரண்டு கண்களாகப் பாவிக்கும்—வேளாண் பெருங்குடி மக்களை ஒரு கண்ணாகவும், ஆலை உரிமையாளர்களை ஒரு கண்ணாகவும் பாவிக்கும்—மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,580 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வரவேண்டிய தொகை தனியாரிடம் இருக்கிறது. அதுசம்பந்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆண்டுக்காண்டு பற்றாக்குறை அதிகமாக வருவதாக நான் எண்ணுகிறேன்.





இப்பொழுது 500 டாஸ்மாக் கடைகளை மூடியிருக்கிறீர்கள். அதிலே 1,500 கோடி ரூபாய் இழப்பீடு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் பல இலவசத் திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். அதனால், இழப்பீடு ஏற்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், வருவாயை ஏன் அதிகப்படுத்தவில்லை? வருவாயை அதிகப்படுத்துவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. அதை நீங்கள் திறம்படக் கையாள வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, I.A.S. அதிகாரி தலைமையிலே ஒரு குழுவை அமைத்தீர்கள். இப்பொருள் நீதிமன்றத்தில் இருக்குமென்று நான் நினைக்கிறேன். 16,000 கோடி ரூபாய் இழப்பீடு ஏற்பட்டிருப்பதாக அவர் சொல்லியிருக்கிறார். அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, வருவாய்ப் பற்றாக்குறையையும், நிதிப் பற்றாக்குறையையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையென்று முதலில் குறிப்பிட்டார். அடுத்து ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார். நல்ல பல நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வருவாயைப் பெருக்க வேண்டுமென்றால், ஒன்று, வரி போட வேண்டும். வரி போடுவதற்குரிய சூழ்நிலை இப்போது இல்லை. இன்னொன்று, விவசாய உற்பத்தித் திறன்களை அதிகரிக்க வேண்டும். விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு இனங்களில் விவசாயிகளுக்கு மானியமாகவும், உதவிகளாகவும் செய்து, இந்த வருடத்தின் நெல் தானிய உற்பத்தியை 127 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 147 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்படும் என்று அறிவித்து, அது நல்லவிதமாகச் சென்று கொண்டிருக்கின்றது.

இன்னொன்று, தொழிற்சாலைகளைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அதன் மூலமாகப் பொருளாதார வளர்ச்சி உருவாகும். பொருளாதார வளர்ச்சி உருவாக்கப்படுகின்றபோது, நமக்கு வரி கிடைக்கும். அந்த வரியின் மூலமாக வருவாய் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. 2023 ஆவணத்தின் மூலமாகப் பல்வேறு தொழில் திட்டங்கள் இங்கு வந்து சேருவதற்கு நல்ல பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன். உலக முதலீட்டாளர்கள் மாநாடு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் நடத்தப்பட்டு, கிட்டத்தட்ட 2,42,160 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு தொழிற்சாலைகள் இங்கு வந்து சேர்ந்திருக்கின்றன. அந்த நிகழ்வும் தொடர் நிகழ்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆக, பொருளாதாரத்தை உந்துகின்ற நிலையில், வருவாயைப் பெருக்குவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல பல முயற்சிகளை எடுத்து வருகின்றார்கள். அதிக வருவாய் கிடைக்கக்கூடிய நல்ல வாய்ப்பு எதிர்காலத்தில் உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலே உண்மையும் இருக்கிறது. 100 கோடி ரூபாய் (குறுக்கீடுகள்) சொல்லிவிடுகிறேன். ரூ.100 கோடி செலவிலே உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்த சிறப்பாக ஏற்பாடு செய்தீர்கள். அதனுடைய விளைவு என்ன? இப்போது தமிழகத்திலே எவ்வளவு முதலீடுகள் வந்திருக்கின்றன? நீங்கள் முதலிலே சொன்ன முதலீடுகள் எவ்வளவு? இப்போது வந்திருக்கக்கூடிய முதலீடுகள் எவ்வளவு? அந்த முதலீடுகள் ஏன் அவ்வளவு குறைவாக இருக்கின்றன? நீங்கள் ஒவ்வொரு முறையும் சொல்கிறீர்கள். ஆனால், அவை நடைமுறைக்கு வரும்போது நாம் எண்ணியபடி இருப்பது கிடையாது. அடுத்தப்படியாக, இன்னொரு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில்கள் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. ஒப்பந்தம் போட்டு ஓராண்டுகூட ஆகவில்லை. ஓராண்டிலேயே அனைத்துத் தொழில்களும் வராது. மேலும், அவை பெரிய தொழில் நிறுவனங்களாக இருக்கின்ற காரணத்தினால், 3-7 ஆண்டிற்குள் அந்தத் தொழில் நிறுவனத்தைக் கொண்டு வருவதாகத்தான் ஒப்பந்தமே போடப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நிதிநிலை அறிக்கையிலே, இந்த ஓராண்டுக் காலத்திற்குள் போடப்பட்ட ஒப்பந்தங்களில் எவ்வளவு தொழில்கள் வந்திருக்கின்றன; எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்ற விவரங்களும் இருக்கின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள், நிதிநிலை அறிக்கையின் 42 ஆம் பக்கத்தை சற்று திருப்பிப் பார்க்கவும். அதிலே, உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலமாக 23,258 கோடி ரூபாய் முதலீடுகள் இங்கே பெறப்பட்டு, 48,145 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைத் தொடர்ந்து

நடத்துங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். அதிகமான முதலீடுகளை தமிழகத்திற்குப் பெறுங்கள். தமிழகத்தில் இருந்த தொழில்கள் ஒவ்வொன்றாக வேறு மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) சொல்லவிடமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழ்நிலையுள்ள ஒரு தலைசிறந்த மாநிலம் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து வசதிகளும் நிறைவுபெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கின்றது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். சில பேர் சொல்கிறார்கள், இங்கிருக்கும் தொழில்கள் பக்கத்து மாநிலமான ஆந்திராவிற்குச் சென்றன என்று. அப்படிச் சென்ற நிறுவனங்கள் அங்கே தொழிலைச் சரியாக நடத்த முடியவில்லை என்று திரும்பவும் தமிழ்நாட்டிற்குத்தான் வருகின்றன என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், 29-1-2016-ல் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஒப்பந்தம் போட்ட 7 நிறுவனங்களை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கரங்களால் துவக்கி வைத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 7 நிறுவனங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு உரிய வசதிகள், single window system - ஒற்றைச் சாளர முறையில் அனைத்து clearance-களும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

Delta Electronics என்ற company-யினர் இங்கிருந்து போவதாக இருந்தார்கள். அந்த நிறுவனம் குருபரபள்ளியில்தான் தொழில் தொடங்க நிலம் கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஒப்புதலோடு அவர்களுக்கு 124 ஏக்கர் நிலம் கடந்த வாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை நான் குறிப்பிடக்



கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஒரு தொழில் நிறுவனமும் இங்கிருந்து போவதற்கு ஒருக்காலும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதைக் கூறி, தொழில் மேலும் வளரும், வளரும் என்பதைக் குறிப்பிட்டு அமருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015 ஆம் ஆண்டு ரூ.19,574 கோடிக்கு பரிந்துரைகள் வந்தன. ஆனால் முதலீடோ வெறும் ரூ.501 கோடி. இதைச் சரி செய்யுங்கள் என்று நான் சொல்கிறேன். இதைக் குற்றமாகச் சொல்லவில்லை. பரிந்துரை எவ்வளவு, முதலீடு செய்திருப்பது எவ்வளவு? இதற்கு எவ்வளவு வித்தியாசம்? அதைச் சரி செய்வதற்கு உரிய நடவடிக்கையை எடுங்கள் என்று சொல்கிறேன், அவ்வளவுதான், வேறு ஒன்றும் இல்லை. அடுத்து, மதுவிலக்கை பொறுத்தமட்டில், காங்கிரஸ் கட்சி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இப்போது ஒரு மணி நேரம் ஆகிவிட்டது, உரையை முடியுங்கள். இன்னும் 2 உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேச வேண்டும். இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உட்கார வேண்டும் என்று சொன்னால் உட்கார்ந்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உட்காருங்கள், (குறுக்கீடு) நன்றி, நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** பொற்கால ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

[திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி] [2016 ஜூலை 28

*சீரிய தலைமையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் மொத்தம் ரூ.2,42,160 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் ரூ.16,532.67 கோடி அளவிற்கு 10,073 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அடுத்து வரக்கூடிய இரண்டு ஆண்டுகளில் முதலீடு செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட 10,073 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இதுவரை 3,156 ஒப்பந்தங்கள்மூலம் 2,724.46 கோடி மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டுள்ளன. இதன்மூலம் 36,219 நபர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்பதனைத் தங்கள் வாயிலாகக் கேள்வியை எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.*

***திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** *மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நான் நித்தம் நித்தம் போற்றி வணங்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவன்போடு வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களே, என்னை வாழ வைக்கும் எங்கள் குல விளக்கே, கழகத்தின் காவல் தெய்வமே, உண்மை விசுவாசிகளுக்கு உயர்வு தரும் உன்னதத் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகள் வாழ்வு ஏற்றம் பெற காலம் தந்த கருணைக் கொடையே, அன்னைத் தமிழ் பூமி காக்கும் எந்தையே, அகிலமே அதிசயிக்கும் விந்தையே, முக்காலும் உழைக்கும் சிந்தையே, முத்தமிழர் வாழ்வுக்கு வழிகாட்டும் தாய் உருவத் தமிழகமே, தாலிக்குத் தங்கம் தரும் பொன்மனமே, தாய்க்குலத்திற்கு உள்ளாட்சியில் சரி பாதி அங்கம் தரும் அதிசயமே, (மேசையைத் தட்டும் ஒலி) வான்நோக்கும் பயிருக்கு வாஞ்சையாகிப் பொழியும் மழையே, வளர்தமிழ் பூமிக்கு வசந்தத்தை வரவு வைக்கும் வாகையே, பெண் விடுதலை என்னும் பெரியாரின் கனவுகளைப் போராடி வென்றெடுத்த போராளியே, அமுத மொழி தமிழ் காக்கும் அன்பு உள்ளமே, உழைப்பவரின் நலன் காக்கும் தொழிலாளர்களின் விடிவெள்ளியே, அனைவருக்கும் சமூக நீதி கிடைத்திட போராடும் சமூக நீதிக் காத்த வீராங்கனையே, அம்மா, உங்கள் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்குகின்றேன்.*



2016 ஜூலை 28][திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்]

*மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்த கம்பம் தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 32 ஆண்டுகளுக்குப் பின்னால் ஆட்சியிலே இருக்கின்ற கட்சி மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற அதிசயத்தை, சரித்திரச் சாதனையை நிகழ்த்திக் காட்டியவர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்', 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என எட்டுத் திக்கும் முழங்கி, மக்களின் நலனே தன் நலன் என்று கருதி தமிழர் வாழ, தமிழ்நாடு தழைத்தோங்க, தமிழ் மக்கள் வாழ்வில் வளம் பெற, அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் எங்கள் அன்பு அன்னையின் சீரிய முயற்சியால் காவேரி ஆணையத்தின் இறுதித் தீர்ப்பு மத்திய அரசின் அரசிதழில் வெளியானது. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தியது நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னான சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-00*

*தமிழகத்தின் தென்மேற்கு திசையில், கடைக் கோடி கிராமமாக உள்ள கம்பம் புதுப்பட்டி என்னும் சிறு கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளர், மாவட்டக் கழக இணைச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர், கழக அண்ணா தொழிற்சங்கப் பேரவையின் செயலாளர் என்னும் கட்சியின் உயர் பதவிகளை எல்லாம் கொடுத்ததுடன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதியாக 3 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றுகின்ற அரசு பதவியை வழங்கியதுடன், சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில் மூன்று முறை போட்டியிட வாய்ப்புகள் வழங்கியும், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ஆக வாய்ப்பினை வழங்கிய இதய தெய்வம் நான் நித்தம், நித்தம் வணங்கும் எங்கள் குல தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்குகின்றேன்.*

*இந்தச் சட்டமன்றம், வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றமாகும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்*

நல்லாசியோடு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்தில் பணியாற்றுகின்ற நல் வாய்ப்புக் கிடைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன், பெருமையடைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை, அனைத்துத் தரப்பு மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இது ஏழை மக்களுக்கு, குடிசைகளில் வாழ்கின்ற மக்களுக்கு பல்வேறு நன்மைகளைக் கொடுக்கின்ற பட்ஜெட்; ஏழைகளுக்கு ஏற்றம் தரும் பட்ஜெட். இந்த பட்ஜெட்டின் சிறப்பு என்னவென்றால், புதியதாக எந்த வரியும் போடப்படவில்லை.

இன்று இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் பொருளாதாரத் தேக்க நிலை நிலவுகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அப்படி இருந்தும்கூட, ஒட்டுமொத்த இந்தியப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தைவிட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்கின்ற தமிழ்நாடு கூடுதல் வளர்ச்சியை எட்டிப் பிடித்திருக்கிறது என்பது இன்று எல்லோராலும் பாராட்டப்படுகிறது.

பொருளாதார ஆய்வறிக்கைகள் இதற்குச் சான்றாக உள்ளன. மிகப் பெரிய பொருளாதார நிபுணர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசைப் பாராட்டுகிறார்கள். 2016-2017 ஆம் ஆண்டு வருவாய்ச் செலவினங்கள் 1,64,290.56 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறை என்று கூறப்படும் fiscal deficit இந்த ஆண்டிற்கு 40,533.84 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 2.96 சதவிகிதமாகும். நல்ல பட்ஜெட்டை உருவாக்கத் தேவையான இந்தச் சதவிகிதம் 3 சதவிகிதத்திற்குமேல் இருக்கக் கூடாது என்ற கணக்கீட்டின்படி பார்த்தால், இது சரியான நிதித் திட்டமே. இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் பேசும்போது கடன் பற்றியும், கடன் சுமை பற்றியும் பேசினார்கள். ஆனால், மிகச் சிறந்த பொருளாதார நிபுணர்கள், ‘கடன் பெற்றாவது ஓர் அரசாங்கம் தனது செலவினங்களை அதிகரிப்பது நல்ல பொருளாதார நடவடிக்கை’ என்று சொல்லியிருக்கிறார்கள்.

கடன் சுமை இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கம் ஏதாவது திட்டங்களை நிறுத்தியிருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. மாநிலத்திற்குக் கிடைக்கின்ற வரி வருவாய் குறைந்தாலும்கூட, எந்தவித வரி உயர்வையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கம் செய்யவில்லை. அதுமட்டுமல்ல, ஆட்சிப்



பொறுப்பேற்றவுடன் தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதிகளை மின்னல் வேகத்தில் நடைமுறைப்படுத்தியவர், நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

குறு, சிறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய விவசாயக் கடன் தள்ளுபடி; அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை இலவச மின்சாரம்; திருமண உதவித் திட்டத்தில் திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட 4 கிராம் தங்கம் என்பது 8 கிராம் தங்கமாக உயர்வு; விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் இலவச மின்சாரம்; டாஸ்மாக் மதுபானக் கடைகளின் நேரத்தைக் குறைத்ததுடன், 500 கடைகள் உடனடியாக மூடல் என மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றியவர், நம் தங்கத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நல்ல அரசாங்கம் என்பது குடிமக்கள் அனைவருக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் கொடுக்க வேண்டும். இவை அனைத்தையும் இந்தியாவிலேயே கொடுக்கின்ற ஒரே அரசு, மாண்புமிகு தங்கத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கம்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* 1,91,00,000 குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா 20 கிலோ அரிசி; விலையில்லா வேட்டி சேலை வழங்குகின்ற அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கம்தான்.

பிற்பகல் 1-05

“உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்”

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கம் வேளாண்மைத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவத்தைக் கொடுத்து செயல்படுத்தி வருகிறது. உற்பத்தியைப் பெருக்க பண்ணை அளவிலான உற்பத்தித் திறனை அதிகரித்து, விவசாயிகளின் வருவாயினை உயர்த்தி, நீடித்த நிலையான விவசாய வளர்ச்சியை ஏற்படுத்துகின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை நிறைவு செய்யும் வகையில் சிறுதானியங்கள், பயறு வகைகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெய் வித்துக்கள், சிறு தானியங்கள், பயறு வகைகள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு ஒரு புதிய திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறையில் தொடர்ந்து பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கம் இன்றையதினம் பல்வேறு பரிசுகளைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகப் பெற்று வருகிறது என்பதை இங்கே நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, புதுடில்லியில் நடைபெற்ற விழாவில்கூட போக்குவரத்துத் துறை மற்றும் தொழில் துறை பல பரிசுகளைப் பெற்றன என்பதையும் இந்த நல்ல நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றையதினம், கிராமப்புற இளைஞர்களுக்கு 40% மானியத்தில் வேளாண் இயந்திரங்களை வழங்குவது என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய சாதனையாகும். பசுமைக்குடில் சாகுபடி, நிழல்வலை சாகுபடி, அடர் நடவு முறை, துல்லியப் பண்ணைய முறை போன்ற நவீன தொழில்நுட்பங்கள் தோட்டக்கலைப் பயிர்களில் தொடர்ந்து ஊக்குவிக்கப்படும் என்று அறிவித்திருப்பது விவசாயிகளுக்கு மிகுந்த பயனைத் தரும். இந்தியாவிலேயே வேளாண்மைத் துறையில் மட்டுமல்ல, பல்வேறு துறைகளிலும் இன்றையதினம் முதன்மை மாநிலமாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆளும் மாநிலம் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கம் 3½ இலட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது மக்களுடைய ஏகோபித்த பாராட்டையும், வரவேற்பையும் பெற்றிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* பொதுச் சேவைகளை மக்களின் இல்லங்களுக்கே கொண்டு சேர்க்கும் 'அம்மா திட்டம்' மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*



தென் மாவட்டங்களில் பால் வளத்தை ஊக்குவிக்க 45 கோடி ரூபாய் செலவில் மதுரையில் ஐஸ்க்ரீம் பால் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனம் அமையும் என்ற அறிவிப்பிற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியினை மதுரை, தேனி மாவட்ட மக்கள் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதாரண அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலைப் பற்றித்தான் சிந்திப்பார்கள். ஆனால், அடுத்த தலைமுறை மிகச் சிறப்பாக இருக்க வேண்டுமென்று ஒப்பற்ற திட்டங்கள் தீட்டுகின்ற தலைவர், ஒரே தலைவர் நம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏழை மாணவ, மாணவியர்களுக்கு எட்டாக் கனியாக இருந்த மடிக்கணினியை வழங்குகின்ற ஒப்பற்றத் தலைவர் நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைவருக்கும் சம வாய்ப்புகள் வழங்கிட வேண்டும். டிஜிட்டல் தொழில்நுட்ப இடைவெளியைக் குறைத்திட வேண்டும் என்று அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் 5.35 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குவது பாராட்டுக்குரியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், பள்ளி செல்லும் மாணவர்கள் அனைவருக்கும் அனைத்தும் இலவசம் என்ற சூழ்நிலையை உருவாக்கி, பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கையை இந்தியாவிலேயே அதிகப்படுத்திய தலைமை நம்முடைய தங்கத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமைதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுமட்டுமல்ல, உயர் கல்வியை எடுத்துக்கொண்டாலும், இன்றையதினம் மிகச் சிறப்பாக இந்தியாவிலேயே அதிகமான மாணவர்களுக்கு உயர் கல்வியைக் கொடுக்கின்ற ஆட்சி தங்கத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியாகத்தான் இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றையதினம், உழைப்பவரே உயர்ந்தவர் என்ற உயரிய தத்துவத்தை இலட்சியமாகக் கொண்டிருக்கின்ற தங்கத் தலைவி

[திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்] [2016 ஜூலை 28

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நலிந்த தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் நலத் திட்ட உதவிகள் வழங்கி, பெருமைப்படுத்தி, சிறப்புச் சேர்க்கின்றார்கள். தமிழ்நாட்டில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உட்பட 17 அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் செயல்பட்டு வருவது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். இதுவரை பல்வேறு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் 66.97 இலட்சம் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பிற மாநிலங்களைச் சேர்ந்த 16,684 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களுக்கு ரூபாய் 70 கோடி மானியமாக வழங்கப்பட்டதன்மூலம் தொழிலாளர்கள் மிகுந்த பயனடைவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜக்கையன் உட்காருங்கள். நன்றி சொல்லி உட்காருங்கள்.

பிற்பகல் 1-10

**திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சில பிரச்சினைகளை மட்டும் இங்கே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எழுதிக் கொடுங்கள், record செய்துகொள்கிறேன். உட்காருங்கள்.

**திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கம்பம் தொகுதி, ஏழை விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த தொகுதி, இங்கே மாணவர்கள் படிப்பதற்காக அரசு கலைக் கல்லூரி ஒன்று வேண்டும். மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக கம்பம் அரசு மருத்துவமனையை உயர்த்த வேண்டும். அதுமட்டுமல்லாமல் கம்பம் தொகுதியிலிருந்து கேரளாவிற்குச் செல்கின்ற ராமக்கல் மெட்டு, சாக்களூத்து மெட்டு போன்ற சாலைகளை அமைத்துக் கொடுப்பதுடன், தொகுதி விவசாயிகளின் நீண்டகாலப் பிரச்சினையாக இருக்கின்ற தொண்டமான் அணைப் பிரச்சினையையும் நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2016 ஜூலை 28][திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்]

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே, நேர்மைதான் தங்களின் கேடயம், நியாயம்தான் தங்களின் தராசு, மன்னிப்பு உங்களின் குணம், அடிக்கற்களை படிக்கற்களாக மாற்றுவதே உங்களின் பண்பு, ஊக்கம் உங்களின் திறவுகோல். அன்பையே விதைத்து, அன்பையே அறுவடை செய்யும் தாயே, என் அடிமனதில் இருந்து அன்பை, பண்பை, பணிவை நேர்கோட்டில் நிறுத்தி நன்றி சொல்லி முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுது, சாக்கோட்டை ஊராட்சியிலே மித்திராவயல் மருத்துவமனையில் மருத்துவர் ஓய்வு பெற்றதால் மருத்துவமனை மூடப்பட்டதாகத் தெரிவித்தார். மித்திராவயலில் செயல்படுவது ஆரம்ப துணை சுகாதார நிலையம் (Health sub-centre). அங்கே மருத்துவர் பணியிடம் இல்லை; கிராம சுகாதார செவிலியர் பணியிடம்தான் உள்ளது. அவர் பணியிலே இருந்திருக்கிறார். நேற்றுகூட அங்கே ஆறு பேருக்குத் தடுப்பூசி போட்டிருக்கிறார் என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள். ஐந்து நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்மை, தூய்மை, நேர்மை, பொறுமை, பெருமை, அஹிம்சை, விடாமுயற்சி, கொடை, உதவி, வீரம் இவை அனைத்தையும் ஒருங்கே பெற்ற உலகத்தின் ஒரே தலைவர், ஒப்பற்றத் தலைவர் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இரட்டை இலையைத் தமிழகத்தில் தன்னந்தனியாக அலையாக எழவைத்து, நிலையான ஆட்சியை நிறுவச் செய்து, தமிழகத்தின் திருமந்திரமாய்த் திகழும் அன்னையின் ஆட்சி மக்களின் மனசாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளியில் பந்தியிட்டு, ஆலயத்தில் அன்னமிட்டு, வீடெங்கும் விலையில்லா

[திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்] [2016 ஜூலை 28

அரிசி தந்து, தமிழர்களின் அகோர பசியைத் தீர்க்கும் எங்கள் தாய் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா நீங்கள் ஆண்டவர்தான்! எங்களை என்றும் ஆள்பவர்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* உண்ணும்போதும், உறங்கும்போதும் தமிழர்கள் ஓயாமல் உச்சரிக்கும் ஒரே மந்திரம் அம்மா என்னும் திருமந்திரம்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

'மனிதன் என்பவன் தெய்வமாகலாம், வாரி, வாரி வழங்கும்போது வள்ளலாகலாம், யாருக்கென்று அழுதபோதும் தலைவனாகலாம்' என்ற வரிகளுண்டு. அந்த வரிகளுக்குச் சேதாரமில்லாமல், ஆதாரமாய்ச் சேர்த்து சொல்லலாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை. ஈகைகொண்ட தாயின் வாகைக்கு தேசத்தில் ஈடுமில்லை, இணையுமில்லை. தொண்டர் நாம் விழித்திருந்து துவளாமல் நடந்தால் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் உள்ளாட்சியில் நல்லாட்சி அமையும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழகமே என் குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே என் நலன் என இலட்சிய வாழ்க்கை, தவ வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும், வாழும் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்கி, எனது கன்னிப் பேச்சைத் துவங்குகின்றேன்.

தென்கோடியில் ஓர் ஆசிரியர் குடும்பத்தில் பிறந்த என்னை, கழகத்தினுடைய கிளைக் கழகச் செயலாளராக்கி, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணைச் செயலாளராக்கி, பின்பு தென்காசி சட்டமன்றத் தொகுதி கழகச் செயலாளராக்கி, கழகப் பணியாற்றிட வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் தொட்டு வணங்குகிறேன். 2011 ஆம் ஆண்டில் உள்ளாட்சியில் ஒன்றியக் குழு உறுப்பினராகப் போட்டியிடச் செய்து, பின்பு ஒன்றியக் குழுத் தலைவராகவும் நியமனம் செய்து, மக்கள் பணியாற்றிட வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு அமைதி, வளம், வளர்ச்சி என்ற குறிக்கோளை அடையும்வண்ணம், தொலைநோக்குத் திட்டம் 2023 இலக்கை அடையும்வண்ணம்,



2016 ஜூலை 28] [திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்]

மாபெரும் ஐந்து இயக்கங்களை உருவாக்கியுள்ளார்கள். நீராதார வேளாண்மை, குடிசையற்ற தமிழ்நாடு, வறுமை ஒழிப்புமூலம் ஏழைகளின் பொருளாதார உயர்வு இயக்கம், தூய்மை தமிழக இயக்கம், திறன் மேம்பாட்டு இயக்கம் என்ற மாபெரும் இயக்கங்களை உருவாக்கி 11 விதமான சிறப்பு நோக்குத் திட்டங்களை உருவாக்கியுள்ளார்கள்.

*பிற்பகல் 1-15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி என்றாலே ஏழைகளின் ஆட்சி, மாணவ-மாணவிகளின் ஆட்சி, விவசாயிகளின் ஆட்சி, தாய்க்குலத்தின் ஆட்சி, *(மேசையைத் தட்டும் ஒலி)* மொத்தத்தில் தமிழ்நாட்டு மக்களின் ஆட்சி என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழக்கூடிய, ஒவ்வொரு ஏழையெளிய மக்களுக்கும் தேவை என்னவென்றால் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம். இந்த மூன்றையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் உள்ள ஏழையெளியவர்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு பற்பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையில் கிட்டத்தட்ட 34,668 நியாய விலைக் கடைகள் மூலமாக 1.91 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி 20 கிலோ வழங்கிய ஒப்பற்றத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. உடுக்க உடை, கிட்டத்தட்ட 1.91 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு விழாக் காலங்களில் புத்தாடைகளை வழங்கி, புன்முறுவல் மூலமாக அவர்களுடைய பாசத்தையெல்லாம் பார்த்த, ஒரே தலைவி, ஒப்பற்றத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதில் எந்தவிதமான மாற்றமில்லை. உணவு கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்க இடம் கொடுத்தார்கள். வீடு என்றால் நம் மனதிற்கெல்லாம் தெரியக்கூடியது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சூரிய சக்தி மின் வசதி கொண்ட பசுமை வீடுகள் திட்டம்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* 2016-2017 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 420 கோடி ரூபாய் செலவில் 20,000 வீடுகள் கட்டித்

[திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்] [2016 ஜூலை 28

தரப்படும் என அறிவித்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசின் பங்கீட்டோடு தமிழ்நாடு அரசின் 40% பங்கீடுடன் கிட்டத்தட்ட 1,31,831 வீடுகளை 1.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதாக அறிவித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கூரையுடன் வீடுகளைக் கட்ட, கூடுதலாக 50,000 ரூபாய் ஒதுக்கீடு செய்து, கிட்டத்தட்ட 1.70 இலட்சம் ரூபாய் மதிப்பில் மக்களெல்லாம் இனிமையான, தரமான, அழகான வீட்டில் அமர வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு மேம்பாடான வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்திட்டத்தில் தமிழக அரசினுடைய பங்கு 1,908.47 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்டை மாநிலங்கள் மட்டுமின்றி இந்தியாவே வியக்கக்கூடிய வகையில், சீரிய திட்டங்களில் ஒன்றாக, கிட்டத்தட்ட 3.50 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். நிலமில்லாத இடங்களாக இருந்தாலும், நிலம் குறைவாக உள்ள இடங்களாக இருந்தாலும் அல்லது நிலத்தின் மதிப்பு அதிகமாக இருக்கும் இடங்களாக இருந்தாலும், அவற்றைத் தேர்ந்தெடுத்து, அடுக்குமாடிக் கட்டடமாகக் கட்டிக் கொடுத்து, ஏழையெளிய மக்களையெல்லாம் வாழ வைத்து, அழகு பார்க்கின்ற ஒப்பற்றத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாணவ-மாணவிகள் ஆட்சி என்றாலே அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிதான் என்பதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. நான் இருக்கும் கிராமப்புறத்தில் பார்த்தீர்கள் என்றால், குழந்தையின் பெற்றோர்கள், தங்களுடைய குழந்தைகளை எவ்வாறு நாளை பள்ளிக்கு அனுப்பலாம், எவ்வாறு அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கலாம் என கவலையுறுவதைத் தெரிந்துகொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'உங்கள் குழந்தையை மட்டும் அனுப்புங்கள், அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் நான் செய்கிறேன், உங்களுடைய சுமைகளையெல்லாம் நான் எடுத்துக்கொள்கிறேன்' *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று முதல் நாளே பள்ளிக்குச் செல்லக்கூடிய மாணவ-மாணவிகளுக்கு உடுக்க உடை, படிக்க பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட அனைத்தையும் இலவசமாக வழங்கி அழகு பார்க்கின்ற ஒப்பற்றத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2016 ஜூலை 28] [திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

*பிற்பகல் 1-20*

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் இடைநிற்றல், கழிவு, தேக்கம் போன்ற நிலைகள் மிகவும் அதிகமாக இருப்பதைப் புரிந்துகொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நிலைகளையெல்லாம் களைய வேண்டுமென்பதற்காக, ஆறாம் வகுப்பு படிக்கும் குழந்தையின் பெயரில், ஒரு தொகையை deposit செய்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கான முதிர்வுத் தொகையை, அவர்களுடைய பட்டப்படிப்பிற்கு எந்தவிதமான இடைஞ்சலும் வராமல் இருப்பதற்காக, அவர்கள் +2 முடித்து, மேல்படிப்பு செல்லும்போது வழங்குகிறார்கள். இன்றைக்கு ஏழையெளிய மக்களுக்குக் கல்வியை வழங்கும் ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

2016-2017 ஆம் ஆண்டில், 5.35 இலட்சம் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்படும் என்று அறிவித்து, அதற்காக 890 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் தாய்மார்களுக்கான, புதுமையான பல்வேறு நலத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. உதாரணமாக, அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவினி, அம்மா ஆரோக்கியத் திட்டம் என எத்தனையோ

திட்டங்கள் தீட்டப்பட்டன. எனினும், இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 2014-2015 ஆம் ஆண்டில் தாய்மார்களுக்கென பாலூட்டும் அறையை அமைத்துக் கொடுத்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** தாய்மார்கள் கிராமங்களிலிருந்து தொலைதூரத்திலுள்ள வெளியூர்களுக்குச் செல்ல, பேருந்து நிலையத்தை அடையும்போது, அவர்களுடன் செல்லும் குழந்தை பசியால் வாடும். அப்போது, குழந்தையின் பசியாற்ற ஓர் அமைதியான இடம் தேவை. இதை இங்கிருந்து புரிந்துகொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தாய்மார்களுடைய குறையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காகப் பேருந்து நிலையத்தில் ஓர் அருமையான இடத்தைத் தேர்வு செய்து, பாலூட்டும் அறையை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இதற்குள்ளே நிறைய அர்த்தங்கள் இருக்கின்றன. அந்தத் தாய் குழந்தைக்கு பால் கொடுக்கும்போது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) போதும், அடுத்த வாய்ப்பில் பேசலாம்.

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** ஓரேயொரு கருத்து. ஒரு தாய், குழந்தைக்கு பாலூட்டும்போது, அறிவு, ஈகை, வீரம், பாசம் என அனைத்தையும் உடலோடும், உள்ளத்தோடும் சேர்த்து ஊட்ட வேண்டும். அதற்கான ஓர் அருமையான, சுத்தமான, காற்றோட்டமான இடத்தை வழங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, தாய்களுக்கெல்லாம் விடிவெள்ளியாக, தாயுள்ளம் கொண்ட தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பேருந்து நிலையத்தில் தாய்மார்களுக்கென பாலூட்டும் அறையை அமைத்துக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.





**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** அளவில்லா திட்டம் தந்த அட்சயப் பாத்திரமே, அகிலம் போற்றும் அளப்பரிய முதல்வரே, (மேசையைத் தட்டும் ஒலி) தாய்க்குலத்தின் தனிச் சிறப்பே, தமிழகத்தின் பெரும் சிறப்பே அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 15 வயதில் என்னுடைய தந்தையை இழந்தேன்; 20 வயதில் என்னுடைய தாயை இழந்தேன். என்னுடைய தாயை நினைத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முகத்தைப் பார்க்கும்போது, என்னுடைய தாயைக் கண்டேன்; (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தந்தையை நினைத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முகத்தைப் பார்க்கும்போது, என்னுடைய தந்தையைக் கண்டேன்; (மேசையைத் தட்டும் ஒலி) நான் வணங்கும் இறைவனை நினைத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முகத்தைப் பார்க்கும்போது, நான் வணங்கும் இறைவனையே கண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு முப்பரிமாணத்தை வழங்கிய, என்னை உயர்த்திய, இந்த மாபெரும் சபையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'தமிழ்' மூன்றெழுத்து, பேரறிஞர் 'அண்ணா' மூன்றெழுத்து, புரட்சித் தலைவர் 'எம்.ஜி.ஆர்.' மூன்றெழுத்து, 'நட்பு' மூன்றெழுத்து, 'நன்றி' மூன்றெழுத்து, இவற்றின் வடிவாக விளங்கும், தமிழினத்தின் அடையாளமாக விளங்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி 'அம்மா', 'அம்மா' 'அம்மா' மூன்றெழுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புனித தெய்வத்தின் பொற்பாதங்களை வணங்கி, இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மேலும், என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுதிக் கொடுங்கள். பதிவு செய்யப்படும்.

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** தொகுதிக் கோரிக்கைகள்:

தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க வேண்டும்.

குற்றாலத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும்.

தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் அனைத்து மருத்துவப் பிரிவுகளையும் ஆரம்பித்து, கூடுதல் மருத்துவர்களையும், செவிலியர்களையும், பணியாளர்களையும் நியமனம் செய்ய வேண்டும். தென்காசி தொகுதியில் அரசு மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும்.

தென்காசி புறவழிச் சாலைப் பணிகளை விரைவில் முடித்திட ஆவன செய்ய வேண்டும்.

தென்காசியில் அரசு பல் தொழில்நுட்பப் பயிலகம் அமைத்திட ஆவன செய்ய வேண்டும்.

ஜம்புநதி மேல்மட்ட கால்வாய் திட்டப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

பாவூர்சத்திரம் ஔவையார் மகளிர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதலாக ஆறு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும்.

சுரண்டை பேரூராட்சி, செண்பகக் கால்வாயில் சிமெண்ட் லைனிங் அமைத்துத் தர வேண்டும்.

சுரண்டை காமராஜர் அரசு கலைக் கல்லூரியில் உட்கட்டமைப்பை மேம்பாடு செய்யவும், கூடுதல் பேராசிரியர் பணியிடங்களை வழங்கவும் வேண்டும்.

ஆலங்குளம் ஊராட்சி, ரெட்டை குளம், ஊத்துமலை கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 15 ஊராட்சிகளைச் சேர்த்து ஊத்துமலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் ஊராட்சி ஒன்றியம் உருவாக்க வேண்டும்.

தென்காசி, இரயில்வே பீடர் ரோடு, மேம்பாலம், செங்கோட்டை-இலஞ்சி மெயின் ரோடு, கூலக்கடை பஜார் ரோடு இணையும் சாலையில் ரவுண்டானா அமைத்துத் தர வேண்டும். தென்காசியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் விரைவாகக் கட்டிட ஆவன செய்ய வேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

*பிற்பகல் 1-25*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் தொடர்ந்து நான் அமர்ந்திருப்பதற்கும், அரசியலில் நிலைத்து நிற்பதற்கும் காரணமான என்னை ஆளாக்கிய, என்னுடைய தலைவர், என்னுடைய குருநாதர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, இன்றைக்கு இயக்கத்தின் தளபதியாக உருவாகி, இயக்கத்தைக் கட்டிக் காத்து வருகின்ற எங்களுடைய தளபதி, எதிர்க்கட்சித் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) என் வெற்றிக்காக, தொகுதியிலே சுற்றி, சுற்றி வந்து பணியாற்றிய தளபதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். 1971-லிருந்து இன்று வரையில் நடந்த எல்லா தேர்தல்களிலும், ராஜீவ் காந்தி மற்றும் இந்திரா காந்தி இறந்தபோது நடைபெற்ற இரண்டு தேர்தல்களைத் தவிர, என்னை வெற்றி பெற வைத்து, இந்த அவையிலே அமர வைத்திருக்கிற காட்பாடி வாக்காளர்களாம், நான் வணங்கும் தெய்வம் அனைவருக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவிக்க வேண்டும். காரணம், என்னை எப்படி வறுத்தெடுப்பது என்று நினைத்து இந்த sugar patient-ஐ 1-30 மணிக்குப் பேசவிட்டால்தான் சரியாகச் சீக்கிரமாக முடிப்பான் என்று கருதி, செய்திருக்கிறீர்கள். எவ்வளவோ இடைஞ்சல்களுக்கிடையிலேயும் இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நின்று பேசுவது எல்லோருக்கும் கிடைக்கிற பாக்கியம் அல்ல. தமிழ்நாட்டில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களிலே எத்தனையோ பேர் இங்கு வரவேண்டும் என்று துடிக்கிறார்கள். ஆனால், சிலருக்குத்தான் அந்த வாய்ப்பு அமைகிறது. என்னைப் பொறுத்தவரையில், என் வயதில் பாதிக்குமேல் இந்த அவையிலேயே

கழித்துவிட்டேன். கிட்டத்தட்ட 40, 42 ஆண்டுக் காலங்கள். நான் இந்த அவையிலே இரண்டு இடத்தைத் தவிர, உட்கார்ந்து விட்டேன். ஒன்று முதலமைச்சர் நாற்காலி, இரண்டாவது எதிர்க்கட்சித் தலைவர் நாற்காலி. இதைத் தவிர இந்த அவையிலே எல்லாவற்றையும் பார்த்து விட்டேன். Accounts Committee-களையெல்லாம் பார்த்திருக்கிறேன். உங்களுடைய நாற்காலியிலேயும் Panel of Chairmen ஆக உட்கார்ந்து இருக்கிறேன். ஆகையினால், எனக்கு இந்த அவை என்பது, ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இங்கே நமக்குள் இருந்தாலும்-அவை ஜனநாயகத்தில் inevitable, இருந்துதான் தீரும். ஆனால், அது ஒரு பெரிய பகை அல்ல. கொள்கையிலே ஏற்படுகிற மாறுபாடுகள். அந்த மாறுபாடுகளையே பகையாக மாற்ற முடியாது. என்னைப் பொறுத்தவரையில் யாரிடத்திலும் பகைமை பாராட்டுகிறவன் அல்லன் நான். எனக்கு 'உம்' என்று முகத்தை வைத்திருப்பவர்களைக் கண்டாலே பிடிக்காது. நான் சிரித்துக் கொண்டிருக்க வேண்டும். எதிரில் இருப்பவர்களும் சிரித்துக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் மகிழ்ச்சி இருக்கும். சிரிப்பவன்தான் மனிதன். இல்லையென்றால் அவன் மிருகம். காரணம், உள்ளத்தில் பகையை வளர்க்காமல் இருந்தால் முகத்தில் தெளிவு வரும். எனவே, இந்த அவையில், 10, 15 சபாநாயகர்கள், பெருந்தலைவர்களான, பொன்னப்ப நாடார், ஜோதி வெங்கடாச்சலம், கல்யாணசுந்தரம், உமாநாத், ரமணி போன்ற ஜாம்பவான்கள்உடன் நான் பணியாற்றியிருக்கிறேன். இந்த அவையிலே மீண்டும் உங்கள் தலைமையிலே பணியாற்றுகிறேன் என்பதிலே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி எல்லோரும் பேசி முடித்து விட்டார்கள். பிய்த்து, பிய்த்து எடுத்து விட்டார்கள். ஒன்றும் கிடையாது. பேச வேண்டுமென்றால் கஷ்டப்பட்டுதான் பேசவேண்டும். இந்த மாமன்றத்தில் 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர், என் மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. பன்னீர்செல்வம் அவர்கள் கடந்த 21 ஆம் தேதி சமர்ப்பித்தார், சபை கூடுவதற்கு முன்பு நீங்கள் ஒரு திருக்குறளைச் சொல்வீர்கள். அன்றைக்கு ஒரு திருக்குறளைச் சொன்னீர்கள்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"



என்று. அதற்கு ஒரு பொருளைச் சொன்னீர்கள். அதாவது இதிலே உரையாசிரியர்கள் என்ன எழுதுகிறார்கள் என்றால், முறையாக நிதியாதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்து, திட்டமிட்டு, செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணம். நன்றாக மனதில் புரிகிற மாதிரி, ஊசி ஏற்றுகிற மாதிரி, அவர்களுக்கு ஏற்றி, காண்பித்துவிட்டீர்கள். ரொம்ப மகிழ்ச்சி. ஆகையினால், இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், இயற்றல் என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்றால், வருமானத்தை sources, financial resources-ஐ பெருக்குவது. ஆனால், நான் இந்த பட்ஜெட் புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். Performance Budget-ஐயும் பார்த்தேன். எல்லாவற்றையும் பார்த்தேன். அந்த இயற்றலிலே இவர்களுக்கு பாஸ் மார்க் வரவில்லை, என்னுடைய கணக்குப்படி. ஆகையினால், பொருள் வரும் வழிமுறைகளையே அறியாமல் இந்த அரசு திண்டாடி நிற்கிறது என்பதுதான் இந்த ஆட்சியின் மீதான என்னுடைய முதல் குற்றச்சாட்டு. இதற்கும் ஒன்றும் பெரிய ஆதாரங்களைத் தேடி அலைய வேண்டியதில்லை. இந்த அ.தி.மு.க. அரசின் நிதிநிலை அறிக்கைகளைப் பார்த்தாலே தெரியும், இது வருவாய் இல்லாத ஓர் அரசு என்பது. 2014-2015 ஆம் ஆண்டு 27,350 கோடி ரூபாய் பற்றாக்குறை இருந்தது; 2015-2016 ஆம் ஆண்டில் 31,870 கோடி ரூபாயாக அது வளர்ந்தது. 2016-2017 ஆம் ஆண்டில் 40,533 கோடி ரூபாயாக வளர்ந்து செழித்து நிற்கிறது. ஆக, பற்றாக்குறை என்றால் என்ன? மாண்புமிகு நிதி அமைச்சர் அன்றைக்கு ஒருநாள், நன்றாகச் சொன்னார். அரசின் மொத்த செலவினங்களுக்கும், மொத்த வரவினங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம்தான் இந்தப் பற்றாக்குறை.

பிற்பகல் 1-30

பற்றாக்குறை இருப்பதாலே, இது ஒரு நல்ல பட்ஜெட் அல்ல என்று யாரும் சொல்லிவிட முடியாது. பற்றாக்குறை இரண்டு வழிகளில் வரலாம். அதிகமான திட்டங்களை வகுத்து அவற்றிற்கு செலவு செய்கிறபோது பற்றாக்குறை ஏற்படும். வருவாயைப் பெருக்காமலேயே விட்டுவிட்டாலும் பற்றாக்குறை வந்துவிடும். பற்றாக்குறை என்பது கெட்ட பட்ஜெட் அல்ல. அது ஒரு நல்ல பட்ஜெட். As a student of Politics and Public Administration, M.A., Public Finance, Seminar-ல் ஒரு கேள்வியே கொடுப்பார்கள், Define: 'Deficit Budget'. அது, profitable-ஆ என்று கேட்பார்கள்.

[திரு. துரைமுருகன்] [2016 ஜூலை 28

அது நல்ல பட்ஜெட்டா என்று எழுதச் சொல்வார்கள். நாங்கள் 'Deficit Budget'தான் நல்ல பட்ஜெட் என்று எழுதுவோம். அது Economics-ல் பெரிய தகராறு. Surplus Budgetதான் நல்ல பட்ஜெட் என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆகையினால், பற்றாக்குறை இருப்பதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை; பற்றாக்குறை வரும், நீங்கள் இருந்தாலும் வரும், நாங்கள் இருந்தாலும் வரும், இன்னொருவர் இருந்தாலும் வரும், மத்திய சர்க்காரிலும் வரும். ஆனால், இந்தப் பற்றாக்குறை வழிகளை நாம் எப்படி ஈடுசெய்ய வேண்டுமென்றால், வருவாய் வழிகளைக் கண்டுபிடித்து, அவற்றை நாம் பெருக்க வேண்டும்.

பற்றாக்குறை தமிழ்நாட்டில் மட்டுமா இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்! எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. அவர்களுக்கும், நமக்கும் ஒரு வித்தியாசம் என்ன என்று கேட்டால், அவர்கள் அந்தப் பற்றாக்குறையைக் குறைக்க தேவையான வழிமுறைகளைக் கண்டறிந்து அவற்றை நிறைவு செய்கிறார்கள். உதாரணமாக, உத்தரப்பிரதேசத்தில் பற்றாக்குறை ரூ.36,560 கோடியாக இருந்தது. அடுத்த நிதியாண்டில் அது குறைந்துவிட்டது. 2014-2015 ஆம் ஆண்டில் மகாராஷ்டிரா மாநிலத்தில் பற்றாக்குறை ரூ.37,750 கோடியாக இருந்தது. ஆனால், அது 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.30,730 கோடியாக குறைந்துவிட்டது. ஆனால், தமிழ்நாட்டில் 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.27,350 கோடியாக இருந்த பற்றாக்குறை, அடுத்த ஆண்டு ரூ.31,870 கோடியாக வளர்ந்து, இன்றைக்கு ரூ.40,530 கோடியாக உயர்ந்திருக்கிறது. அப்படியானால், மகாராஷ்டிராவுக்கும், உத்தரப்பிரதேசத்திற்கும் தெரிந்த அந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கிற அந்த வேலை, அந்தப் பயிற்சி நமக்கு இல்லையா என்பதுதான் நான் கேட்கின்ற கேள்வி. இதை யார் செய்ய வேண்டும்? அரசாங்கத்திற்கு வரி வருவாய், எப்படி, எப்படியெல்லாம் வரும் என்று இந்த அவையிலே நிதிநிலை அறிக்கை படிக்கப்பட்டவுடன் ஒவ்வொரு முறையும் Finance Secretary of the State, Press Conference-ல் சொல்வது வழக்கம். நிதிநிலை அறிக்கை படித்தவுடன், Press Conference-ல் Finance Secretary சொன்னார், "Tax collection on petroleum products has taken a stride at 10,000 crore rupees in the last three years and registered a negative growth in 2015 and 2016. பெட்ரோலியத்தில் வராது என்று முடித்துவிட்டார். மற்றபடி registration எல்லாம் negative-க்கு போய்விட்டது என்றார். ஒரு வருவாய் அடைந்து போய்விட்டது. பெட்ரோலியத்தில் வருவாய் வராது. அது நியாயம்கூட. ஏனென்றால், price fluctuation ஆகிக்கொண்டே இருக்கிறது. அதனால், வருவாய் வருவது கொஞ்சம் கஷ்டம்தான், ஒத்துக்கொள்கிறேன்.



2016 ஜூலை 28] [திரு. துரைமுருகன்]

பிற்பகல் 1-35

"The sectors which bring the substantial amount of tax like Cement, Steel, Electronic goods and Automobiles have been hurt by the economic slowdown". என்று மீண்டும் Finance Secretary சொல்கிறார். சரி, அடுத்து, வருவாய்க்கு நாம் எங்கே கை வைக்கலாம்? நாம் cement-க்குப் போகலாம். Cement-ல் வரவில்லை என்று சொல்கிறார்கள், ஏன் வரவில்லை? Cement-ல் எப்போது வரும் என்றால், cement-க்கு கிராக்கி இருக்க வேண்டும். நாட்டில் தொழிற்சாலைகள் பெருக வேண்டும். அப்போது அவர்கள் cement வாங்குவார்கள். அப்போது நாம் வரி விதிக்கலாம். நிறைய பாலங்கள் கட்ட வேண்டும். ஒரு 40 கோடி ரூபாய்க்கு பாலம் கட்டுகிறோம் என்று வைத்துக்கொண்டால், அதற்கு 10 கோடி ரூபாய்க்கு cement வாங்கலாம், 10 கோடி ரூபாய்க்கு steel வாங்கலாம். அப்போது வரி வந்து கொண்டிருக்கும். ஆனால், இப்போது என்ன நிலைமை?

இரண்டாவது, guideline value-வையும் உயர்த்திவிட்டீர்கள். வீடு, கட்டடம் கட்டி விற்பவர்களெல்லாம் அதை நிறுத்திவிட்டார்கள். அதனால் சிமெண்ட் விற்பனை அப்படியே நின்றுவிட்டது. அதை யாரும் வாங்குவதற்கில்லை. ஆகையினால் சிமெண்ட்டிலும் வருவாய் நின்று போய்விட்டது. இது steel, electronic goods and automobiles எல்லாவற்றுக்கும் applicable தான். அதனால் வருமானத்திற்கு அதிலேயும் வழியில்லை. சரி, வேறு என்ன செய்யலாம், அப்படியென்றால், நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக, நாவலர் சொன்னதுபோல் நுண்மான் நுழைபுலத்தோடு புதிய திட்டம் ஒன்றை தேர்தலிலே அறிவித்தீர்கள். 'புதிய கிரானைட் கொள்கை வகுக்கப்படும். அரசே தாது மணல் எடுத்து விற்பனை செய்யும் பணியை மேற்கொள்ளும்' என்று சொன்னீர்கள். ஆனால், அதற்கு மாறாக நிதிநிலை அறிக்கையின் இணைப்பில், வருவாய்க் கணக்கு வரவுகள் என்ற தலைப்பில் வரிசை எண் 2-ன்கீழ் 'சுரங்கத் தொழிலுக்கு நமது மாநிலத்தில் குறைந்த வாய்ப்புகளே உள்ளதாலும், பெரும்பாலான அரசு சேவைகள் கட்டணம் இல்லாமலோ அல்லது

குறைந்த கட்டணத்திலோ வழங்கப்படுவதாலும், 2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டு அளவிலிருந்து சிறிதளவே உயரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது' என்று சொல்லியிருக்கிறீர்கள். அதுவும் போய்விட்டது. அடுத்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, சிமெண்ட்டினுடைய விலை ஏற்றத்தின் காரணமாக, கட்டடம் எல்லாம் கட்டாத காரணத்தினால் வருவாய் குறைந்துவிட்டது என்று குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்கிறவரை இருங்கள். (குறுக்கீடுகள்) வருடத்திற்கு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) இருங்கள், அமைதியாக இருங்கள். அமைதி, அமைதி. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது நாங்கள் அமைதியாகத்தான் கேட்டுக்கொண்டிருந்தோம். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள், இப்படி ஆளாளுக்குப் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார் என்றால் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) அமைதியாக இருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐந்தாண்டுக் காலத்தில், எந்த அளவிற்கு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரே ஓர் உதாரணத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர் 40 ஆண்டுக் காலமாக இந்த சட்டமன்றத்திலே அமைச்சராக, உறுப்பினராக, பல்வேறு பொறுப்புகளில் இருந்திருக்கிறார். அவருக்குத் தெரியாதது இல்லை.



2011 ஆம் ஆண்டு 10,000 மெகா வாட் அளவிற்குத்தான் தமிழகத்தில் மின் தேவை இருந்தது. இன்று உச்சபட்சத் தேவை 15,343 மெகா வாட் அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், கட்டடங்கள் வராமல், Domestic வீடுகள் வராமல், தொழிற்சாலைகள் வராமல், அந்த சிமென்ட் இல்லாமல் அந்தக் கட்டடங்கள் எல்லாம் எப்படிக் கட்டப்பட்டிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அதை நீங்கள் எப்படிச் சொல்கின்றீர்கள் என்பதை முதலில் சொல்ல வேண்டும்.

இரண்டாவதாக, கிரானைட் பற்றிச் சொன்னீர்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் Mines பார்த்த திரு. பொன்முடி அவர்களும் இங்கே இருக்கின்றார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 2011 ஆம் ஆண்டு கிரானைட்டும் நன்றாக ஓடிக்கொண்டிருந்தது. கார்னெட்டும் நன்றாக ஓடிக்கொண்டிருந்தது. தவறாக நான் சொல்லவில்லை. நன்றாக ஓடிக்கொண்டிருந்தது. அதில் நிகழ்ந்த சில முறைகேடுகள் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு வந்தவுடன் நடவடிக்கை எடுத்தார்கள். கிரானைட்டும், கார்னெட்டும் நன்றாக ஓடிக்கொண்டிருந்தபோது 2010-2011 ஆம் ஆண்டு அரசுக்கு வருவாய் எவ்வளவு என்று சொன்னால் 670 கோடி ரூபாய். கிரானைட்டும், கார்னெட்டும் நின்றதற்குப் பின்னால் 4 ஆண்டுகளாக அரசுக்கு வந்த வருவாய் ஆயிரம் கோடி ரூபாய் என்று சொன்னால், எந்தவிதத்தில் வருவாய் குறைந்திருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) எந்தவிதத்திலும் அரசு கவனக் குறைவாக இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளக்கத்தை எனக்குச் சொன்னதற்குப் பதிலாக Finance Secretary-க்கு சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். Finance Secretary, "The sectors which bring the substantial amount of tax like Cement, Steel, Electronic goods and Automobiles have been hurt by the economic slowdown" என்று சொல்லியிருக்கமாட்டார். ஆக, இனிமேலாவது அவர்களிடம் சொல்லிவிடுங்கள். சரி, பரவாயில்லை. அது ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால், அவரே கேள்வியைக் கேட்டு, அதற்குரிய பதிலை அவரே சொல்லியிருக்கிறார். பதில் நாங்கள் சொல்ல வேண்டும், கொஞ்சம் பொறுமையாக உட்காருங்கள். எதனால் வருவாய் குறைந்தது என்ற காரணங்களை நாங்கள் ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கிறோம். நாளை என்னுடைய பதிலுரையில் விரிவாகச் சொல்லயிருக்கிறேன். இரண்டு வருட பட்ஜெட் உபரியாகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் நாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். அதாவது, 2011-2012, 2012-2013 (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய இரண்டு வருடங்கள் உபரி பட்ஜெட்தான் இங்கே தாக்கல் செய்யப்பட்டது. 5 வருடங்களாக வரியே போடவில்லை. வருமானம் கூடியிருக்கிறது. வருகின்ற வருமானம் தொடர்ந்து கூடியிருக்கிறது. இலக்கை நாம் நிர்ணயிக்கிறோம், அந்த இலக்கை எட்ட முடியாமல் இருப்பதற்குக் காரணம், உலக அளவில் இருக்கின்ற பொருளாதார மந்த நிலை இந்தியாவைப் பாதித்திருக்கிறது. இந்தியாவைப் பாதித்திருக்கின்ற பொருளாதாரம், அதில் ஒரு மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாட்டையும் பாதித்திருக்கின்றது. அதனால், பல்வேறு இனங்களில் வரி வருவாய் குறைந்திருக்கின்றது என்பதைத்தான் சொன்னோமேயொழிய, பொதுவாக வளர்ச்சி இருக்கிறது. வளர்ச்சி இருக்கிறது, அதை இல்லை என்று மறுப்பதற்கில்லை. ஆகவே, இதற்குரிய பதிலை நாளை பதிலுரையில் விரிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Registration-ல் guideline value அதிகரித்திருக்கிறது. ஊரில் ஒரு registration-ம் நடக்கவில்லை. 50 இலட்சம் ரூபாயில் ஒருவர் வீடு வாங்க, நிலம் வாங்கப் போனார் என்றால், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழிகாட்டி மதிப்பு —guideline value— கூடியிருக்கிறது என்று பல்வேறு தரப்பிலிருந்தும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அதற்கென்று ஒரு தனிக் குழு நியமிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, சீரமைக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I appreciate it. நான் அதை வரவேற்கிறேன். ஏனென்றால், இப்போது வாங்குகிற விலைக்கு registration fees அதிகம். அதற்காகக் குழு போட்டிருக்கிறீர்கள், மிகவும் மகிழ்ச்சி. ஆனால் இந்தக் குழு போடுவதில் ஒரு பிரச்சினை இருக்கிறது. ராஜகோபாலாச்சாரி அவர்கள் சொன்னார், "ஒரு காரியத்தை முடிக்க வேண்டாமென்றால், ஒன்று அதன்மேல் ஒரு கல்லைப் போடு; இல்லையென்றால் ஒரு குழுவைப் போடு" என்று சொன்னார்கள். (சிரிப்பு) எனவே, close செய்துவிடாதீர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிலையில் வருமானம் இல்லை என்று சொன்னால், எந்த அரசாங்கமாக இருந்தாலும் என்ன செய்யும்? யாராக இருந்தாலும், நாங்கள் ஆட்சி நடத்தினாலும்கூட, என்ன செய்ய முடியும்? ஆக, இப்படிப்பட்ட நிலையில் வேறு வழி கிடையாது, கடன்தான் வாங்க வேண்டும். வருமானத்திற்கு மிஞ்சிய செலவு இருந்தால் ஒன்று வருவாயைப் பெருக்க வேண்டும், இல்லாவிட்டால் கடன் வாங்க வேண்டும். அதைத்தான் இன்றைக்கு இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. அதுவும் தவறு என்று நான் சொல்லமாட்டேன். கடன் வாங்காத அரசாங்கம் எங்கேயும் கிடையாது. மத்திய அரசாங்கமும் வாங்குகிறது, அமெரிக்காவே இப்போது World Bank-ல் கடன் வாங்குகிறது. ஆக, கடன் வாங்காத ஆட்களே கிடையாது. கடன் வாங்குவது தவறு என்று நான் சொல்லமாட்டேன். ஆனால், உங்களுடைய ஆட்சியில் 2010-2011-ல் 91,050 கோடி ரூபாய் கடன், 2011-2012-ல் 1,03,999 கோடி ரூபாய் கடன், 2012-2013-ல் 1,20,075 கோடி ரூபாய் கடன், 2013-2014-ல் 1,40,042 கோடி ரூபாய் கடன், 2014-2015-ல் 1,85,181 கோடி ரூபாய் கடன், 2015-2016-ல்

2,11,483 கோடி ரூபாய் கடன். ஆக, கடன் வளர்ந்து கொண்டிருக்கிறது. கடன் வளர்ந்தால் கடனுக்கு வட்டியும் வளரும். இவ்வளவு கடன் ஆகிவிட்டது; இதற்கு வட்டி எவ்வளவு? 21,715 கோடி ரூபாய் வட்டி. அரசாங்கத்திற்கு இது பெரிய burden இல்லை என்று நான் சொல்லவில்லை. இப்போது இதற்கு மேலே இன்னொரு பூதம் வரப் போகிறது. Seventh Pay Commission வந்தது என்று வைத்துக்கொள்ளுங்கள், கிட்டத்தட்ட என்னுடைய கணக்குப்படி, குருட்டுக் கணக்கு போட்டால்கூட 15 ஆயிரம் கோடிக்கு மேலே வரும். பிறகு pension வருகிறது, நிறைய பணம் செலவாகும். மின் வாரியத்தையும் சேர்த்தால் மொத்தம் 4 இலட்சம் கோடி ரூபாய் கடன் வந்துவிடும். ஆக, இந்தக் கடனைத் தவறு என்று நான் சொல்லமாட்டேன். கடன் வாங்கியுள்ளீர்கள். ஆனால், ஒன்று நான் சொல்கிறேன், கடன் வாங்குவது தவறல்ல, ஆனால், கடன் வாங்குவது தவறு என்று சொன்னார்களே அதுதான் தவறு. உங்களுக்கு விளங்குகிறது அல்லவா?

பிற்பகல் 1-45

எங்களுடைய ஆட்சியில் 11-1-2010 அன்று ஆளுநர் உரையின்மீது ஒருவர் பேசுகையில், 'ஏற்கெனவே கற்பனை செய்து பார்க்க முடியாத, தாங்கிக் கொள்ள முடியாத கடன் சுமையில் தமிழ்நாடு சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது' என்று தெரிவித்திருக்கிறார். '2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்தக் கடன் 56,094 கோடி ரூபாய். 2009-2010 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒட்டுமொத்தக் கடன் சுமை 85,395.84 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இந்தக் கடன் சுமை 90,000 கோடி ரூபாயைத் தாண்டிவிட்டதாகக் கூறப்படுகிறது. அப்படியென்றால், தமிழ்நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் தலா 15,000 ரூபாய் கடன் உள்ளது. இதற்கு என்ன பொருள் என்றால், தமிழ்நாட்டில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் 15,000 ரூபாய் கடனில்தான் பிறக்கிறது' என்றெல்லாம் பேசியவர் நம்முடைய முதல்வர், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். இப்பொழுது நான் சொல்கிறேன், நீங்கள் இப்போது 2 இலட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ளீர்கள். அன்று 56,000 கோடி ரூபாய் கடன் வாங்கியதற்கே தமிழ்நாடு தத்தளித்து, தவித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னீர்கள். நீங்கள் இப்போது 2 இலட்சத்து 56 ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் கடன் வாங்கும்போதுமட்டும் தமிழகம்





slow ஆக, nice ஆக, தென்றல் காற்றை வாங்கிக்கொண்டு, தெம்மாங்கு பாடிக்கொண்டு இருக்கிறதா? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ஒவ்வொரு குழந்தையும் எங்கள் ஆட்சியில் 15,000 ரூபாய் கடனில் பிறந்தது; இப்பொழுது 40,000 ரூபாய் கடனுடன் பிறக்கிறது. நல்ல வளர்ச்சி! (மேசையைத் தட்டும் ஒலி)

உங்களுடைய நிதிநிலை மோசம் என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் பற்றாக்குறை 3 சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அது எல்லோருக்கும் தெரியும். இப்போது நம்முடைய மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறை அளவு 2.96 சதவிகிதம். அதாவது, வரையறுக்கப்பட்டதைவிட 0.04 சதவிகிதம்தான் குறைவு. ஆனால், அடுத்த ஆண்டு நிதிப் பற்றாக்குறையின் அளவு 3.34 சதவிகிதமாகக்கூட வரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். எங்களது ஐயம் என்னவென்றால், இந்த வருட அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற 2.96 சதவிகிதம் என்பதே நீங்கள் revenue deficit-ஐயும் fiscal deficit-ஐயும் குறைத்துக் காட்டித்தான் இந்தப் புள்ளிவிவரத்தை arrive பண்ணியிருக்கிறீர்கள் என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், ஏற்கெனவே இதேபோன்று ஒரு முறை செய்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) One minute please. அதாவது, revenue deficit and fiscal deficit were understated by Rs.2,170 crores and Rs.201 crores respectively. அதாவது, ரூ.2,170 கோடி என்றும், ரூ.201 கோடி என்றும் குறைத்துக் காட்டியிருக்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை, 2013-2014 ஆம் ஆண்டு CAG Report-ல் பக்கம் 44-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, fiscal deficit-ஐயும், revenue deficit-ஐயும் நீங்கள் ஏற்கெனவே குறைத்துக் காட்டியிருக்கிறீர்கள். அதே மாதிரிதான் இப்பொழுதும் காட்டியிருப்பீர்கள். இல்லையென்றால், 3 சதவிகிதத்தைத் தாண்டியிருக்கும் என்பதுதான் என்னுடைய கணக்கு, , . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் actual figure என்ன இருக்கிறது என்பதைப் பற்றியும், அதிலே இருக்கின்ற குறைபாடுகளைப் பற்றியும் மட்டுமே சொல்லுங்கள். நீங்களாகவே ஒரு கனவு கண்டுவிட்டு, அந்தக் கணக்கு அப்படியிருக்கும், நீங்கள் இதை இப்படிச் செய்திருக்கிறீர்கள் என்று

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜுலை 28

சொல்வது நல்ல விளக்கம் அல்ல. நாளையதினம் என்னுடைய பதிலுரையில் இதற்கு விரிவான விளக்கத்தினை அளிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் கற்பனை செய்து சொல்லவில்லை. CAG Report-ல் உள்ளதைத்தான் நான் சொல்கிறேன். அதனால்தான் CAG Report-ன் பக்க எண்ணோடு சொன்னேன். சரி, எப்படியோ, கடன் வாங்குகிறோம், வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, வரி போடுகிறோமோ, வரி போடவில்லையோ, கடன் வாங்கி, இலாகாக்களுக்கான திட்டங்களைக் கொடுத்து, வேலை செய்யுங்கள் என்று சொல்லுகிறோம். கல்வித் துறைக்கு 16,000 கோடி ரூபாய் வேண்டும், பொதுப் பணித் துறைக்கு 20,000 கோடி ரூபாய் வேண்டும் என்று அமைச்சர்கள், நிதி அமைச்சரிடம் கேட்டால், அந்தத் தொகையை நிதி அமைச்சர் உடனடியாக அனுமதிக்க முடியாது. இதற்கென Standing Finance Committee ஒன்று இருக்கிறது. இந்தக் குழுவில் மூத்த அமைச்சர்கள் அங்கம் வகிப்பார்கள். அவர்களிடம்தான் எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு நிதி வேண்டும் என்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். எங்கள் ஆட்சியில் அவ்வாறுதான் இருந்தது. (குறுக்கீடு) பிறகு Finance Secretary-க்கு போக வேண்டும். Finance Secretary கொடு என்றாலும் கொடுக்கமாட்டார்கள். அவ்வளவு வடிகட்டி, அதற்குப் பிறகுதான் இலாகாவிற்குப் பணத்தை ஒதுக்குவார்கள். எனக்குத் தெரியும் அதை வாங்குவதில் இருக்கும் கஷ்டம். அப்படி இலாகாவிற்கு வாங்கின பணத்தைச் செலவு செய்ய வேண்டுமா? இல்லையா? ஒன்றே ஒன்று சொல்கிறேன்.

பிற்பகல் 1-50

2013-2014 ஆம் ஆண்டு CAG Audit report-ல் பக்கம் 108, 112-ல் ஒரு செய்தி. என்னவென்றால், உங்களுடைய ஆட்சியில் மொத்தம் 114 கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட 12,760 கோடி ரூபாய் மொத்தமாகத் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 114 கணக்குத் தலைப்பு. நாம் இலாகா என்று சொல்வோம். Finance Department-ல் number போட்டுதான் சொல்வார்கள். அந்தக் கணக்குத் தலைப்பில் என்ன செய்வார்கள் என்றால், 12760 கோடி ரூபாய் 114 கணக்குக்கு ஒப்படைத்திருக்கிறார்கள்.



2016 ஜுலை 28] [திரு. துரைமுருகன்]

கணக்கு என்றால் வேலைக்கு என்று வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், அந்தப் பணத்தை வேலையே செய்யாமல் அப்படியே திருப்பி ஒப்படைத்துவிட்டார்கள். தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடுது. நீர்பாசனத் துறைக்கு ஒதுக்கப்பட்ட 400 கோடி ரூபாயில் ஒரு பைசாகூட செலவு செய்யாமல், மொத்தமாகத் திருப்பியிருக்கிறார்கள் என்று CAG report சொல்லியிருக்கிறது.

பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணம் 180 கோடி ரூபாய் மொத்தமாகத் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதில் இன்னொரு விசித்திரமும் இருக்கிறது. ஏதோ செய்தார்கள், செலவு செய்யவில்லை, நிலம் கிடைக்கவில்லை என்பதால் திருப்பி ஒப்படைத்துவிட்டார்கள் என்றும், அரசாங்க கணக்குத்தானே என்றும் சொல்லலாம். ஒப்படைக்கும்போது அதிகமாக ஒப்படைத்திருக்கிறார்கள். எப்படி என்று சொல்கிறேன் கேளுங்கள்.

2013-2014 ஆம் ஆண்டில் CAG report பக்கம் 113-114-ல் ஒரு செய்தி. மொத்தம் 36 கணக்குத் தலைப்புகளின்கீழ் ஒதுக்கப்பட்டது 69,445 கோடி ரூபாய். 36 இலாகாக்களுக்கு ஒதுக்கப்பட்டது 69,445 கோடி ரூபாய். கொடுக்கப்பட்ட 69,445 கோடி ரூபாய் செலவு ஆகவில்லை. செலவு ஆகாததை என்ன செய்ய வேண்டும், திருப்பி ஒப்படைக்க வேண்டும். அப்படி ஒப்படைக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவு என்றால், 6,861 கோடி ரூபாய்தான் ஒப்படைக்க வேண்டும். ஆனால், ஒப்படைத்தது எவ்வளவு என்றால் 8,048 கோடி ரூபாய் ஒப்படைத்திருக்கிறார்கள். ஒப்படைக்க வேண்டியது 6,861 கோடி ரூபாய், ஒப்படைத்தது 8,048 கோடி ரூபாய். அப்படியென்றால், 1,187 கோடி ரூபாய் அதிகமாக ஒப்படைத்திருக்கிறார்கள். இதில் ஆச்சரியம் என்னவென்றால் பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்ட 16,761 கோடி ரூபாயில் செலவுபோக மீதி 150 கோடி ரூபாய்தான் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால், 150 கோடிக்கு பதிலாக 986 கோடி ரூபாய் ஒப்படைத்திருக்கிறார்கள்.

அதேபோல, ஆதி திராவிடர் பழங்குடியினர் நலனுக்காக 2,017 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில் செலவு எல்லாம் போக மீதி 87 கோடி ரூபாய்தான் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால், 114 கோடி ரூபாய் ஒப்படைத்திருக்கிறார்கள். ஆக, ஒப்படைப்பதற்கு மேலே இத்தனை கோடி அதிகமாகக் கணக்கிலே எப்படி ஒப்படைத்திருப்பார்கள்? இது பற்றி Finance Minister, Finance Secretary சொல்வார்கள். இத்தனை நாளாக இருக்கிற

துரைமுருகனுக்கு இது தெரியாதா என்று அவர்கள் சொல்லலாம். தெரியும். எப்படி ஒப்படைக்க வேண்டும் என்றால், ஒரு வேலைக்கு 100 ரூபாய் என்று வைத்துக்கொண்டால், appropriation stage-ல் 100 ரூபாய். அதற்கடுத்த stage FMA. FMA வருவதற்குள் என்னவாகும் என்றால் 15 ரூபாய் ஆகிவிடும். நாங்கள் 100 ரூபாய் போட்டோம். ஆனால், இப்போது 80, 85 ரூபாய்க்குத்தான் செய்ய முடியும் என்றால் FMA-க்கு வந்துவிடும். வேலை செய்பவர் ரூ.85-லிருந்து ரூ.60 தான் செலவு செய்திருப்பார். அப்படியானால், இந்த ரூ.25, அந்த ரூ.15-ம் சேர்த்து இந்த பணத்தை அதிகமாக ஒப்படைத்துவிட்டார்கள் என்று காட்டலாம். அப்படி ஒரு கணக்கை Finance Secretary, he will teach him— நாளைக்கு சொல்வார். ஆனால், நான் கேட்பது என்னவென்றால், இது கல்வித் துறைக்கு என்றால், எதற்குத் திருப்பி ஒப்படைக்க வேண்டும். கல்வித் துறைக்கும், ஆதி திராவிடர்களுக்கும் ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து நீங்கள் திரும்பச் செலுத்தக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து.

பிற்பகல் 1-55

மூன்றாவதாக, Central Government Fund. State Government Fund-ல்தான் இப்படி இருக்கிறீர்கள். Central Government ஒதுக்கும் பணத்தையாவது ஒழுங்காக வாங்கியிருக்கிறீர்களா என்றால், கிடையாது. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தில் உள்ள நிபுணர் குழு ஆலோசனைக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்து, அதில் கலந்துகொள்ள தமிழக அரசுக்கு அழைப்பு அனுப்பியது. அந்தக் குழுக் கூட்டத்திற்கான பொருள் என்ன என்று கேட்டால், கூவம் நதி முகத்துவாரத்திலிருந்து சேத்துப்பட்டு இரயில்வே பாலம் வரையில் 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.105 கோடி மதிப்பீட்டில் பசுமை உருவாக்குவதைப் பற்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.105 கோடி திட்டம். அந்தத் திட்டத்திற்கு வாருங்கள் என்று நிபுணர் குழு அழைக்கிறது. தமிழக அரசின் சார்பில் எந்த மூத்த அதிகாரியும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ளவில்லை. விவரங்களைச் சொல்வதற்கு ஆள் இல்லை. கடைசியாக, அவர்கள் இந்தப் பணம் தரப்படமாட்டாது என்று சொல்லிவிட்டார்கள்.

அதுமட்டுமல்ல, 2012-2013 ஆம் ஆண்டில் கிராம குடிநீர்ப் பிரச்சினைக்காக மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ரூ.138.58 கோடியை வழங்க வேண்டும். ஆனால், அந்தத் தொகையை வழங்க மறுத்துவிட்டார்கள். ஏன் தெரியுமா? இந்த நிதியாண்டிற்கு முந்தைய ஆண்டில், ஏற்கெனவே 3 திட்டங்களுக்காக 237 கோடி



ரூபாயைக் கொடுத்திருந்தோம். அதிலே 73 இலட்சம் ரூபாய்தான் செலவு செய்திருக்கிறார்கள். ஆகையால், இந்த 138 கோடி ரூபாயைத் தர முடியாது என்று அந்தத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ரமேஷ் அன்றைக்கே மறுத்துவிட்டார். ஆகையால், மத்திய சர்க்காரோடும் நீங்கள் இணக்கமாக இல்லை.

அடுத்ததாக, தமிழ்நாடு நிதி விதி தொகுப்பின் கூறு 39-ன்படி நிதியாண்டின் இறுதி மாதத்தில் விரைவுச் செலவினம் தவிர்க்கப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமானது. According to the article 39 of the Tamil Nadu Financial Code, rush up expenditure in the closing month of the financial year should be avoided-இதுதான் விதி. ஆனால், ஒதுக்கிய பணத்தை, கடைசி மாதத்தில்தான் மாற்றி தள்ளிவிடுவார்கள்.

2013-2014 ஆம் ஆண்டில் 9 உப கோட்ட தலைப்புகளுக்கு மொத்தமாக 7 ஆயிரத்து 85 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த 7 ஆயிரத்து 85 கோடி ரூபாயை 12 மாதங்களில் செலவு செய்திருக்க வேண்டும். ஆனால், என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? இந்த 7 ஆயிரத்து 85 கோடி ரூபாயில், கிட்டத்தட்ட 5 ஆயிரத்து 550 கோடி ரூபாயை மார்ச் மாதத்திலேயே செலவு செய்துவிட்டார்கள். அப்படியென்றால் மட, மடவென்று பில்லை போட்டு தள்ளிவிடுவார்கள். அப்படி விரைவாகச் செய்யக்கூடாது.

காவேரி பாசன வகைப்பாடு, வைகைப் படுகையில் வெள்ளம், உபரி நீரை திசை திருப்புதல், சேலம் மாவட்ட மேட்டூர் அணை புறக் கால்வாய், காவேரி ஆற்றின் உப நதி மற்றும் வடிகால் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல், ஈரோடு மாவட்டத்தில் உள்ள காளிங்கராயன் கால்வாய் புனரமைத்தல், புதிய ஏரிகள் மற்றும் வாய்க்கால்கள் கட்டுதல் மற்றும் தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவுபடுத்துதல் என இவற்றுக்காக ஒதுக்கப்பட்ட பணம் நூறு சதவிகிதமும் மார்ச் மாதத்திலேதான் செலவு செய்யப்பட்டிருக்கின்றது என்பது என்னுடைய கணக்கு. Financially நாம் சரியாக இல்லை; management-ம் financially mis-management. அதற்காக எந்த நடவடிக்கைகளும் எடுக்க முடியவில்லை. ஆனால், நீங்கள் தள்ளுபடி செய்துகொண்டே போகிறீர்கள். இதுகூட பரவாயில்லை, நான் பாராட்டுகிறேன். இப்போது விவசாயிகளுடைய நிலைமை என்ன? இந்தத் தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிப்படி இந்த பட்ஜெட்டில் என்ன

சொல்லியிருக்கிறீர்கள்? 31-3-2016 வரை குறு, சிறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியிருந்த குறுகிய கால பயிர்க் கடன்கள், நடுத்தரக் கால மற்றும் நீண்டகால விவசாயக் கடன்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தள்ளுபடி செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். வரவேற்கிறேன், அதை நான் பாராட்டுகிறேன். இதன்படி தள்ளுபடி செய்ய வேண்டிய கடன் மற்றும் வட்டி உள்ளிட்ட மொத்தத் தொகை 5,780.92 கோடி ரூபாய். இந்தத் தொகை திருப்பிச் செலுத்தப்படும் வரையுள்ள வட்டியுடன் கூட்டுறவு வங்கிகளுக்கு 5 ஆண்டுக் காலத்தில் அரசால் திருப்பிச் செலுத்தப்படும். வங்கியில் கடன் கொடுத்துவிட்டார்கள்.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** 'இவர்களும் அந்த வங்கிகளிடம் இனி விவசாயிகளிடம் கேட்காதீர்கள், நாங்கள் கொடுக்கிறோம்' என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், என்ன செய்துவிட்டார்கள்? ஒரு தொகையை மட்டும் கொடுத்துவிட்டு, மீதியை நாங்கள் 5 வருடங்களில் கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள். இந்தத் தள்ளுபடியால் 8,35,360 குறு மற்றும் 8,58,785 சிறு விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்றும், இந்தத் தள்ளுபடித் திட்டத்திற்காக 2016-2017 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1,680.73 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு நிதியமைச்சர் தெரிவித்திருக்கிறார். இதில் ஏற்படுகிற சந்தேகம் என்னவென்றால், தள்ளுபடி செய்யப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூ.5,780.92 கோடி. இந்த ஆண்டு தள்ளுபடித் திட்டத்திற்கு அரசு ஒதுக்கியிருக்கிற தொகை ரூ.1,680.73 கோடி. ஆக, மீதி ரூ.4,100.19 கோடி. இதை நீங்கள் அடுத்த 4 வருடங்களில் வட்டியுடன் திருப்பித் தருவோம் என்று சொல்கிறீர்கள். ரூ.5,780 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்த வங்கிக்கு நீங்கள் ரூ.1,680 கோடி ரூபாய்தான் தற்போது கொடுத்திருக்கிறீர்கள். மீதி ரூ.4,100 கோடிக்கான நிதியாதாரம் அந்த வங்கிகளுக்கு இருக்காது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். (குறுக்கீடு) இல்லையே, இப்போதுதானே நீங்கள் இங்கே சொன்னீர்கள். (குறுக்கீடு) இப்போது இங்கே சொன்னீர்களல்லவா? எப்படி கொடுக்கப் போகிறீர்கள் என்று. (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமல்லவா? (குறுக்கீடு) இல்லை, ஒரு நிமிடம். (குறுக்கீடு) சரி, நீங்கள் அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நிதியாதாரம் இல்லாமல் அந்த வங்கிகள் எப்படிச் செயல்படும்? இதற்கிடையில் புதியதாக 6,000 கோடி ரூபாய் பயிர்க் கடனாக அதே கூட்டுறவு வங்கிகள்மூலம் தரப்படும் என்று சொல்கிறீர்கள். இந்த 6,000 கோடி ரூபாயில் வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை மொத்தமாகச் செலுத்தியிருந்தால் வங்கியே அந்தக் கடனைத் திருப்பி மறுபடியும் கொடுக்கலாம். இதை நீங்கள் ஏன் செய்யவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. இதற்கு அமைச்சர் என்ன சொல்வாரென்றால், உங்கள் ஆட்சியில்கூட நீங்கள் இப்படித்தான் செய்தீர்கள் என்று சொல்வார். ஐயா, நாங்கள்தான் இங்கே வந்துவிட்டோமே, பிறகு எங்கள் ஆட்சி, எங்கள் ஆட்சி என்று சொன்னால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** நான் பதில் சொல்ல வேண்டுமல்லவா? எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கேள்வியும் நானே, பதிலும் நானே என்று பேசக் கூடாது. இப்படிப் பேசாதீர்கள். கேள்வி கேட்கிறீர்கள். பதில் சொல்ல வேண்டியது எங்களுடைய கடமை. மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்குத்தான் உட்கார வைத்திருக்கிறார்கள். நீங்கள் கேட்டிருப்பது, உங்கள் ஆட்சியிலே எவ்வளவு தள்ளுபடி செய்தீர்கள் என்று. எங்கள் ஆட்சியிலே எவ்வளவு தள்ளுபடி செய்திருக்கிறோம் என்று சொல்கிறேன். நீங்கள் எப்படி படிப்படியாகக் கொடுத்தீர்கள்? அதேபோன்றுதான் அடுத்த 5 ஆண்டுகளில் இந்தக் கடனை அரசு வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் என்று சொல்கிறோம். இது ஒரு வங்கியிலிருந்து கொடுப்பதல்ல. 4,480 தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், கடன் சங்கங்கள் கொடுத்திருக்கின்றன. மாவட்ட, மத்திய வங்கிகள் கொடுத்திருக்கின்றன. மாநில வங்கிகளும்

கொடுத்திருக்கின்றன. நபார்டிலிருந்து வாங்கிக் கொடுத்திருக்கின்றன. இதற்கு முன்னால் எப்படி படிப்படியாகக் கொடுத்தார்களோ அதேபோன்று கொடுப்பார்கள் என்பதுதான் இதனுடைய சூட்சமம் என்பதைச் சொல்லிவிட்டேன். இன்னும் ஒன்று என்னவென்றால், 2016-லே மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கியிருக்கிற பயிர்க் கடன் 15,08,311 பேருக்கு ரூ.5,016.55 கோடி, மத்திய காலக் கடன் 1,82,130 விவசாயிகளுக்கு ரூ.732.32 கோடி, நீண்டகாலக் கடன் 3,704 பேருக்கு ரூ.32.5 கோடி. ஆக மொத்தம், ரூ.5,780.92 கோடி மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இந்தத் தள்ளுபடித் தொகையை மாண்புமிகு அம்மா அவர்கள் படிப்படியாகக் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில், நீங்கள் தள்ளுபடி செய்ததையும் ஒருகணம் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். 2006-லே நீங்கள் தள்ளுபடி செய்தது ரூ.3,715.68 கோடி பயிர்க் கடன்தான். ரூ.668.08 கோடி நீண்ட காலக் கடன் மற்றும் ரூ.986.12 கோடி மத்திய காலக் கடன். ஆக 5,369.88 கோடிதான் கொடுத்தீர்கள். இவ்வளவுதான் நீங்கள் கொடுத்தீர்கள். ஆனால் கொடுத்த வட்டியையெல்லாம் சேர்த்து 'ரூ.7,000 கோடி கொடுத்தோம்' என்று நீங்கள் சொன்னீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு வட்டியைச் சேர்க்காமல், (குறுக்கீடு) முதலில் நான் சொல்வதை நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள்.

பிற்பகல் 2-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்துகொண்டு ஏன் பேசுகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்தானே விளக்கம் கேட்டிருக்கிறார்? கடன் சங்கங்களுக்கும் படிப்படியாகக் கொடுப்போம். எப்படி வட்டியையும் சேர்த்து கொடுக்கப் போகிறோம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் எப்படிக் கொடுத்தீர்களோ, அதுபோன்றுதான் மாண்புமிகு அம்மா அவர்களும் கொடுக்கப் போகிறார்கள். அதிலும், முழுமையாகக் கொடுக்க வேண்டும். நீங்கள் ஆட்சியைவிட்டுப் போகும்போது என்ன செய்தீர்கள்? இதிலும் ரூ.500 கோடி அளவிற்கு நீங்கள் கொடுக்காமலேயே போய்விட்டீர்கள். கடைசியில் கொடுக்க வேண்டிய ரூ.5,369.88 கோடியில் ரூ.500 கோடியை அந்தச் சங்கங்களுக்கு கொடுக்கவில்லை. இன்று



அந்தத் தொகை ரூ.407 கோடி. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்த பிறகு, ரூ.250 கோடி நிதியை அதற்காகக் கொடுத்தார்கள்.

இன்றைக்கு தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்களெல்லாம் வலுவான நிதி ஆதாரத்தைப் பெற்றிருக்கின்றன; பல்வேறு வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்த தீர்க்கமான நடவடிக்கையினாலே, தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி, அனைத்து கூட்டுறவுக் கடன் சங்கங்களும் வளர்ந்திருக்கின்றன. நிதி ஆதாரத்தைப் பெற்றிருக்கின்றன. அன்றைக்கு இருந்த மாவட்ட வங்கிகளின் நிலை வேறு. ஆனால், இன்றைக்கு வருமான வரி கட்டுகின்ற அளவிற்கு மாவட்ட வங்கிகள் வளர்ந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆன்-லைன் வர்த்தகத்திற்கு வந்திருக்கின்றன. இன்றைக்கு கூட்டுறவு வங்கிகள் தனியார் வங்கிகளுக்கு இணையாக வளர்ந்திருக்கின்றன. அதிக டெபாசிட்டுகளைப் பெற்றிருக்கின்றன. உங்களுடைய ஆட்சிக் காலத்தில் வெறும் ரூ.26,000 கோடி அளவிற்குத்தான் டெபாசிட் இருந்தது. இன்றைக்கு ரூ.52,000 கோடியாக டெபாசிட் உயர்ந்திருக்கிறது என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் காட்டுகிறது. எனவே, படிப்படியாக இந்தக் கடன்கள் தீர்க்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்ததைப்போல அல்ல. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதை மட்டும்தான் இன்றைக்குக் குறிப்பிட்டு இருக்கிறோம். ஆனால் நீங்கள் தள்ளுபடி செய்த தொகை ரூ.5,300 கோடி; அதாவது ரூபாய் நாலாயிரத்து சில்லரை கோடிதான். ஆனால் நீங்கள் 'ரூ.7,000 கோடி தள்ளுபடி செய்தோம்' என்று வெளியில் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஒரு மாதத்திற்கு முன்புகூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'ரூ.7,000 கோடி தள்ளுபடி செய்தோம்' என்று பேசியிருக்கிறார். எங்கே போய் ரூ.7,000 கோடியைத் தள்ளுபடி செய்வது? பயிர்க் கடன் என்று சொன்னால்—மாண்புமிகு அம்மா அவர்கள் பயிர்க் கடனுக்காக—நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் விளக்கம் கேட்டீர்கள், நாங்கள் சொல்கிறோம். இது மக்களுடைய வரிப் பணம். மக்களுடைய வரிப் பணத்தைப்

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கொடுப்பதுதானே நியாயம்? இன்றைக்கு விவசாயிகள் நஷ்டம் அடைகிறார்கள் என்றால் பயிரினாலேதான் நஷ்டம் அடைவார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் என்ன செய்தீர்கள்? டிராக்டர், அறுவடை மெஷின் (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். இதற்கெல்லாம் சேர்த்து நீங்கள் தள்ளுபடி செய்தது அந்தத் தொகை. நீங்கள் தள்ளுபடி செய்தது வெறும் ரூ.3,715 கோடிதான். அதை நீங்கள் சொல்லவில்லை. ஆனால் 'ரூ.7,000 கோடி தள்ளுபடி செய்தோம்' என்று சொல்கிறீர்கள். இது தவறு. கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் உங்களுக்கு விவரமாகச் சொல்லவேண்டுமென்றால் சொல்கிறேன். அவர் கேட்டதற்கு இப்பொழுது உள்ள நிலைமை என்ன என்பதற்குப் (குறுக்கீடு) பதில் கொடுத்திருக்கிறேன். வருகிற திங்கட்கிழமை கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை இருக்கிறது. அன்றைக்கு விவரமாக வேண்டுமென்றாலும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கடன் தள்ளுபடி குறித்து மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசினார். எல்லா விவரங்களும் அவருக்குத் தெரியும். விவசாயிகள் வாங்கிய மொத்தக் கடன், வட்டி உள்ளிட்ட கடன் தொகையான ரூ.5,780 கோடி தள்ளுபடி செய்யப்படும் என்றும், அந்தத் தொகை 5 ஆண்டுகளில் அசலும், எப்பொழுது அந்தக் கடனைக் கொடுக்கிறோமோ அதற்குரிய வட்டியும் சேர்த்து கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துவிட்டார்கள். இதிலே எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது. நீங்கள் என்ன சொன்னீர்கள்? அந்தப் பணத்தை மொத்தமாகக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுத்தால் அவர்கள் மறுபடியும் கடன் கொடுப்பார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2016-2017-ல் கூட்டுறவு வங்கிகளுடைய பணியில் தடை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக ரூ.6,000 கோடியை புதிய பயிர்க் கடனுக்காக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் ஒன்றும் தேக்க நிலை ஏற்படாது. ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? மொத்தக் கடனும் தள்ளுபடி செய்யப்படும் என்று





சொல்லிவிட்டு உங்களுடைய பட்ஜெட்டில் ஒவ்வொரு வருடமும் ரூ.1,000 கோடியை ஒதுக்கினீர்கள். 2006-லிருந்து உங்களுடைய பட்ஜெட்டை எடுத்துப் பாருங்கள். புதிய பயிர்க் கடன் வாங்குவதற்காக ரூ.1,000 கோடி கடன் வழங்கப்படும் என்று அறிவிப்புதான் அதிலே இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் துல்லியமாகக் கணக்கெடுத்து இந்த ஆண்டு மட்டும் ரூ.1,680 கோடியை, அசலுக்கும், வட்டிக்கும் சேர்த்து, குறு, சிறு விவசாயிகள் கட்டவேண்டிய தொகையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செலுத்துகிறது. இதுதான் நடைமுறை. இதனால் கூட்டுறவு வங்கியினுடைய பணியும் பாதிக்கப்போவது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாய்ப்புக் கேட்கும்போது அனுமதிக்க வேண்டும். நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டால், 23 நிபந்தனைகளையெல்லாம் போடாமல் குறு, சிறு விவசாயிகள் மட்டுமல்லாமல் எல்லா விவசாயிகளுக்கும், கடன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

இந்த House-ல், whether you are making a statement or assurance, அனைத்துமே உறுதிமொழியாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அதனால்தான் சட்டமன்றத்தில் Assurance Committee என்றே ஒன்று உண்டு. அமைச்சர்கள் ஏதாவது சொல்லிவிட்டால், அது Assurance Committee-யின் ஆய்வுக்குப் போய்விடும். ஆனால், இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவிப்புகளைப் படிக்கின்றார்கள். இந்த சபையிலே அதைச் சொல்வதால், அது Assurance ஆக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இப்போது நான் அதைப்பற்றிப் பேச வேண்டுமென்றால், நேரம் இல்லை. அதற்கு ஒரு தனி debate வைத்தால் பரவாயில்லை. ஆனால், ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அதாவது, கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்; 'நெம்மேலியில் தற்போது நிறுவப்பட்டுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் சார் நிலையத்திற்கு அருகில் காலியாக உள்ள 10.50 ஏக்கர் நிலத்தில், ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்படும்' என்றும், 'சென்னைக்கு அருகில்

உள்ள பட்டிபுலம் பகுதியில் எதிர்காலத்தில் 400 மில்லியன் லிட்டர் வரை விரிவாக்கம் செய்யக்கூடிய வகையில், 200 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் நிலையம் ஒன்று நான்காண்டுகளுக்குள் அமைக்கப்படும்' என்றும், 16-4-2013 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையில் விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள். அறிவிப்பு வெளியிடப்பட்டு மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் பதிலுரையிலே தெரிவிக்கலாம். (குறுக்கீடு) தங்களுடைய பதிலுரையில் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்புகளெல்லாம் Assurance Committee-க்குச் சென்றிருக்கின்றன என்பதை நான் இங்கு பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** Assurance Committee-க்குப் போய்விட்டது என்று சொல்கிறீர்கள். அவை என்ன ஆயிற்று என்று கேட்கவேண்டும். அதைச் சீக்கிரம் செய்யவேண்டும். ஏனென்றால், அறிவிப்பு வெளியிடப்பட்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டன.

அதேபோல், தமிழ் வளர்ச்சித் துறைக்கு ரூ.32.94 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதோடு, யார், யாருக்கு என்ன சிறப்புகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இதே அவையில் 14-5-2013 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் ஓர் அறிவிப்பு வெளியிட்டார்கள். அதில், அமெரிக்க நாட்டிலுள்ள சுதந்திர தேவி சிலையைப்போல, சங்கம் வைத்து தமிழை வளர்த்த மதுரையில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் தமிழ்த் தாய் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு மூன்றாண்டுகள் ஆகிவிட்டன; என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதை தங்களுடைய நிதிநிலை அறிக்கையின்மீதான பதிலுரையிலே சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மூன்றாவதாக, தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். பால் உற்பத்தியாளர்கள் தங்களது கோரிக்கைகளுக்காக இன்று 28 ஆம் தேதி மறியல் செய்யப் போகிறோம்; strike-ஆர்ப்பாட்டம் நடத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களது கோரிக்கை என்னவென்றால், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களிடமிருந்து வாங்கும் 10 லிட்டருக்கு 1 லிட்டர் முதல் 3 லிட்டர் வரை அவர்களிடமே திருப்பியனுப்புவது; இவ்வளவுதான் பால் வாங்க வேண்டுமென்று சங்கங்களுக்கு கோட்டா சீலிங் முறையை அமல்படுத்துவது; இப்படி 10, 15 நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அவர்களோடு கலந்து பேசி, இதற்கெல்லாம் முடிவு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, முக்கியமானது. Law & Order-ஐப்பற்றி இங்கு எல்லோரும் பேசினார்கள். இன்றைக்கு ஒன்றுமே இல்லை. அதாவது, “கள்வரும் இல்லை, காவலரும் இல்லை இந்நாட்டில்” என்று கம்பன் பாடியதைப்போன்று, இன்று நாடு இருக்கிறது என்று பேசினார்கள். இருந்தால் நல்லதுதான். இல்லையே. ஆகையினால், Law & Order, (குறுக்கீடு) ஆனால், ஒன்று சொல்கிறார். (குறுக்கீடு) இது ஒன்றே ஒன்றுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முழுவதுமாக இல்லையென்று சொல்லவில்லை. வளர்ந்து வருகின்ற மக்கள்தொகைக்கேற்ப குற்றங்கள் நிகழ்ந்து வருவது தவிர்க்க முடியாததுதான். ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் குற்றங்கள் குறைக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு, சட்டம்-ஒழுங்கு காப்பாற்றப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற விவரத்தைத்தான், நான் புள்ளிவிவரங்களோடு இங்கே எடுத்துக் கூறினேன். நான் என்ன சொன்னேன் என்பதை நீங்கள் திரும்பவும் கேட்க வேண்டும். அதாவது, நடைபெறும் குற்றங்களை முழுவதுமாகக் கட்டுப்படுத்த முடியாது. அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. கட்டுப்படுத்தப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வழக்குப் பதிவு

செய்யப்பட்டிருக்கிறது; தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. சட்டம்-ஒழுங்கு காப்பற்றப்பட்டிருக்கிறது. சட்டத்தின் ஆட்சிமூலம் மாண்புமிகு அம்மா அவர்கள் அதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் இங்கே தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டினேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. துரைமுருகன்:** *தமிழ்நாடு அமைதிப் பூங்கா என்று சொல்லும்போது, (குறுக்கீடு) வேறு ஒன்றுமில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்கள் எதற்கு வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். (குறுக்கீடு) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களை அமைச்சராக்கி இருக்கிறார்கள். உங்களுக்குப் பதில் சொல்லக்கூடிய இடத்திலே நாங்கள் இருக்கிறோம். (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்குத்தான் சொல்லப் போகிறேன். (குறுக்கீடு)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு உங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சட்டம்-ஒழுங்கு, தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி இங்கே சொன்னார்கள். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 2-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள், அமைச்சர் என்ன சொல்கிறார் என்று கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *இருங்கள், ஏன் அவசரப்படுகிறீர்கள்? சட்டம்-ஒழுங்கு நிலைமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எப்படி இருந்தது என்பதற்கு ஒரே ஓர் எடுத்துக்காட்டு (குறுக்கீடுகள்) இருங்கள், அமைதியாக இருக்கமாட்டேன் என்கிறீர்களே! நாங்கள் எவ்வளவு அமைதியாக இருக்கிறோம். நீங்கள் ஏன் அமைதியாக இருக்கமாட்டேன் என்கிறீர்கள்?*



*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளர் கொலை செய்யப்பட்டது எப்போது தெரியுமா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில். (மேசையைத் தட்டும் ஒலி) 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளர் கொலை செய்யப்பட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) கொலை செய்யப்பட்ட இடம் எங்கே தெரியுமா? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளர் வீட்டிற்குள்ளேயே. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளருக்கு வீட்டிற்குள்ளேயே பாதுகாப்பு கொடுக்காத அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசாங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் சட்டம்-ஒழுங்கைப் பற்றிப் பேசுவதில் என்ன நியாயம் இருக்கிறது? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். நீங்கள் பிறகு பேசுங்கள். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் பதில் சொல்லுங்கள், நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அமைச்சர் பேசி முடித்த பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பதில் சொல்லலாம். (குறுக்கீடு) உட்காருங்கள், அமைச்சர் சொல்லி முடித்த பிறகு, நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். நீங்கள்தானே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் வழக்குக்கு உள்ளே போகவில்லை.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மதுரையில் தினகரன் பத்திரிகை அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) உயிரோடு பத்திரிகையாளர்கள் எரிக்கப்பட்டார்கள். யாருடைய ஆட்சியில்? (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு இன்றைக்கு அமைதியாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நான் (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நான் சபையில் இல்லாத நேரத்தில் CAG report குறித்து இங்கே சில கருத்துகளைத் தெரிவித்து, அதற்கு அவரே பதிலும் சொல்லியிருக்கிறார். அதற்குரிய பதிலை நான் நாளைக்கு அவையில் தெரிவிக்கின்றேன். ஆகவே, மீண்டும் அவர் தனது உரையைத் தொடருமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், பிறகு பேசலாம்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டம்-ஒழுங்குப் பற்றி சொன்னேன். அது ஒரு தீப்பொறி பறக்கிற சமாச்சாரம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதற்கு நாசூக்காக ஒரு பதிலைச் சொன்னார்கள். முடிந்தது, நானும் உட்கார்ந்துவிட்டேன்.

நீதிமன்றத்தில் இருக்கின்ற ஒரு வழக்கு குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நீதிமன்றத்தில் இருக்கும் பொருள் குறித்துப் பேசக்கூடாது என்று நீங்கள் சொல்வீர்கள். இப்போது எங்களுக்கு என்ன சொல்வீர்களென்றால், "அது என்னவென்று பார்த்து, நான் நாளைக்குச் சொல்கிறேன்" என்று சொல்வீர்கள். நீங்கள் இதுமாதிரி சொன்னீர்களென்றால், நாளைக்கு நாங்கள் அவைக்கு வரமாட்டோம். புறக்கணிப்போம். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள். (குறுக்கீடுகள்)



பிற்பகல் 2-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் சென்று அவரவருடைய இருக்கையில் உட்காருங்கள். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, அவரது விளக்கத்தை ரெக்கார்டு செய்யலாமில்லையா? மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது அல்லவா? (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதற்கு உங்களிடம் பதில் இருந்தால், நீங்கள் பேசுங்கள், அதுவும் ரெக்கார்டு ஆகும். அவ்வளவுதான், அதில் ஒன்றுமில்லை. பேசுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டுக்கு, எதிர்பாட்டு பாடுவது போன்ற செயலைச் செய்ய நான் விரும்பவில்லை. இப்போது மணி 2.30 ஆகிவிட்டது, சபையை ஒழுங்காக நடத்த வேண்டும். அதனால் நான் என்ன சொல்கிறேன் என்றால், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் நீதிமன்றத்தில் இருக்கும்பொருள் குறித்துப் பேசினார். அதை நீக்கவில்லையென்றால், நானும் இப்போது பேச வேண்டியிருக்கும். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் பேசியதற்கான விளக்கம்தான்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தரவேண்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். நான் சொன்னது என்னவென்று தெரியுமா? (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொன்னது, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதற்கு நீங்கள் விளக்கம் சொல்லலாம் என்றுதான் சொன்னேனேயொழிய, (குறுக்கீடுகள்) நீங்கள் தேவையில்லாதவற்றை இங்கு பேசியிருக்கிறீர்கள். அதனால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசியது நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பேசியதற்குதான் விளக்கம் சொல்லவேண்டும் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) அதற்கு விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதற்கு ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால், விளக்கம் சொல்லலாம். (குறுக்கீடுகள்) ஆனால், தேவையில்லாமல் வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுவதை நான் அனுமதிக்க முடியாது. ஆகவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மேற்கொண்டு பேசலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்). எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதை (குறுக்கீடுகள்) அதாவது, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் வழக்கிற்குக் குந்தகமாகப் பேசியிருந்தால், நிச்சயமாக அதை நான் நீக்கியிருப்பேன். (குறுக்கீடுகள்) வழக்கிற்குள்ளே அவர் போகவில்லை. அவர் மேலோட்டமாகத்தான் பேசினார். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் மேலேழுந்தவாரியாக வழக்கைக் குறித்துத்தான் சொன்னார். நீதிமன்றத்திற்குக் குந்தகம் விளைவிக்கின்ற மாதிரி அவர் எதுவும் சொல்லவில்லை. அதனால் அவர் பேசியதை நீக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் மேற்கொண்டு பேசலாம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மேற்கொண்டு பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நிதிநிலை அறிக்கையின்மீது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)



**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேன் என்றால், நான் வழக்கின் உள்ளேகூட போகவில்லை. ஆனால், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் வழக்கைப் பற்றி முழுக்கப் பேசினார். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க நீங்கள் மறுக்கிறீர்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடுகள்) அதைப் பற்றியெல்லாம் அவையில் பேசமுடியாது. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பேசிய அந்தக் கருத்தில், பொருளில், அந்த வழக்கிற்குக் குந்தகம் ஏற்படக்கூடிய கருத்து ஏதேனும் பதியப் பெற்றிருந்தால், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நான் படித்துப் பார்க்க வேண்டும். குந்தகம் விளைவிக்கிறதா என்பதை நான் பார்க்க வேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்) வழக்கிற்குக் குந்தகம் விளைவிக்கிற மாதிரியிருந்தால் நிச்சயமாக நீக்கிவிடுகிறேன் என்று நான் முன்பே உங்களுக்குச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் சொல்வதை வைத்து நான் எப்படி நீக்க முடியும்? (குறுக்கீடுகள்) இல்லை, மேலெழுந்தவாரியாக அவர் பேசியதைப் பார்த்தால், (குறுக்கீடு) நீங்கள் போட்ட சப்தத்தில் கேட்கவில்லை, அப்படியிருந்தால் அதை நான் நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, சொல்வதைக் கேளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன உடனேயே நான் அதைப் பற்றி சொல்லியிருக்கின்றேன். மீண்டும் அவை முன்னவர் அவர்களும் அதைச் சொல்லியிருக்கின்ற காரணத்தினால் வழக்கிற்குக் குந்தகம் விளைவிக்கிறமாதிரி இருந்தால், நிச்சயமாக நீக்கிவிடுகிறேன் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள், உரையைத் தொடருங்கள், நீங்கள் உரையைத் தொடருங்கள். (கூச்சல்-குழப்பம்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேண்டாம் விடுங்கள், அதை நான் நீக்கிவிட்டேன். *(குறுக்கீடுகள்)* இல்லை, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். குழப்பம் விளைவிக்கின்ற மாதிரி நீங்கள் பேசுகின்றீர்கள். நீங்கள் பேசுவது முறையல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசுகின்றீர்களா, இல்லையா? *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டனர்.)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதில் எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் ஒன்றை நான் சொல்லிக்கொள்கின்றேன். ** சபாநாயகர் அவர்களிடம் நாங்கள் இன்றைக்கும் கோரிக்கை வைக்கிறோம். தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கிறேன் என்று சொல்லிவிடுங்கள். எங்களுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. இந்தச் சபையை அமைதியாக நடத்த வேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகின்றோம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் என்னிடத்தில் கேட்டபொழுது நான் சொன்னேன். ஜனநாயகம் குறித்து சொன்னது நீக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)* முதலில் இடத்திற்குச் செல்லுங்கள். இப்படிச் செய்வது நியாயம் இல்லை. உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுங்கள். உங்கள் துணைத் தலைவர் அவர்கள்தான் பேசிக்கொண்டிருக்கின்றார். *(குறுக்கீடுகள்)* நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன், உங்களுடைய துணைத் தலைவர் அவர்கள்தான் பேசிக்கொண்டிருக்கின்றார். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி, உங்கள் இடத்திலிருந்து பேசாமல், இப்படி இங்கு வந்து பேசுவது முறையற்ற செயல். நான் பலமுறை உங்களை எச்சரித்திருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* அது சரியல்ல.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*(குறுக்கீடுகள்)* இது சம்பந்தமாக என்னுடைய தீர்ப்பை நான் ஏற்கெனவே தெளிவாகத் தெரிவித்துவிட்டேன். *(குறுக்கீடுகள்)* இதற்குமேல் என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. என்னுடைய தீர்ப்பை நான் மாற்றுவதாக இல்லை. *(குறுக்கீடுகள்)* நீங்கள், உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசட்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 2-30*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று 'சபாநாயகர் ஒழிக' என்று கோஷமிட்டனர்.)*

எல்லோரும் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் சபையை நடத்திக் கொண்டிருக்கிறேன். நான் சொன்ன உத்தரவிற்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். *(குறுக்கீடுகள்)* நீங்கள் கட்டுப்படுகிற மாதிரி தெரியவில்லை. *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* என்னுடைய நடவடிக்கைகளை நீங்கள் கட்டுப்படுத்த முடியாது. *(குறுக்கீடுகள்)* ஒன்று மட்டும் சொல்கிறேன், நீங்கள் எத்தனை முறை *(குறுக்கீடுகள்)* சொல்வதைக் கேளுங்கள், எத்தனை முறை என்னை ஒழிக என்று சொன்னாலும் சரி, என்னை எதிர்த்து நீங்கள் என்ன கோஷம் போட்டாலும் சரி, நான் சொன்னது, சொன்னதுதான். என்னுடைய தீர்ப்பை நான் மாற்ற முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏற்கெனவே நான் சொன்ன தீர்ப்பு-வழக்கு மன்றத்திற்குக் குந்தகம் விளைவிக்கிறமாதிரி இருந்தால், நிச்சயம் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* அதிலே மாற்றுக் கருத்தில்லை. *(குறுக்கீடுகள்)* நீங்கள் இதை ஏற்றுக்கொண்டு, அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். பேரவையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தொடர்ந்து பேசுவதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன். நீங்கள், பேசலாம். *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. சபையை நடத்த வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. ஆகவே, *(குறுக்கீடுகள்)* சொல்வதைக் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொல்கிற மாதிரி எல்லாம் *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொல்கிற மாதிரி எல்லாம் என்னால் சபையை நடத்த முடியாது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொல்வதைக் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* நான் பலமுறை சொல்லிவிட்டேன். *(குறுக்கீடுகள்)* பலமுறை சொல்லிவிட்டேன். *(குறுக்கீடுகள்)* அவையை நடத்த வேண்டிய பொறுப்பிலே நான் இருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* ஆகவே, நீங்கள் என்னை எவ்வளவுதான் திட்டினாலும் பரவாயில்லை, திட்டுங்கள். *(குறுக்கீடுகள்)* ஆனால், நான் விதிகளின்படி *(குறுக்கீடுகள்)* சமமாகத்தான் இந்த அவையை நடத்துகிறேன்; நடத்திக் கொண்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* நீங்கள் இதற்குமேல் என்னை வற்புறுத்த முடியாது. *(குறுக்கீடுகள்)* நீங்கள், பேசுவதாக இருந்தால் பேசலாம். *(குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீங்கள் அனைவரும் கூச்சல் போட்டாலும் சரி, நான் சொன்னதுதான் தீர்ப்பு' என்று சொல்கிறீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், சபாநாயகர் என்பவர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்வதைக் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* அவையில் ஒரு சபாநாயகருக்கு எதிராகக் கோஷமிடுவது என்பது எந்த விதியில் இருக்கிறது? *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொல்லுங்கள்; எந்த விதியில் அதுபோன்று இருக்கிறது? *(குறுக்கீடுகள்)* நீங்கள் எந்த விதியின் அடிப்படையில், சபைக்குள்ளேயே 'சபாநாயகர் ஒழிக' என்று திட்டமிட்டு கோஷமிடுகிறீர்கள்? இது என்ன நியாயம்? *(குறுக்கீடுகள்)* ஆகவே, நீங்கள் எந்த விதிகளுக்கும் கட்டுப்படாமல் இருக்கின்றீர்கள். நீங்கள் சொல்கிறபடிதான் சபையை நான் நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். அப்படியெல்லாம் என்னால் சபையை நடத்த முடியாது. விதிகளின்படி, அனைவருக்கும் சமமாகத்தான் நான் சபையை நடத்துவேன். ஏற்கெனவே நான் சொன்ன தீர்ப்பிலே எந்த மாற்றமும் இல்லையென்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*



*பிற்பகல் 2-35*

திரும்பத் திரும்ப நான் சொல்கிறேன். எந்தப் பொருள் பற்றியும் நீதிமன்றத்தினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காத வகையில் பேசலாம் என்று விதிகளிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தான் நீங்கள் அன்றைக்கு பாலாறு பிரச்சினைப்பற்றி பேசும்போதுகூட நான் ஏற்கெனவே சொன்னேன். 'நீதிமன்றத்தில் இருக்கிறது; நான் குந்தகம் விளைவிக்காமல் பேசுகிறேன்' என்று சொன்னீர்கள். நான் அனுமதி அளித்தேன்; நீங்கள் பேசினீர்கள். ஆகவே, நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காத வகையில் பேசுவதற்கு அனுமதி உண்டு. இதை விட்டுவிட்டு வேறு ஏதாவது பேசுவதாக இருந்தால் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்து குந்தகம் எதுவும் விளைவிக்காத வகையில் பேச வேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்கள். நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அப்படித்தான் பேசினார் என்று சொல்கிறீர்கள்; நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். அதே அடிப்படையில்தான் எங்களுடைய துணைத் தலைவர் அவர்களும் ** பேசினார். அவர் களங்கப்படுத்துகிற மாதிரி பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன் இருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பேசியது இருந்தால் எங்கள் துணைத் தலைவர் பேசியதும் இருக்க வேண்டும். அதை நீக்கினால், இதையும் நீக்குங்கள். இல்லையென்றால், இது முறையல்ல. இதே தீர்ப்பைத்தான் தொடர்ந்து வழங்குவீர்கள் என்று சொன்னால், இதேபோன்று 3, 4 முறை இதே அவையிலே நான் படித்துப் பார்த்து, பிறகு சொல்கிறேன் என்று சொல்லி இதுவரையில் முறையான தீர்ப்பு வழங்கப்படவில்லை. நான் பேரவைத் தலைவரின் மதிப்பைக் குறைத்துப் பேசுவதாகத் தயவு செய்து கருதிவிடக்கூடாது. இல்லையென்று சொன்னால், நாங்கள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நாளையதினம் நிதியமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றுகின்றபோது இந்த அவையைப் புறக்கணிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். தயவுகூர்ந்து அந்த நிலையை ஏற்படுத்த வேண்டாம். எனவே, மீண்டும் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிய அந்த உரையின் குறிப்பை தயவுகூர்ந்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளர் கொலை செய்யப்பட்டார் தி.மு.க ஆட்சியிலே, இது என்னுடைய செய்தி. தி.மு.க. மாவட்டச் செயலாளர் கொலை செய்யப்பட்டது மாவட்டச் செயலாளருடைய வீட்டுக்குள்ளேயே இது மற்றொரு செய்தி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் குந்தகம் ஏற்படுத்தும்படி இருந்தால் அதை எடுத்துவிடுகிறேன் என்று சொல்கிறேனே! (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நான் படித்துக்கூட பார்க்கக் கூடாதா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் நான் குற்றவாளிகளைப் பற்றியோ அல்லது எதிரிகளைப் பற்றியோ, கொலையுண்டவரின் பெயரையோ உச்சரிக்கவே இல்லை. (குறுக்கீடுகள்) நான் அதற்கு மேலே எதுவுமே பேசவில்லை. எந்த ஆட்சியில் கொலை நடைபெற்றது என்பதை மட்டும்தான் சொன்னேன். கொலை நடைபெற்ற இடம் எங்கே என்பதை மட்டும்தான் சொன்னேன். (குறுக்கீடுகள்) காலையில் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் எப்படி எல்லாம் சட்டம்-ஒழுங்குப் பற்றிப் பேசினார் என்பது இந்த அவைக்குத் தெரியும். நான் de-merit ஆக எதுவும் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் நான் வழக்குக்குள்ளே போகவில்லை, நான் மேலோட்டமாக விவரத்தை மட்டும்தான் சொன்னேன் என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, அதைப்பற்றி எல்லாம் அவர் ஒன்றும் சொல்லவில்லை.



(குறுக்கீடுகள்) நான் என்ன சொல்கிறேன் என்றால், ** தேவையில்லாமல் பேசுகிறார் அல்லவா? (குறுக்கீடுகள்) அது சம்பந்தமாகப் பேசியிருந்தால் நான் ஏற்றுக்கொண்டிருப்பேன். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய தலைவர் பேசுகிறார், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் அதே தீர்ப்பைத்தான் எங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நான் மீண்டும், மீண்டும் கேட்கிறேன். நாளையதினம் நிதியமைச்சருடைய பதிலுரையை இந்த அவையில் இருந்து கேட்க வேண்டுமென்று நாங்கள் ஆவலோடு இருக்கிறோம். எனவே, அதைப் புறக்கணிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டாம் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் எந்தவித உள்நோக்கத்தோடும் பேசவில்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். அதேபோலத்தான் எங்களுடைய துணைத் தலைவர் அவர்களும் எந்தவித உள்நோக்கத்துடனும் பேசவில்லை. ** சொல்லியிருக்கிறாரே தவிர, அதில் எந்தவிதக் களங்கமும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதில் மேற்கொண்டு பேசுவதற்குப் போனார். அதற்குள் நான் அவரை நிறுத்திவிட்டேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியது அவைக் குறிப்பில் இருந்தால், எங்கள் துணைத் தலைவர் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்க வேண்டும். அதை நீக்கினால், இதையும் நீக்குங்கள். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு)

பிற்பகல் 2-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் திரும்பத் திரும்பச் சொல்வது என்னவென்றால், நான் தெளிவாகக் கூறிவிட்டேன். நான் என்னுடைய தீர்ப்பை அப்பொழுதே தெளிவாகக் கூறிவிட்டேன். மேலெழுந்தவாரியாகத்தான் பேசினேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இப்பொழுது சொல்கிறார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குந்தகம் விளைவிக்கிறமாதிரி எந்தக் கருத்து இருந்தாலும் அதை நான் நீக்குகிறேன் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) அப்படியில்லை, (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பேரவைத் தலைவரை இப்படித்தான் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவது மிகவும் தவறு, தவறான வாதம் அது. அப்படி நிர்ப்பந்தப்படுத்தக்கூடாது. நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்ன கருத்தை ஏற்றுத்தான் நான் அந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறேன். அமைச்சர் சொன்னது நீதிமன்ற வழக்கிற்குக் குந்தகம் விளைவிப்பதாக இருந்தால், நிச்சயம் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நிச்சயம் நீக்குகிறேன் என்று சொன்னதற்குப் பின்னரும் என்னை நீங்கள், இப்படித்தான் நடக்க வேண்டும், இப்படித்தான் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துவது ஒரு சார்பாக இருக்கிறது என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அதற்கெல்லாம் இடமளிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருக்கு என்று சில அதிகாரங்கள் இருக்கின்றன. என்னுடைய அதிகாரத்தைத்தான், (குறுக்கீடுகள்) எனக்கிருக்கிற அதிகாரத்தைத்தான் நான் சொன்னேனேயொழிய, என்னுடைய வரம்பை மீறி வெளியிலே போய் எதையும் சொல்லவில்லை, என்னுடைய வரம்பிற்குட்பட்டுத்தான் நான் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

நான்தான் உங்களுக்கு உறுதி சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) துணைத் தலைவரைப் பேசச் சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியது குந்தகம் விளைவிக்குமாறு இருந்தால், கண்டிப்பாக அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்று மட்டும் சொல்லிவிடுகிறேன். My humble submission to the Chair. நீங்கள் என்ன செய்யலாம் என்று கேட்டீர்கள் என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது அவைக் குறிப்பில் வராது; நீக்கிவிடுகிறேன். துரைமுருகன் சொன்னதும் அவைக் குறிப்பிலே வராது; நீக்கிவிடுகிறேன் என்று சொல்லி விடுங்களேன். இதில் உலகமா இடிந்துப் போகப்போகிறது?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவரின் வேண்டுகோளை ஏற்றுதான் நான் தெளிவாகச் சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு உறுதிமொழியாகச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) வழக்கிற்குக் குந்தகம் விளைவிக்கிறமாதிரி இருந்தால், நிச்சயம் நீக்குகிறேன் என்று சொன்னதற்குப் பின்னரும் . . . (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** என்னுடைய பேச்சில் என்ன குந்தகம் வந்துவிட்டது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் . . . (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** ** என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் . . . (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நீங்கள் அமைச்சர் சொன்ன வழக்கிற்கு சம்பந்தமாகப் பேசியிருந்தால் நான் அனுமதி கொடுத்திருப்பேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** நான் எவ்வளவோ live ஆகப் பேரவையைக் கொண்டு செல்ல நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கைப் பற்றிச் சொல்லவில்லை. நீங்கள் வேறு ஏதோ பேச வருகிறீர்கள்.

**திரு. துரைமுருகன்:** என்னுடைய வரவு-செலவுத் திட்ட விவாதத்தை live ஆக கொண்டுச் செல்ல நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் அதை வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) வேண்டாம், உரையை முடியுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். பேசுங்கள், உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அதை நான் பார்க்கிறேன், பார்த்துவிட்டு, குந்தகம் விளைவிக்கிறமாதிரி இருந்தால், (குறுக்கீடுகள்) மீண்டும், மீண்டும் நான் சொல்கிறேன், குந்தகம் விளைவிக்கிறமாதிரி இருந்தால், நிச்சயம் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன் என்ற உறுதியைத் தெரிவித்திருக்கிறேன். அதனடிப்படையிலே நீங்கள் தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடுகள்)*

**முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவில்லை என்றால், நாளை பத்திரிகையில் வரும். இப்போது நீக்கினால்தான், நாளை பத்திரிகையில் வராது. (குறுக்கீடுகள்) இப்போது நீக்கினால்தான் பத்திரிகையில் வராது.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையில் நின்றுகொண்டு கோஷமிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இங்கே பாருங்கள், திரு. பொன்முடி. (குறுக்கீடுகள்)*

**முனைவர் க. பொன்முடி:** *நீங்கள் இப்போது நீக்கினால், நாளை பத்திரிகையில் வராது. நாளைக்கு நீக்கினால் பத்திரிகையில் வரும். அதனால்தான் இப்பொழுது நீக்குங்கள் என்று தயவு செய்து கேட்டுக்கொள்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதுவெல்லாம் முறையல்ல. திரு. பொன்முடி நீங்கள் செய்வது முறையல்ல. (குறுக்கீடு) திரு. பொன்முடி, சபையை எப்படி நடத்த வேண்டும், (குறுக்கீடுகள்) எப்படி நான் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று நீங்கள் சொல்லக் கூடாது.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் எதிர்க்கட்சியை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் சொல்வதைக் கேட்டு நான் நடக்க முடியாது. (குறுக்கீடுகள்) அவைக்கென்று விதிகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) அந்த விதிகளின் அடிப்படையிலே நான் அவையை நடத்திக்கொண்டிருக்கிறேன். உங்களுடைய* rights-*ஐ நீங்கள்* claim *பண்ணுங்கள். அதைப்பற்றி எனக்கொன்றும் இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நிதிநிலை அறிக்கைமீது பேசலாம், பேசுங்கள்.*



*பிற்பகல் 2-45*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லோரும் கண்ணியத்துக்குரியவர்கள். ஏதோ* school master *மாதிரி நீங்கள் எங்களை நடத்தக் கூடாது. நாங்கள் கௌரவத்துக்குரியவர்கள். மக்களிடம் ஓட்டு வாங்கி வந்தவர்கள். என்னவோ, நீங்கள் சொன்னால், ** அதற்கு நாங்கள் தயாராக இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்கள்மீது, தி.மு.க. உறுப்பினர்கள்மீது நான் மரியாதை வைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுகிற மாதிரி நான் கருதவில்லை. (குறுக்கீடுகள்) உங்களுக்குரிய மரியாதையைக் கொடுத்துதான் அவையிலே நீங்கள் பேசுவதற்கு அனுமதி அளித்துக் கொண்டிருக்கிறேன்.*

*அதுமட்டுமல்ல, இதைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, நான் வழக்கிற்குள் போகவில்லை, குந்தகம் விளைவிக்கும் வகையில் பேசவில்லை என்று தெளிவாகச் சொன்னதற்குப் பிறகும், (குறுக்கீடுகள்) அப்படி இருந்தால் நான் அதை நீக்குகிறேன் என்று உறுதி அளித்ததற்குப் பிறகும் நீங்கள் என்னை, (குறுக்கீடுகள்) இப்படித்தான் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) விதிகளின்படிதான், எனக்கு வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிற விதிகளின் அடிப்படையில்தான் நான் இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆகவே, நீங்கள் ஒத்துழைப்புக் கொடுங்கள். சபையை நடத்துவதற்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள்மீது நான் மரியாதை வைத்திருக்கிறேன். (குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஒத்துழைப்புத் தர தயாராக இருக்கிறோம்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் சபையை நடத்துவதற்கு, நீங்கள் முழு ஒத்துழைப்பைத் தரவேண்டும். (குறுக்கீடுகள்) அதாவது நான் சொன்ன தீர்ப்பு, அப்படியே reserve-ல்தான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதை நான் பார்த்துவிட்டு, (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) அது தீர்ப்புதான். சபாநாயகர் சொல்லுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் தீர்ப்புதான். (குறுக்கீடுகள்) அதுதான் விதி. (குறுக்கீடுகள்) அதுதான் முறை. (குறுக்கீடுகள்) அப்படித்தான் இங்கே நடந்துகொண்டிருக்கின்றது. அதில் மாற்றுக் கருத்து இல்லை. உங்களுக்குப் பேசுவதற்கு இவ்வளவு வாய்ப்புக் கொடுத்தும், நீங்கள் இப்படிச் செய்வது நியாயமா? (குறுக்கீடுகள்) இது நியாயமா? (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டனர்.)*

இது நியாயமா? (குறுக்கீடுகள்) இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இவ்வளவு நேரம், இந்த அவையை நடத்தவிடாமல் நீங்கள் செய்கிற முயற்சிகள் எல்லாம், (குறுக்கீடுகள்) மிகவும் தவறு. (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும், உங்கள் இடத்தைவிட்டு, (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியோருக்கு நான் பேசுவதற்கு வாய்ப்புகளை முழுமையாகக் கொடுத்தேன். அதைக் கேட்டுதான் நான் என்னுடைய முடிவினைச் சொல்லியிருக்கிறேன். நான் ஏற்கெனவே சொன்ன முடிவை, நீங்கள் என்னை வற்புறுத்தி மாற்ற முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக இருந்து இந்தச் சபையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

ஒரு நிமிடம் எல்லோரும் அமைதியாக இருங்கள். ஏறக்குறைய, (குறுக்கீடுகள்) ** என்ன? (குறுக்கீடுகள்) இதுபோன்று எல்லாம்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



செய்யக் கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, நான் இந்த இடத்தில் இருப்பதினால் நான் அமைதியாக நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதனால்தான் நான் அமைதி காக்கிறேன். (குறுக்கீடுகள்) என்னை எவ்வளவு அவமானப்படுத்தினாலும் சபையை நடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமாக இருக்கிறது. நீங்கள், திட்டமிட்டு வேண்டுமென்றே உங்களுக்குச் சாதகமாக நடக்க வேண்டுமென்பதற்காக என்னை நிர்ப்பந்தப்படுத்துகிறீர்கள். (குறுக்கீடுகள்) அப்படி நிர்ப்பந்தப்படுத்துவதற்கு, (குறுக்கீடுகள்) இல்லை, அப்படி நிர்ப்பந்தப்படுத்துவதற்கு, (குறுக்கீடுகள்) இல்லை, நான் பேசுகிறபோதுகூட இந்த இடத்தில் என்ன சொல்கிறேன் தெரியுமா? இந்த இடத்தில் நான் இருப்பதால்தான் நீங்கள் சொல்கிற, நீங்கள் ஏற்படுத்துகிற அத்தனையையும் பொறுத்துக் கொண்டு நிற்கிறேன் என்று சொன்னேனேயொழிய வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) ஆகவே, நீங்கள் அவையை நடத்த ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடுகள்) இந்த அவையை நீங்களெல்லாம் வகுத்துக் கொடுத்த விதிமுறைகளின்படிதான், நான் நடத்திக் கொண்டிருக்கின்றேன். ஏற்கெனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கு, என்னுடைய தீர்ப்பை பலமுறை சொல்லிவிட்டேன். இப்போதும் சொல்கின்றேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியது, வழக்குக்குக் குந்தகம் விளைவிக்கும் என்றால், நிச்சயமாக அதை நான் நீக்குகிறேன். தற்போது நீங்கள் அவையை நடத்த ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுவதாக இருந்தால், பேசலாம். (குறுக்கீடு)

*பிற்பகல் 2-50*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையை நடத்துவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்று பலமுறை நானும் சொல்லியிருக்கிறேன்; எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திட்டமிட்டு, வேண்டுமென்றே இதுபோன்று நடந்துகொள்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

** நான் சொன்ன வார்த்தைகளை நானே அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* மீண்டும் உங்களுக்கு ஒரு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிறீர்களா, இல்லையா? *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிறீர்களா, இல்லையா? *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுவதாக இருந்தால், பேசலாம். *(குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு பேசியது, நாளை பத்திரிகைகளில் வராது என்று கருதுகிறீர்களா? நீங்கள் சொன்னால்தான், அவர்கள் பத்திரிகைகளில் போடமாட்டார்கள். இல்லையெனில், அவர்கள் ஜோடித்து போட்டுவிடுவார்கள். எனவே, "மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பேச்சு இந்த அவையில் நான் சொல்லுகின்ற வரையில் ஒத்திவைக்கப்படும்" என்று சொல்லுங்கள். இது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் நடவடிக்கைக் குறிப்புகளை பார்த்துவிட்டு, சொல்கிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? *(குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** நடவடிக்கைக் குறிப்புகளை பார்த்துவிட்டு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு, இரண்டு நாள் கழித்து பார்ப்பீர்கள். இது ரொம்ப தவறு, சார். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* தற்போது நேரம் 2-52 ஆகிறது. நீங்கள் பேசுவதாக இருந்தால், பேசலாம் என்று நான் பலமுறை சொல்லிவிட்டேன். உங்களுக்கு நான் பேச வாய்ப்புத் தருகிறேன், பேசுங்கள். நான் கூறிய அந்தத் தீர்ப்பின்படி, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறேன். வழக்குக்குக் குந்தகம் விளைவித்தால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தலைவர், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இயக்கத்தின் சார்பில், எங்களுடைய தலைவரின் அனுமதியோடு நான் ஒரு பணிவான வேண்டுகோளை வைக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை, நீங்கள் நீக்கும் வரையில் அடியேன் பேசமாட்டேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, நான் நாளை நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்து, மீண்டும் ஒருமுறை தீர்ப்பு சொல்லுகிற வரை பத்திரிகைகளில் வெளியிட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். தற்போது, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின்மீது பேசலாம்.

*பிற்பகல் 2-55*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் நிதியமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பொதுவாக அரசு அலுவலர்களைப் பற்றிப் பேசுவது இல்லை. *(குறுக்கீடு)* நீங்கள் நீண்ட அனுபவம் உள்ளவர். அலுவலர்களைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுவது முறையல்ல. அதைப் பற்றிப் பேசவேண்டாம்.

**திரு. துரைமுருகன்:** சரி, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ** சொன்னார். நீங்கள் உங்களுடைய கருத்தை ஒரே வார்த்தையில் மட்டும் சொல்லுங்கள். அதன் உள்ளே சென்று அப்படி, இப்படி என்று சொல்வது நல்ல நடைமுறை கிடையாது. குழப்பத்தை உண்டாக்க வேண்டாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பொதுவாகவே அரசு அலுவலர்களைப் பற்றிக் குறிப்பிடுவது என்பது சரியாக இருக்காது. அப்படிச் சொல்லாதீர்கள். அதை விட்டுவிடுங்கள். வேறு subject பற்றிப் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** இப்படி நடந்தது என்று சொன்னேன். சரி. ஆகையினால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஏதோ உள்நோக்கத்தோடு சொல்லப்படுகிற கருத்தாகத்தான் இப்பொழுது சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. ** நாங்களும் பேசினால் நீண்ட விவாதம்தான் நடைபெறும். அதனால், தயவுசெய்து நீங்கள் அதைத் தவிர்க்க வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம். நீங்கள் எதற்கு அதைப் பற்றிப் பேசுகிறீர்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அது தேவையில்லாத கருத்து. ** ஆகவே, தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, (குறுக்கீடு) பொதுவாக அரசு அலுவலர்களைப் பற்றிப் பேசக்கூடாது என்பது நாம் கடைப்பிடிக்கிற மரபு. அந்த மரபுபடி நீங்கள் பேச வேண்டாம். நீங்கள் ஏன் ** என்றெல்லாம் பேசுகிறீர்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடலாம், விடுங்கள். தேவையில்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேண்டாம் விட்டு விடுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ** வேறு ஏதாவது subject-க்குச் செல்லுங்கள். நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அது வேண்டாம் விட்டு விடுங்கள். வேறு subject பற்றிப் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் கேட்கிற கேள்வி இதுதான். **

பிற்பகல் 3-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ** உங்கள் முதுகில் அழுக்கை வைத்துக் கொண்டு, அடுத்தவர்களைப்பற்றி விமர்சனம் செய்யாதீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அதுபற்றிப் பேச வேண்டாம். அரசு அலுவலர்களைப் பற்றிப் பேச வேண்டாம், விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இதில் தவறு என்ன இருக்கிறது? இதைச் சொன்னால், முடியாதென்றால், என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் அரசு அலுவலர்களைப் பற்றி பேசாதீர்கள்.

**திரு. துரைமுருகன்:** அடுத்த முக்கியமான point.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், நிதிநிலை அறிக்கையின்மீது பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அடுத்து நிதிநிலை அறிக்கையில் பேசுகிறேன். நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். பழைய ஓய்வூதியம் கொடுப்பது தொடர்பாக முதலில் ஒரு கமிட்டி போட்டீர்கள். அந்தக் கமிட்டியில் மூன்று பேர் நியமிக்கப்பட்டு, அதில் இரண்டு பேர் போய்விட்டனர். (குறுக்கீடு) இப்போது புதிதாகப் போட்டிருக்கிறீர்களா? மாண்புமிகு நிதியமைச்சர், நேற்று நீங்கள் சொன்னீர்கள். மறுபடியும் அதை நான் confirm செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே இதற்கு நீண்ட விளக்கம் சொன்னேன். இரண்டு பேர் பணி செய்ய முடியாத காரணத்தினால், புதிதாக இரண்டு பேர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் கருத்துகளை ஆய்வு செய்து, அரசுக்கு report-களை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். அதையும் அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்றுதான் நேற்றே சொன்னேன். அதை மறுபடியும் சொல்ல வேண்டுமென்றால் சொல்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** சரி. எது எப்படியோ, நீங்கள்,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்ற குறளைச் சொல்லியிருந்தீர்கள். ஆனால், இவர்களுக்கும் நான் ஒரு குறள் சொல்கிறேன்,

"அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தான்என்று ஏவற்பாற் றன்று"

என்று ஒரு குறள். இதற்கு பொருள் என்னவென்றால், ஆராய்ந்து அறிந்து செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவர்களை அல்லாமல் வேறொருவரை சிறந்தவன் எனக் கருதி செயலில் ஈடுபடுத்தக் கூடாது. அதே மாதிரிதான், இந்தக் குறளிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களும் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ஆராய்ந்து பார்த்துதான் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** 234 தொகுதிகளில் போட்டியிட்டு, எங்களோடு straight ஆகப் போட்டியிட்டு, மூன்று இடத்தில் டெபாசிட் போய்விட்டது. அதை ஏன் சொல்கிறீர்கள்? அது வேறு விஷயம். எனவே, பொதுவாக, எங்கள் ஊரில் சொல்வார்கள், 'ஏட்டுச் சுரைக்காய் கூட்டுக்கு உதவாது' என்று.



எனவே, இந்த நிதிநிலை அறிக்கை, ஓர் ஏட்டுச் சுரைக்காய், நாட்டுக்கு உதவாது. நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-7-2016) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

22. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முப்பத்தெட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)] (தமிழ், ஆங்கிலம்)

23. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)] (தமிழ், ஆங்கிலம்)

24. 2014-2015 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-